சரசுவதி மகால் வெளியீடு எண். 315

கவீந்திர பரமானந்தர் இயற்றிய

# சிவபாரத சரித்திரம்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1990

விலை ரூ. 16-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 315

கவீந்திர பரமானந்தர் இயற்றிய

# சிவபாரத சரித்திரம்

பதிப்பாசிரியர் :

**எஸ். சீராளன்,** பி.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,

நூலகர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*

*

இயக்குநர்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல்நிலையம்**

தஞ்சாவூர்.

*

கி. பி. 1990]                [விலை ரூ. 16—00

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | ... | SivavaBharata Charitram |
| Editor | ... | M. SEERALAN, B.A., M.L.I.S., |
| Publisher | ... | M. Sadasivam, Director, Sarasvati Mahal Library |
| Publication No. | ... | 315 |
| Language | ... | Tamil |
| Edition | ... | II Edition |
| Date of Publication | ... | March, 1991 |
| Paper used | ... | 14·2 Kg. Seshasayee |
| Size of the Book | ... | 21 × 14 cm. |
| Printing Type used | ... | 12 pt. |
| Number of pages | ... | 132 |
| No. of copies | ... | 1000 |
| Price | ... | Rs. 16/- (Rupees Sixteen only) |
| Printer | ... | Sarasvati Mahal Library Press |
| Binding | ... | Card Board |
| Subject | ... | History |

# இரண்டாம் பதிப்புரை

சிவபாரத சரித்திரமென்னும் இந்நூலை வடமொழியில் வீர சிவாஜியின் அரசவைக் கவிஞராகிய கவீந்திர பரமானந்தர் இயற்றினார். இந்நூல் 32 அத்தியாயங்களை மட்டும் கொண்டுள்ளது. கடைசி அத்தியாயம் மிகவும் சுருக்கமாக உள்ளது. இதன் தமிழாக்கம் தஞ்சை சரசுவதி மகால் சுவடியில் உள்ளபடி 1972ஆம் ஆண்டு நூலகப் பருவ இதழ் வாயிலாக வெளிவந்தது. இதன் மறுபதிப்பு தற்பொழுது வெளிவருகிறது. 1987ஆம் ஆண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு என்ற நூலைப் பதிப்பித்துள்ளார்கள். அந்நூலில் சிவபாரத சரித்திரச் செய்திகள் பல இடங்களில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டதோடு நூலாசிரியர் பற்றிய செய்திகளும், நூல் பற்றிய விபரமும் கூறப்பட்டுள்ளது. அச்செய்திகள் ஆய்வாளர்களுக்கு உதவியாய் இருக்குமெனக் கருதி இங்கே கொடுத்துள்ளேன்.

இக்குறைப் பகுதியாக உள்ள சிவபாரதம் கிடைத்ததற்குச் சில ஆண்டுகட்குப் பின்னர் கவீந்திரர் நூல்போன்று ஒருநூல் கோலாப்பூர் ராஜோபாத்யாயரது குடும்பத்தாரிடமிருந்து கிடைத்தது. ஆனால் அது சம்போஜியின் வரலாறு கூறுவதாக இருந்தது. அடுத்து பரோடா கீழ்த்திசை நூலகத்தில் 1940ல் 215 பக்கங்கள் கொண்ட உதிரி ஏடுகள் கிடைத்தன. இவற்றுள் 78 பக்கங்கள் வரிசையாக அமைந்த 13 அத்தியாயங்களும் 872 பாடல்களும் உடைய பகுதி சிவாஜியைப்பற்றி பரமானந்தர் எழுதியதாகக் காணப்பட்டது. எஞ்சிய பகுதியில் 137 பக்கங்கள் கவீந்திரருடைய

பெயரர் இரண்டாம் கோவிந்தர் எழுதியவையாகவும், தொடர்பற்றவையாகவும், பல பக்கங்கள் இல்லாமலும் காணப்பட்டன. இவற்றை ஜி. என், சர்தேசாய் அவர்கள் கெய்க்வாட் கீழ்த்திசை வரிசையில் 'பரமானந்த காவியம்' என்ற பெயரில் அச்சிட்டுள்ளார்.

இச்சுவடியிலிருந்து இப்புலவர் குடும்பத்தைப் பற்றிய சில தகவல்கள் தெரிய வருகின்றன. இப்புலவர் குடும்பம் அஹமத்நகர் வடக்கு மாவட்டத்தில் நெவாசா (Nevasa) என்ற ஊரில் இருந்தது; அங்கு கோவிந்தபட்டர் என்றொரு பிராமணர் இருந்தார். அவருக்கு 'அனந்த்' என்ற ஒரு மகன்; இவ்வநந்தருக்குச் சிவாஜி "கவீந்திர கவீஸ்வர்" என்ற பட்டம் அளித்தார். பின்னர்ப் பரமானந்தர் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்; இவருக்கு ஸ்ரீதர், தேவதத்தர் என்று இரு மக்கள்; தேவதத்தருக்கு ஒரு மகன்; இரண்டாம் கோவிந்தர் என்று பெயர். இம்மூன்று தலைமுறையினரும் கவீந்திரர் என்ற பட்டம் பூண்டனர். இக்குடும்பத்தினருக்கு இரண்டு ஊர்கள் வழங்கப்பட்டிருந்தன என்பனவாம். கி. பி. 1666இல் சிவாஜி அவுரங்கசீபைப் பார்க்க ஆக்ராவுக்குச் சென்றபொழுது பரமானந்தரும் சிவாஜியுடன் சென்றிருந்தார். சிவாஜி ஆக்ரா சிறையினின்று தப்பி வந்தபொழுது பரமானந்தர் ஜெய்பூரில் கைது செய்யப்பட்டார். சிவாஜி தப்பியதற்கும் பரமானந்தருக்கும் தொடர்பின்மையறிந்த பாதுஷா, கவிஞரைச் சிறையினின்று விடுதலை செய்தார். பின்னர் இவர் வாரணாசியில் சிலகாலம் தங்கியிருந்தார், பிறகு 1670ல் மகாராட்டிரத்துக்கு வந்தார். கி. பி. 1673 மார்ச்சுத் திங்களில் பொலத்பூரில் இருந்தபொழுது சிவாஜி இவரைக் கண்டுள்ளார்.

கி. பி. 1674 ஜூன் திங்களில் சிவாஜியின் பட்டாபிஷேகத்துக்குப் பின்னரே சிவாஜியின் வரலாற்றை 100 அத்தியாயங்கள் கொண்ட நூலாக எழுதுமாறு பணிக்கப்பட்டார். சிவாஜி இறந்தபொழுது 32 அத்தியாயங்கள் வரையிலுமே எழுதப்பட்டிருந்தன. இந்நூலுக்குக் கவீந்திரர்

இட்டபெயர் சூரிய வம்சம் என்பதாகும். இது ஒரு அனு புராணம் (தற்காலப்புராணம்) ஆகும்.

சம்பாஜி சிவாஜியைப் பிரிந்த காலம் முதற்கொண்டு சிவாஜி இறக்கும் வரையிலான வரலாறு 13 அத்தியாயங்களில் உள்ளது. எனவே 1661 முதல் 1676 வரையிலான செய்திகள் எழுதப்பெறவில்லையென்றும், இறுதி 13 அத்தியாயங்கள் சிவாஜி இறந்தபட்ட பின்னரே எழுதப்பட்டனவாதல் வேண்டுமென்றும், எஞ்சிய 137 பக்கங்கள் கவீசுவரருடைய மகன் கோவிந்தர் II சம்பாஜியைப்பற்றி எழுதியனவாகும் என்றும் அறியலாம்.

சிவபாரதம் பற்றி வரலாற்றுப் பேரறிஞர்கள் தத்தம் நூல்களில் பின்வருமாறு கூறியுள்ளனர்.

திரு. சி. கே. சீனிவாசன்— 'Maratha rule in the Carnatic' "Among the Sanskrit works Shiva Bharat by the poet Paramanantha is the most authentic and accurate one and it gives a very good picture of Shahji's life in the Carnatic and describes his conquests in these parts. Although the work is incomplete its historical frame work is found to be remarkably accurate confirmed as it is, at places, by contemporary records Maratha or English." Little confusion is noticed in the arrangements of facts and on the whole the work may be said to embody a good account of Shahji and Shivaji.

திரு. ஜாதுநாத் சர்கார் — 'House of Shivaji' Shivaji's Court Poet Paramanand (to whom he gave the title of Kavindra or Jupiter among poets) wrote a Sanskrit epic on the Bhonsle Royal house. This epic (dubbed by its modern editor with the title of Shiva Bharat) is merely a laudatary poem

written by a Brahman flatterer to extol his patron's family to the seventh heaven. The very training, mode of life and literary model of these Brahman poets made them unfit to be sober recorder of facts ...... the Hindu Court sycophant ascribes super natural feets to his hero!"

திரு. கே. ஆர். சுப்ரமணியம்— 'Maratha Rajahs of Tanjore. 'Sivabharata a Sanskrit manuscript dealing with the ancestry and achievements of the great Shivaji and his fore fathers is considered an important contribution to the Biographical Literature of the hero. There is also a Tamil version of Sivabharata probably from this reign (Sarabhoji I) called Shivaji Charitram.

இத்தகு சிறப்புமிக்க இந்நூலை அறிஞர் பெருமக்கள் முன் வைப்பதில் பெருமையடைகிறோம். அத்துடன் எதிர் பாராத சில சூழலில் அச்சுப்பதிப்பில் பல பிழைகள் ஏற்பட்டு விட்டன. அவற்றை திருத்தம் செய்து நூலின் இறுதியில் பிழைதிருத்தம் கொடுத்துள்ளோம். அறிஞர் பெருமக்கள் குணம் நாடி குற்றங்களைந்து பயனுற வேண்டுகிறோம். இப்பதிப்பு வெளிவர அனுமதி வழங்கிய நூலக இயக்குநர் பேராசிரியர் மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்., அவர்கட்கு என் உள்ளம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

தஞ்சாவூர்,

3—1—91.

**ம. சீராளன்,**

# PREFACE

The present publication is a rendering in popular and often colloquial Tamil prose, of Sivabharata Charitram. the story of the famous Shivaji the Great, founder of the Maratha dynasty. The author of the original work himself gives reasons for calling it Sivabharata Charitram, though it is the story of a single hero. The historical accoutns of Shivaji are as vast as Mahabharata itself. Further he holds that a study of the stories will expel the sins of the readers as Mahabharata does. The author attributes the origin of this work to the divine inspiration and grace got from the Goddess Ekavira devi. In those days parts of Bharatakhandam was experiencing a critical situation by the attack of Muslim rulers. At that stage Shivaji the Great, arrested their advance, won victories over them and established the Maratha Empire.

The author at the outset has enumerated the important points expounded in this Sivabharata Charitram : like the glories of Sambo Mahadeva, the supremacy of Tulaja Devi, the description of the four eternal and everlasting values known as Dharma, Artha, Kama and Moksha. details about holy places, accounts of the wars with the Muslims, the cicumstances leading to the birth of Shivaji for supressing the Muslim marauders, characteristics of horses and elephants, details

about forts and forces, rules of conduct for Kings and the stories about the Kings of the Solar dynasty.

The name of the author of the original Sanskrit work is Paramananda Kavindra. He is also mentioned as Paramananda Sarma. This Brahmin poet, son of Govinda Bhattar, lived in Kasi for many years and it was during his stay here that he happened to write this work.

In the Tamil section of this Library there is a single manuscript of this work (D. 630 / M. 214). In several places the detailed description in the original are omitted while the narrative portion follows the original Sanskrit version closely. No mention has been made in the colophon, about the person who copied the original manuscripts or the year in which the copy was made, as is usually found in many manuscripts. In the Sanskrit section of this Library there are four manuscripts (D. No. 4223-4226) of the original Sivabharatam in Sanskrit. The Bharat Samsodhak Mahamandal Poona, has published in 1927, for the first time this work with a commentary and elaborate introduction in Marathi. In 1930, the Sanskrit original only was published in the Anandashrama Sanskrit Series, Poona. It is the unique privilege of the Sarasvati Mahal Library to preserve the manuscripts of both the Sanskrit original and Tamil translation of this work. It is understood that the Tamil translation of Sivabharatam was written during the reign of King Serfoji—I (A. D. 1712-28).

The original Sanskrit poem is composed in a grand and classical style, whereas the Tamil version is in very simple and colloquial language. In the Tamil manuscript, there is no division into chapters beyond the second and no division into paragraphs at all. But to facilitate the understading of the readers, this publication is divided into 32 chapters, pased on the division made in the Sanskrit original. The division into paragraphs is based on the sequence of ideas.

Regarding the Linguistic point of view, the Tamil narrative is given exactly as it is found in the manuscript without altering anything except scriptorial errors, as it will be useful for scholars of Linguistics who work on the evolution of Tamil language in those countries. In some places, the necessary Tamil meanings are given in the footnotes. The words which are probable in the blanks in the manuscript caused by insects are suggested within brackets.

It is my duty to express my gratitude to the Honorary Secretary, Thiru N. Kandaswamy Pillai for his permission to publish this work and to the Librarian, Thiru V. Gopala Iyengar, M. A., for the help rendered by him in the comparison of the work with the Sanskrit original. I am also thankful to Thiru T. R. Bhima Rao, Marathi Pandit far his assistance in making out the Marathi translation in the printed edition.

I consider the editing of this small historical piece in Tamil as a special privilege extended to me. I hope that this small publication will evoke a good response among scholars so that a detailed and critical edition of this work in book form may be possible soon.

Thanjavur
8—6—1972

M. SEERALAN,
Assistant Librarian,
T. M. S. S. M Library.

# முன்னுரை

*

"சிவபாரத சரித்திரம்" என்றவுடன் நம் யாவருக்கும் நினைவில் நிற்பது சிவனைப்பற்றிய கதைத் தொகுப்பே. ஆனால் அவ்விதமில்லாமல் இந்நூலின் தலைப்பு சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது. இத் தலைப்பு சிவாஜி, பாரதம், சரித்திரம் என்ற மூன்று சொற்களைக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளது. சிவாஜி என்ற சொல்லின் சுருக்கம் சிவ என்பது. மராத்திப சாம்ராஜ்யத்தை நிறுவிப் புகழ்கொண்ட ஆதி சிவாஜியின் சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுவது இந்நூல். இதற்கு ஏன் பாரத சரித்திரம் என்று பெயரிடநேர்ந்தது என்பதற்கு நூலாசிரியர், சிவாஜியின் வரலாறு நிகழ்ச்சிகள் பாரதக் கதை போல் பரந்துபட்டுள்ளன. என்றும், அவை அந்த இதிகாச நூலைப்போல் பாவத்தைப் போக்கும் தன்மைவாய்ந்தன என்றும் கூறுகிறார். மேலும் இந்தச் சரித்திரம் ஏகவீரா தேவி மகிமையால் விளைந்ததாகவும் கூறி இந்நூலுக்குத் தெய்வீகத்தன்மை யூட்டுகிறார். வரலாற்று நிலையில் 'பாரதம்' என்ற பெயரில் ஒரு நாடு இல்லாமல் அழிந்து படுமோ என்று அஞ்சி, பாரதம் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் அந்நிய ஆதிக்கத்தை அடக்கி ஒடுக்கிப் புதிய சாம்ராஜ்யம் படைத்துப் பெருமைகொண்ட ஒருவரின் சரித்திர நூலாகையால் பாரதம் என்று பெயர்கொண்டது போலும்.

இந்நூலின்கண் விரித்துரைக்கப்பெற்றுள்ள செய்திகள் பல அவற்றின் தொகுப் பொன்றை ஆசிரியர் தந்துள்ளார். சம்போமகாதேவருடைய மகிமையும், துளஜா தேவி அம்மனுடைய மகிமையும், தர்மார்த்தகாம மோக்ஷங்களுடைய மகிமையும். தீர்த்தங்களுடைய மகிமையும், துலுக்கர்களோடு யுத்தம் பண்ணினதும், அந்தத் துலுக்

கரை நாசம் பண்ணுவதற்கு இவர் ஜென்மமெடுத்ததும், பல ராஜாக்களுடைய சரித்திரங்களும், யானை குதிரைகளுடைய இலட்சணங்களும், கோட்டை கொத்தளங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதிமுறைகளும், சூரியவம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் பரமானந்தர் என்றும் அழைக்கப்படுகிறார். பிராமண குலத்துதித்த இவர் பரமானந்த கவீந்திரர் என்றும் பரமானந்த சர்மா என்றும் குறிக்கப் பட்டுள்ளார். இவருடைய தந்தையார் பெயர் கோவிந்த பட்டர். இவர் தீர்த்த யாத்திரைக்குக் காசிக்கு வந்து வெகு காலம் அங்கு தங்கியிருக்கையில் இந்நூல் வடமொழியில் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மகாலின் தமிழ்ச் சுவடிகளின் பிரிவில் D 630/M 214 என்ற எண்ணுள்ள இந்த ஒரே பிரதிமட்டும் உள்ளது. இந்நூலில் பிராமணர்களுக்கிடையே வழங்கி வரும் மொழி வழக்கு அப்படியே கையாளப்பட்டுள்ளது. வடமொழி மூலத்தை மொழிபெயர்த்துள்ள ஆசிரியர் சிற்சில இடங் களில் சுருக்கமான விவரங்களை மட்டுமே தமிழில் தந்துள்ளார். மேலும் சுவடிகளின் ஈற்றில் வழக்கமாகக் காணப்படும்படியெடுத்தவர் விபரமோ, காலக் குறிப்புகளோ, இதர விபரங்களோ ஏதும் காணப்படவில்லை. நூலகத்தின் வடமொழிப் பிரிவில் இப்பெயருடைய நான்கு சுவடிகள் (D Nos. 4223 - 4226) உள்ளன. இவற்றை ஆராய்ந்து 1927ஆம் ஆண்டில் புனாவிலுள்ள பாரத இதிகாச சம்சோதக் மண்டல ஆய்வுக் கூடத்தினர் வடமொழி மூலமும், மராத்தி உரையும் கண்டு வெளி யிட்டுள்ளனர். 1930 ஆம் ஆண்டில் புனா ஆனந்தாசரம் அச்சகத்தார்கள் 'சிவபாரதம்' என்ற தலைப்பில் வடமொழி மூலம் மட்டும் கொண்ட ஒரு நூலை வெளியிட்டுள்ளனர். இருப்பினும் வடமொழிச் சுவடியும், தமிழ்மொழி பெயர்ப்புச் சுவடியும் நம் நூலகத்தில் மட்டுமே உள்ளன.

இது மிகவும் போற்றுதற்குரிய செய்தியாகும். தஞ்சையில் ஆட்சிபுரிந்த முதலாம் சரபோஜி காலத்தில் (கி. பி. 1712–1728) இத்தமிழாக்கம் இயற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆதலின் முதன் முறையாக இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தால் வெளியிடப்படுவது சாலவும் பொருத்தமுடையதாகும்.

அடுத்து மொழி நடைபற்றியும், பிற விபரங்கள் பற்றியும் கூறவேண்டுவது இன்றியமையாததாகிறது. சுவடி பிழை மலிந்து காணப்படுகிறது. மொழிநடை மிகவும் சாதாரணம். உரையாடல் பாங்கில் அமைந்த இந்நூல் தொடர்ந்த நெடும் வாக்கியங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. ஆகையால் சில இடங்களில் பத்திபிரித்தல் சிரமமாக இருந்தது. இந்நூல் 32 அத்தியாயங்களைக் கொண்டது. கடைசி அத்தியாயம் மிகவும் சுருக்கமாக உள்ளது, அத்தியாயத் தலைப்பு இரண்டாம் அத்தியாயம் வரைதான் தமிழ்ச் சுவடியில் கொடுக்கப்பட்டுள்ளது. உரை நடை வகையிலுள்ள இந்நூலைப் படிப்பவர் தளர்ச்சியுறாவண்ணம், அத்தியாயம் பிரித்துத் தருவது உதவியாயிருக்குமெனக் கருதி வடமொழி மூலத்தை ஒப்பு நோக்கி அத்தியாயம் பிரித்துள்ளேன். புத்தகத்தின் மொழி நடையை மாற்றாமல், வருங்கால மொழி நூல் ஆய்வாளருக்கு உதவும் வகையில் அப்படியே பதித்துள்ளேன். வடமொழிச் சுலோகங்கள் வில்லிபாரதத்தையொத்த அளவில் எடுப்பாக உயரிய நடையிலும் மிகவும் சுவையுடனும் அமைக்கப் பெற்றுள்ளன. ஆனால் தமிழில் அனைத்துச் சுவையையும் உரை நடையில் காட்டமுடியவில்லை. சிற்சில இடங்களில் சுருங்கிய அளவில் வருணனைகளும் செய்திகளும் விபரங்களும் தரப்பெற்றுள்ளன. ஆங்காங்கே தேவையான சொற்களுக்குப் பொருள் விளக்கமும் சுவடியில் பூச்சியரித்த இடங்களில் இருக்க வேண்டிய சொற்களை அடைப்புக் குறியிலும் தந்துள்ளேன்

இந்நூல் வெளிவர அனுமதி வழங்கி ஆதரவு காட்டிய தமிழ் முதறிஞர் கௌரவக் காரியதரிசி, உயர்திரு

நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கட்கும் வடமொழிச் சொற்களில் எனக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை அவ்வப்போது அகற்றியும், ஊக்கமுட்டியும் உறுதுணையாயிருந்தும் வந்த நூலகர், திரு. வே. கோபால அய்யங்கார். M. A., அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி என்றும் உரித்தாகும். மேலும் இந்நூலின் சிற்சில இடங்களை மராத்தி மொழி பெயர்ப்பு அச்சு நூலோடு ஒப்பு நோக்க உதவிய மராத்திப் பண்டிதர், திரு. T. R. பீமராவ் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

மேலும், இவ்வரிய வரலாறுச் சிறு நூல் ஒன்றைப் பதிப்பித்துத் தமிழன்னைக்கு அணிவிக்கும் பேறு கிட்டியமைக்குப் பெருமிதம் கொள்கிறேன். வாசக அன்பர்கள் தக்க உற்சாக மூட்டுவார்களேயானால் இந்நூல் ஒரு விரிவான ஆராய்ச்சி நூலாக வெளிவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. குணம் நாடிக் குற்றங்களைந்து யாவரும் பயன் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்,

28—5—1972

**ம. சீராளன்,**
துணை நூலகர்,
சரசுவதி மகால் நூலகம்,

# [1]சிவபாரத சரித்திரம்

## முதலாவது அத்தியாயம்

ஸ்ரீ விக்னேசுவரருக்கும் ஸ்ரீ சரஸ்வதி அம்மனுக்கும் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி இந்தச் சிவபாரதச் சரித்திரம் சொல்லுகிறோம்.

பூர்வத்திலே பரமானந்த சர்மா என்றொரு பிராமணோத்தமன் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுக் காசிக்கு வந்தார். சகல ஜீவராசிகளுக்கும் மோட்சத்தைக் கொடுக்கிற மகா க்ஷேத்திரமான ஸ்ரீ விசுவேசுவரர் தாரக பிரம்ம உபதேசம் பண்ணுகிற அந்த க்ஷேத்திரத்திலே அந்தப் பிராமணன் ஸ்நானவிதிகள் பண்ணிக்கொண்டு ஸ்ரீ விசுவேசுவரர் தரிசனம் செய்துவந்தார், அந்தக் கங்கா நதிக் கரையிலே சகல தர்மங்களும் தெரிந்த அவர் பத்மாசனம் போட்டுக் கொண்டு தேஜஸ்பியமானமாய் பிரம்ம வர்ச்சஸத்தோடு சகல சாஸ்திரம் தெரிந்தவர். பிரம்ம விசாரணை பண்ணிக்கொண்டு புராணிகருக்குள்ளே சிரேஷ்டனாய் இருக்கப்பட்ட கோவிந்த பட்டருடைய புத்திரர்பரமானந்த சர்மா. அவருக்கு ஏகவீராதேவி பிரசாதத்தினாலே சரஸ்வதி பிரசன்னமானாள்.

அவருக்குப் பரமானந்தர் என்றும் கவீந்திரர் என்றும் பெயர். அப்படிப் பட்டவரைக் காசியிலே இருக்கும் பெரிய பிராமணர் பார்த்து வெகு சந்தோஷப் பட்டார். அப்படிப்

---

1. T. M. S. S. M, Library, Tamil Manuscaipt No. D. 630/M,24 பரமானந்தர் என்னும் கவீந்திரர் வடமொழியில் இயற்றிய சிவபாரதத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுதப்பட்ட சரித்திரம்

பட்ட பிராமணரை இந்தப் பரமானந்தர் வெகு உபசாரம் பண்ணினார். அந்தப் பிராமணர் கவீந்திரருடைய சமீபத்திலே உட்கார்ந்து கொண்டு மகா பரிசுத்தமாயிருக்கிற சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் கேட்க வேணுமென்று யோசனை பண்ணிக்கொண்டு ஓய் பரமானந்தரே! இந்தப் பூமியைப் பரிபாலனம் செய்கிற சகல ராசாக்களிலே சிரேஷ்டனாய் இருக்கப்பட்ட எவருக்கு துளஜா பவானி பிரசாதத்தினாலே ராஜ்யம் வந்தது? அவர் மாகாதபசி, மஹா விஷ்ணுவினுடைய அம்சம், பிரதாப வந்தன், மகா தேசோராசியாயிருக்கப்பட்டவர், சகலதிக்குப்பாலகருடைய காந்திக்குச் சமானமாயிருக்கப் பட்டவர். ஜிதேந்திரியர், சத்துருக்களுக்குப் பயங்கரனாய்த் தோன்றுபவர். தனுர் தாரிகளுக்குள்ளே சிரேஷ்டர், புத்திமனத்தர், மகா பராக்கிரமம் உடைத்தவர், சத்திய வாக்குத் துரந்தர், பெரியவர்களுடைய வசனம் கேட்கிறவர், பிராமணரை இரட்சிக்கிறவர், துஷ்டனாயிருக்கப்பட்ட துலுக்கருக்குச் சிக்ஷை பண்ணுகிறவராய்ப் பிரசன்னமாயிருக்கப்பட்ட ஜனங்களுக்குச் சுகத்தைக் கொடுக்கிறவராயிருக்கப் பட்ட சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் அம்மனுடைய பிரசாதத்தினாலே சொல்லவேண்டும். அப்படிப் பண்ணின கிரந்தம், அர்த்த புஷ்டியாய், சுந்தரியாய், வெகு சமத்காரமாய், காதுகளுக்கு இன்பமாய், தோஷாகிதமாய் இருக்கப்பட்ட கதைகளெல்லாம் நமக்குச் சொல்ல வேண்டுமென்று மகா புத்திசாலியாயிருக்கப்பட்ட பிராமணர் கேட்ட விடத்திலே அந்த பரமானந்த கவீந்திரர் சொல்ல ஆரம்பித்தார்.

சிவாஜி ராஜாவினுடைய சரித்திரம் பாரதக்கதை கேட்டால் எப்படி பாபத்தைப் போக்கடிக்கிறதோ அப்படிப் பட்ட கதைகள் சொல்லுகிறேன். கேளுங்கள். தெட்சிண தேசத்திலே வாசம் பண்ணுகிற ஷாஜிராஜாவினுடைய குமாரன் சிவாஜிராஜா. அவர் ஸ்ரீமன் நாராயணனுடைய அம்சம் தேவதைகளுக்குத் திரேஷம் பண்ணுகிறவர்களுக்குச் சத்துருவாக யிருக்கப்பட்டவர். இப்படிப்பட்டவர் என்னை

நல்ல வார்த்தை சொல்லிச் சொன்னது; நான் என்னென்ன சரித்திரங்கள் பண்ணியிருக்கிறேனோ இனிமேல்பட என்னென்ன பண்ணப்போகிறேனோ அதெல்லாம் என்னுடைய பாட்டனார் மாலோஜி ராஜா முதற்கொண்டு பிரசித்தமாயிருக்கிற கதைகளை நீர் விஸ்தாரமாய் சரித்திரம் பண்ண வேண்டுமென்று சொன்னார். அதற்கு நான் நல்லது என்று சொல்லி என் வீட்டுக்கு வந்து யோசனை பண்ணினது பாரதம் போலே இவருடைய சரித்திரங்கள் இருக்கிறது. இவர் மனிதரிலே சேர்ந்தவரல்ல. இவருடைய மனதிலே யானால் இப்படி சரித்திரம் பண்ணவேண்டுமென்று இருக்கிறது. இதற்கு என்ன பண்ணலாமென்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கும்போது சாட்ஜாத் பகவதி அம்மன் வந்து எனக்குச் சொன்னது.

ஓகோய்! கவீந்திரரே! பரமானந்தரே! நீர் சிந்தனை பண்ணவேண்டாம். உனக்கு நான் அனுகூலமாயிருக்கிறேன். என்னுடைய அனுக்ரஹத்தினாலே தானே ராஜா வந்து உமக்குச் சொன்னாரென்று தயவோடு கூடினவள், சதுர் புஜத்தோடு இருக்கப்பட்டவள். அம்மன் என்னுடைய இருதயத்தில் பிரவேசித்தாள். அன்றையமுதற்கொண்டு வாக்குத் தேவதை சரஸ்வதி அம்மன் என்னுடைய நாக்கிலே அர்த்தத்தோடு சர்வகாலமாயிருந்துவிட்டாள். நான் கண்ணாலே பாராமல் காதினாலே கேட்காமல் இருக்கப் பட்ட சரித்திரத்தைப் பிரத்யட்சமாய்ப் பார்த்ததுபோலாயிற்று. பகவான் எப்படியோ அப்படி எண்ணிக்கொண்டு இந்த மகாபுண்ணியகரமாய் இருக்கப்பட்டச் சிவபாரத சரித்திரத்தை ஆரம்பித்தேன்.

ஓகோ! யோக்கியமாயிருக்கப்பட்ட பிராமணரே! இந்த சிவபாரத சரித்திரத்திலே சம்போமஹாதேவருடைய மகிமை, துஷ்டமாயிருக்கப்பட்ட [1] தைத்தியர்களை மர்த்திச்

---

1 தைத்தியர் அசுரர்

சவளான துளசாதேவி அம்மனுடைய மகிமை, தர்மார்த்த காமமோக்ஷங்களுடைய மகிமை, தீர்த்தங்களுடைய மகிமை களும் சொல்லியிருக்கிறது. இன்னும் வெகுபேர் துலுக்கர் களோடு யுத்தம் பண்ணினதும், அந்தத்துலுக்கரை நாசம் பண்ணுவதற்கு இவர் ஜென்மமெடுத்ததும், தேவபிராமணர் களுடைய மகிமைகளும் இதரமாய் இருக்கப்பட்ட ராஜாக் களுடைய சரித்திரங்களும், யானை குதிரைகளுடைய இலட் சணங்களும், கோட்டை கொத்தளங்களுடைய இலட்சணங் களும், ராஜாக்களுடைய நீதி இலட்சணங்களும், சூரியவம் சத்திலே ஜெனித்தவருடைய கதைகள் உங்களுக்குச் சொல் கிறேன், சாவதானமாய்க் கேளுங்கள் என்று சொல்லுற்று ஆரம்பித்தார்.

தெற்குப் பிராந்தியத்திலே மால்வர்மா என்று சூரியவம் சத்திலே ஜெனித்து சூரியனுக்குச் சமானமாயிருக்கப்பட்ட காந்தியையுடைத்தான ஒரு ராஜா இருந்தார். அவர் தர்மிஷ்டர். மகாராஷ்டிர தேசத்தைப் பரிபாலனம் பண்ணுகிறவர். மகா அழகோடு கூடியவர். புண்ணிய கரமாயிருக்கப்பட்ட பீமாதீர சமீபத்திலே ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டு சைய பர்வதப் பிரவேசமெல்லாம் ஆக்ர மித்து ராஜ்யம் பண்ணிக்கொண்டிருக்கும்போது இவரைச் சத்துருக்கள் கண்ணெடுத்துப் பார்க்கப்படாமல் புஜபலத் தோடு இருக்கப்பட்ட மால்வர்மா, உமாபயீ என்கிறவளை விவாகம் பண்ணிக்கொண்டு வெகு பிரீதியாய் நல்ல குணங் களோடு கூடியவளாயிருக்கும் மனைவி கிடைத்தாளென்று சாவித்திரியோடு சத்தியவான் எப்படியோ அப்படி ஆனந்தம் அனுபவித்துக்கொண்டு அவளை நவரத்ன பூஷணங்களோடு அலங்கிருதம் பண்ணி, குபேரன்போல் பாக்கியம் உடைத்தானவனாய் சகல தர்மங்களும் பண்ணிக் கொண்டு அக்கினிஹோத்திரம் யக்ஞாதிகளுக்கு அநேக தெட்சிணைகள் கொடுத்துப் பண்ணிவைத்துக கொண்டு சம்போ மகாதேவருக்குப் பிரீதியர்த்தமாய் மகா தானங்கள் கொடுத்துச் சம்போ மகாதேவருக்குப் பக்தனாயிருக்கப் பட்ட அந்த சுவாமிக்கு சமுத்திரம்போல ஒரு குளத்தை

வெட்டிவைத்தார். செம்போவென்றொரு பர்வதம், அங்கே மேருவுக்குச் சமானமாயிருக்கப்பட்ட மாடிகளும் வெகு விருக்ஷங்களுமாயிருக்கப்பட்ட தோட்டங்களும் நடைவாவிகளும் அதற்குப் பொன்னாலே படிகளும் தண்ணீர்ப் பந்தல் தர்மசாவடிகள் இப்படிப்பட்ட அநேக தர்மங்கள் பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்குச் சகல பாளையக்காரக் கூட்டங்கள் பாதாக்கிராந்தர் களாயிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் மகா துர்க்கம் தேவகிரியிலே இருக்கும் நிஜாம்ஷா என்னும் ஒரு தார்மிஷ்டன் தன்னுடைய தேசத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்தான். அவருக்கு சாதவராவாதி முதற்கொண்டு தெட்சிண தேசத்திலே யிருக்கப்பட்ட ராஜாக்களெல்லோரும் அனுசரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எதல்ஷா என்று ஒரு துலுக்கன் தன்னுடைய விஜய நகரத்திலே இருந்து கொண்டு உறமுறையார்களோடு ராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு காரிய நிமித்தியமாய் எதல்ஷாவுக்கும் நிஜாம்ஷாவுக்கும் விரோதம் வந்தது. அப்போது நிஜாம்ஷா மால்வர்மா என்கிற ராஜா மகா பிரபலமாயிருக்கிறாரென்று கேட்டு அவரைத் தனக்குச் சகாயார்த்தமாய் அழைத்துவரச் செய்தார் அவரும் இவருடைய பிரீதிசம்பாதிக்க வேண்டுமென்று தேவகிரிக்கு வந்து சேர்ந்தார். அந்த மாளவ ராஜாவினுடைய தம்பி விட்டோஜி ராஜா தன்னுடைய தளத்தோடு அவரும் தேவகிரிக்கு வந்தார். இவர் தமையன், தம்பி இரண்டு பேரும் வந்து சேர்ந்ததினாலே நிஜாம்ஷா, சந்தோஷப் பட்டு அவர்களுக்கு வெகுமானம் பண்ணினான். அதன் பிறகு மாலோஜி ராஜா நிஜாம்ஷாவுக்குச் சத்துருக்கள் யாரார் இருந்தார்களோ அவர்களையெல்லாம் ஜெயித்துத் துரத்திவிட்டார். விட்டோஜி ராஜாவும் நிஜாம் ஷாவுக்கு சகாவாயிருந்து கொண்டு அவருடைய மனதுப்படி நடந்து வந்தார். நிஜாம் ஷாவுக்கு சர்தார் கூட்டங்கள் வெகுபேர் இருந்தாலும் அவர்களைவிட இந்த மாலோஜி ராஜாவின் மேல் உள்ள தனிப்பட்ட பிரியம் காரணமாக அவருக்குச்

சிறிது தேசங்கள் இனாமமாய்க் கொடுத்தார். இந்த மாலோஜி ராஜா முன்பிருந்த தன்னுடைய ராஜ்யத்திலே தன்னுடைய பிரதானிகளை வைத்துத் தான் நிஜாமன் கொடுத்த ராஜ்யத்திலே இருந்துவிட்டார்.

இப்படிச் சிறிது நாளான பிறகு அந்த மாலோஜி ராஜா மனைவியோடுகூட புத்திர சந்தானமாக வேண்டுமென்று அந்த மகாதேவருடைய ஆறாதனம் பண்ணிக் கொண்டிருக்கும்போது கொஞ்ச நாளைக்குப் பிறகு அவருடைய மனைவி உமாபாயீ கப்ர்பிணியானாள் அதனால் ராஜாவுக்கு வெகு சந்தோஷமாயிற்று. பத்தாம் மாதம் நல்ல முகூர்த்த லக்கனத்திலே சகல ராஜ சின்னங்களுடனே வெகு காந்தி வந்தனாய் சந்திரனைப்போல் முகத்தை உடைத்தவனாய் ஆசானு பாகுவாய் தேதீப்பிய மானமாய் பிள்ளை பிறந்தது. அந்தச் செய்தி மகாராசாவுக்குப்போய் சொன்னார்கள். அந்தச் செய்தி கேட்டு வெகு ஆனந்தத்தோடு ஸத்தானம் பண்ணி சுப்ரமணியருடைய முகத்தைச் சுவாமி எப்படி பார்த்தாரோ அப்படி மகாராஜா வந்து புத்திர முகத்தைப் பார்த்து ஆனந்தமடைந்தார் அதன் பிறகு புரோகிதரை அழைத்துச் சாதகர்மத்தைப் பண்ணினார். புண்ணியாக வாசனம் பண்ணும்போது திவ்யமாய் மங்களகரமாய் சந்தங்கள் உண்டாயிற்று. கேளிக்கைகளாயிற்று. பாடகர்கள் மதுரமாய்க் கானங்கள் பண்ணினார்கள். கட்டியக்காரர்கள் தோத்திரத்தைப் பண்ணினார்கள். பெரிய பிராமணர் ஆசீர்வாதம் பண்ணினார்கள். அந்த தேசத்திலே அவரவர் வீடுகளிலேயும் இம்மாதிரி உற்சவத்தைப் பண்ணினார்கள்.

அப்போது மாலோஜி ராஜா பசுக்கள், யானைகள், குதிரைகள், முத்து மாலைகள், பவன மாலைகள், மோகன மாலைகள், அஸ்தகடையங்கள், பதக்கங்கள், சரப்பளிகள், கடுக்கன்கள், மோதிரங்கள் முதலிய பூஷணங்களெல்லாம் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார், யார் யார் எது எது கேட்டார்களோ அதெல்லாம் கொடுத்தார்

அதன்பிறகு சோதிடர்களை அழைத்து நல்ல முகூர்த்தம் பார்த்து நாமகரணத்தைப் பண்ணினார்கள். ஷாஜி ராஜா வென்று பெயர் வைத்தார்கள். இப்படி அந்தக் குழந்தை சுக்கிலபட்சத்திலே நாளுக்கு நாள் எப்படிச் சந்திரன் விருத்தியடைவாரோ அப்படிக் குழந்தை வளர்ந்து தாயார் தகப்பனாருக்குத் தன்னுடைய விளையாட்டினாலே ஆனந்தத்தைக் கொடுத்துவந்தார். அதன்பிறகு இரண்டு வருஷத்துக்கு மேல் மாலோஜி ராஜாவினுடைய தர்மபத்தினியிடத்திலே இரண்டாம் பிள்ளை பிறந்தது. அதற்கும் சாதகர்மங்கள், நாமகர்மங்கள பண்ணி சரபோஜி என்று பெயர் வைத்தார்கள். இப்படி ஷாஜி, சரபோஜி இரண்டு பிள்ளைகளையும் பார்த்து வெகு ஆனந்தத்துடன் ராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தார்.

## இரண்டாம் அத்தியாயம்

இரண்டாம் அத்தியாயத்தினுடைய கதை என்னவென்றால் ஷாஜி ராஜாவுக்கு ஐந்து வருஷமாயிற்று. அப்போது நிஜாம்ஷா மாலோஜிராஜாவை அழைத்து அவரோடு தன் தன் சேனைகளையுங் கொடுத்து இந்திராபுரத்துமேல் சண்டைக்கு அனுப்பினார். அதன்படி இருவரும் போய் மகா பலமாய் வெகு சண்டை செய்தனர். சத்துருக்கள் சேனை அதிகமானபடியினாலே மாலோஜி ராஜாவைக் கோட்டையைப்போல் சுற்றிக்கொண்டார்கள். இவரும் சூரனானபடியினாலே பின்வாங்காமல் சத்துரு சேனைகளுக்குள்ளே புகுந்து சின்னாபின்னமாய் அடிக்கும்போது வெகு சேனைகள் மடிந்தன. ஆறுகள் பிரவேசிக்கிறதுபோல் இரத்த நதிகள் பிரவேசித்தன அதைப்பார்க்கும்போது எப்படியிருந்ததென்றால் செத்துப்போன யானைகள் மிதந்துவருவது பர்வதம்போலவும். செத்துப்போன குதிரைகள் மிதந்துவருவது அலைகளைப்போலவும், மனித சரீரங்கள், தலைகள் மிதந்துவருவது முதலைகள், மச்சங்களைப்போலவும், ஒடிந்து விழுந்த தேச சத்திர சாமரங்கள்

அமுச பட்சிகளைப்போலவும் இப்படியாகத் தோன்றிச் சண்டைகள் செய்து தன்னுடைய சேனைகளோடு கூடத் தானும் சொர்க்கத்தே போய்ச் சேர்ந்தார்.

இந்தச் சமாசாரம் அவருடைய தர்ம பத்தினி உமாபாயீ அம்மாள் கேட்டு வாழை மரம் காற்றினால் கீழே விழுந்தாலெப்படியோ அப்படிக் கீழே விழுந்து வெகு துக்கத்தை அடைந்தாள். அப்போது கொழுந்தனார் விட்டல் ராஜா வந்து வெகு சமாதானம் செய்தார். இந்த மிர்த்திய லோகம் சாஸ்வதமன்று, கடைசியிலே எல்லோரும் போகிறவர்கள்தான், அதிலும் இரணகளத்தில் யுத்தம் பண்ணி அஸ்திரத்தினாலே உயிர் போகிறவருக்கு வீரசொர்க்கத்திலேயிருந்து ரதம் வந்து தேவர்கள் போலிருப்பார்கள் என்று சாத்திரத்திலேயுமிருக்கிறது. ஆனால் உன்னைப் போலொத்த பதிவிரதையை விட்டுவிட்டுப் போவது உத்தமமல்ல. இந்த மனிதர்களுடைய சரீரங்களுக்குப் பால், நெல், சர்க்கரை, பஞ்சபட்ச பரமான்னங்கள் சாப்பிட்டுக்கொண்டு நல்ல தைலங்களினாலே அப்பியங்கனம் பண்ணிக்கொண்டு [1]அமுசதூளிகா தல்பத்துமேலே படுத்துக்கொண்டு பிரதீகரமாயிருக்கப்பட்ட ஸ்திரீகளை அனுபவித்துக்கொண்டிருந்தாலும் கடைசியிலே சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா வேறாய்ப் போய்விடுகிறது: இப்படியிருப்பதினாலே ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாமல் இருக்கிற பிரபஞ்சமானபடியினாலே நீ புத்திசாலியாயிருக்கப்பட்டவள், சகலமும் தெரிந்தவளான படியினால் துக்கத்தை விட்டுவிட்டு சந்திர சூரியனைப்போல் மகா தேஜஸ்யுடைத்தானவர்களாயிருக்கப்பட்ட ஷாஜி சரபோஜி இருவரையும் பார்த்துக்கொண்டு வந்தால், அந்தப் பிள்ளைகளைத் தொட்டு நம்முடைய வம்சத்திற்குக் கீர்த்தியுண்டாகும். அந்தக் குழந்தைகள் உன்மேல் பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் உன்

---

1. அன்னத்தூவியாலான மெத்தை.

உயிரைக் காப்பாற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்று இப்படிச் சமாதானம் பண்ணினார். அதன்பிறகு கண் விழித்துப் பார்த்தவுடனே துக்கம் போய்விட்டது.

அதன்பிறகு விட்டல்ராஜா இந்தப் பிள்ளைகளை முன்னிட்டுக்கொண்டு மாலோஜி ராஜாவுக்கு உத்திரகிரியைகள் பண்ணிவிட்டு அந்தப் பிள்ளைகளுக்குத்தானே ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்வித்துக் காப்பாற்றிக் கொண்டு வந்தார். அந்தப் பிள்ளைகளும் சிறிய தகப்பனார் மனதுப்படி நடந்துகொண்டு தன்னுடைய ராஜ்யத்தையும் விசாரணை பண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்தச்செய்தி நிஜாம்ஷா கேட்டு மாலோஜி ராஜா போனது தன்னுடைய ஒரு புஜம் போனதென்று விசனப்பட்டு அதன்பிறகு அந்தஷாஜி, சரபோஜி இரண்டு பிள்ளைகளையும் விட்டல் ராஜாவையும் அழைத்துச் சமாதானம் பண்ணி தகப்பனாருடைய ராஜ்யத்தைப் பிள்ளைகளுக்குத் தானே கொடுத்து வஸ்திரபூஷணம், யானைகள், குதிரைகள் கொடுத்து அனுப்பிவைத்தார். இந்தப் பிள்ளைகளும் சிறிய தகப்பனார் மனதுபடி நடந்துகொண்டுவந்தார்கள். ஜனங்களும் ஷாஜிராஜாவைப் பார்த்து இவர் நம்முடைய ராஜாவென்று வெகு சந்தோஷப்பட்டார்கள். சிறு பிள்ளைகளாயிருந்து ராஜ்ய விசாரணை பண்ணுவதையும் ஜனங்களைப் பரிபாலனம் பண்ணுவதையும் பார்த்து இதர ராஜாக்களும் வெகு சிலாகித்தார்கள். அதன்பிறகு ஷாஜி ராஜாவுக்கு [2] எவ்வனம் வந்தது. மீசைகள் வளரத்தலைப்பட்டது. உடம்பு காந்தி சொர்ணம் போல, கண்கள் காது பரியந்தம், கிளிமுக்குப்போலே மூக்கும், சந்திரன்போலே முகமும், முழங்கால்வரை கைகளும் இப்படிப்பட்ட இலட்சணத்தோடு கூடியவர் தானம் கொடுப்பதிலே கர்ணனோ, பராக்கிரமத்திலே அர்ஜுனனோ என்னும்படி ஜனங்கள் மெச்சிக்கொண்டு இருக்கிறவரை சாதவ ராஜா பார்த்து

2. யௌவனம் இளமை.

தன்னுடைய பெண்ணை இவருக்குக் கொடுக்கவேண்டு மென்று ஜோசியர்களை அழைத்து முகூர்த்தம் பார்த்துத் தன்னுடைய பெண் ஜீஜாயியைக் கல்யாணம் செய்து கொடுத்தார்.

அந்தப் பெண் மகா அழகோடு கூடியவள். எப்படி யென்றால் தாமரையிதழ் போலே கண்களும், அஷ்டமி சந்திரனைப் போலே நெற்றியும், மன்மதனுடைய வில்போன்ற புருவங்களும், பொன் கிளிஞ்சிபோலே காதுகளும், ஜாதி புஷ்பத்தி னுடைய அரும்புபோலே [1] தந்தபந்திகளும், கோவைப் பழம் போலே உதடுகளும், சங்கம்போலே கழுத்தும், கோகிலம்போலே சுரமும், தாமரைத் தண்டு போலே கைகளும், மாதுளம்பழம் விதை போலே நகங்களும், சிறுத்த வயிறும், யானைத் துதிக்கை போலே தொடைகளும், உள்ளங்காலிலே சங்கு சக்ர ரேகைகளும் இப்படிப்பட்ட அழகோடு கூடிய மனைவியைப் பார்த்து சகல ரத்தினசகிதங்களாயிருக்கப்பட்ட பூஷணங் கள் போட்டு சந்தோஷத்துடனே அவளும் ஷாஜி ராஜா வினுடைய சவுந்தரியத்தைப் பார்த்து ஒருவருக்கொருவர் சந்தோஷப் பட்டுக்கொண்டு கிரகப்பிரவேசம் பண்ணினார் கள். அப்போது ஜனங்கள் பார்த்து ஸ்ரீமகாலட்சுமியானவள் மகாவிஷ்ணுவோடுகூட கிரகப்பிரவேசம் செய்ததுபோல் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டார்கள். பெரியவர் களாயிருக்கப்பட்ட சுமங்கிலிகள் வந்து ஆரத்தி எடுத்தார்கள். அந்த ஜீஜாயி அம்மாள் மாமியாருக்கும் பெரியவர்களுக்கும் நமஸ்காரம் பண்ணிச்சேவித்தாள். அவர் களும் ஆசீர்வாதம் பண்ணினார்கள். அந்த உமாபாயி மருமகளைப் பார்த்து மருமகளுடைய உபசாரமும் சிசுவடைகளும் பார்த்து வெகு சந்தோஷப்பட்டாள்: அதன்பிறகு விசுவாசராயர் என்கிறவர் தன்னுடைய பெண் மகா குணசாலியாயிருக்கப்பட்ட துர்காபாயியைசரபோஜி ராஜாவுக்குக் கலியாணம் செய்துகொடுத்தார். குணசாலி

1 பல்வரிசைகள்.

களாயிருக்கப்பட்ட இரண்டு மருமகளையும் தன் பிள்ளை களையும் பார்த்து மகா சந்தோஷத்தோடு உமாபாயீ ஆனந்தமாயிருந்தாள்.

அதன்பிறகு ஷாஜி ராஜாவும் சரபோஜி ராஜாவும் தன்தன்னுடைய ஸ்திரீகளுடன் சோபிதமாய் நிஜகீர்த்தி யுடனே, தன்னுடையே தாயாருக்கும் தன்னுடைய ராஜ்யத்து ஜனங்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தம்பி சரபோஜி ராஜாவினுடைய சகாயத்தினாலே அக்கினி பகவானுக்கு வாயு பகவான் எப்படி சகாயமோ அந்த ரீதியாய் ஷாஜி மகாராஜா பீஷ்மாச்சாரியார்போலே பராக்கிரம வந்தனாய் யுத்த இரண களத்திலே ஜெயம் பண்ணிக்கொண்டு நிஜாம் ஷாவுக்கு சந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டு துஷ்ட ஜனங்களைச் சிட்சை பண்ணிக்கொண்டு வந்தார்.

## மூன்றாம் அத்தியாயம்

இப்படியிருக்கும்போது சிறிய தகப்பனார் விட்டால் ராஜா சொர்க்கத்தையடைந்தார். அதன்பின் தாயாருடைய அனுமதியாய் நடந்துகொண்டு வருகிற ஷாஜிராஜா தன்னுடைய புஜபலத்தினாலே சகல ராஜ்ய பாரம் கைவசமாய் பண்ணிக்கொண்டு வந்தார். இப்படி வருகிற நாளில் விட்டல் ராஜாவினுடைய பிள்ளைகள் கைபாஜி கேலோஜி, மல்சோஜி, புரசோஜி, நாகோஜி, மானோஜி, கங்காஜி, த்ரிம்பக்ஜி இந்த எட்டுபேரும் மாகோஜி ராஜா வினுடைய பிள்ளைகள் ஷாஜி, சரபோஜி இருவரும், ஆக பத்து பேரும் ஒருவருக்கொருவர் சகாயமாய் வில்லாளி களுக்குள்ளே சமர்த்தராய் நிஜாம்ஷாவுக்கு பிரீதி வந்தராய் புத்தி வந்தராய் சூரர்களானபடியினாலே நிஜாம்ஷாவைத் தவிர இதர பேர்களுக்கு [1] பரவை பண்ணாமல் திரணமாய் எண்ணிக் கொண்டுவந்தார்கள்.

---

1. பர்வா என்ற சொல் மரியாதை என்ற பொருளில் வந்தது போலும்.

அவர்களுடைய சியாமல தேகம் பர்வதத்துக்குச் சமானமாய் உயரமும் புஷ்டியும் சூரியனுக்கு சமானமான காந்தி யுடைத்தானவர்களாய் கர்வத்தினாலே இதரப் பேர்களைச் சட்டை பண்ணாமல் இருந்தார்கள்.

இப்படி யிருக்கும்போது ஒருநாள் நிஜாம்ஷா சிம்மாசனத்திலே உட்கார்ந்து கொண்டு சதுர் பண்ணி னார். அப்போது சகல ராஜாக்களும் வந்து பேட்டி வாங்கி சதுர் கலைந்தவுடனே அவரவர் தன்னுடைய ஜனத்தோடு அரண்மனையை விட்டுவெளியே வரும்போது எல்லோ ருடைய ஜனங்களும் ஒருமிக்கவந்து சந்தித்த படியினாலே அவரவருடைய ஜனங்களும் சந்தடி விலகுகிறபோது சந்தடி அடங்க மாட்டாமல் வரத் தலைப்பட்டது. அந்தந்த ராஜாக்களுடைய [2]சன்னாகம், [3]பாலாக்காரர், [4]பர்ச்சிக்கார பட்டர், கேடையக்காரர் தள்ளிக்கொண்டு முன்னே நடந்தார். எல்லோருடைய சூரர்கள், கிரீடம் வைத்திருக்கப் பட்டவர். கழுத்திலே முத்து ஆரங்கள் பதக்கங்கள், இரத்தின குண்டலங்கள், அஸ்த கடையங்கள் போட்டுக் கொண்டு சிறிது பேர் யானையின்மேல், சிறிது பேர் குதிரையின் மேல், சிறிதுபேர் பல்லக்கில் ஏறிக் கொண்டு போகும்போது ஒருவருக்கொருவர் நான் சூரன் நீ சூரன் என்கிறதாய கர்வத்தினாலே போகும்போது கண்டாகலே என்கிறவன் தன்னுடைய யானையை முன்னே விட்டான், அந்த யானைக்கு மதம் வந்து அங்குள்ளவர் களை சின்னா பின்னமாய் அடித்துச் சேதம் விளைக்கத் தலைப்பட்டது. மாவத்தன் அங்குசத்தினாலே குத்தி எப்படி இழுத்தாலும் அடங்காமல் பிரளய காலம் போல் அடிக்கத்தலைப்பட்டது.

அப்போது சாதவராவினுடைய பிள்ளை தத்தவாமா என்கிறவன் முன்னே வந்து இந்த யானையை அடித்துத் தள்ளுங்கள் என்று தன்னுடைய ஜனங்களுக்கு உத்தாரம்

---

2. போர்க்கவசம்

3, 4. ஈட்டிபோன்ற ஆயுதங்கள் தாங்கிய மெய்காவலாளர்கள்.

பண்ணினான். சிறிது பேர் அம்புகளினாலேயும், சிறிது பேர் கத்தியினாலேயும் சிறிதுபேர் பாலாக்கழிகளினாலேயும் சிறிதுபேர் பர்ச்சிகளினாலேயும் அடித்தார்கள், அதற்கும் அடங்காமல் குதிரைக்காரரையும், ஜனங்களையும் இழுத்துக் காலிலே தேய்க்கத் தலைப்பட்டது. அப்போது தத்துவா மாதான் முன்னே வந்து சிம்மம்போலே நின்றுகொண்டு தீட்சணமாயிருக்கப்பட்டக் கத்தியினாலே யானையி னுடைய துதிக்கையில் வெட்டினான். அதனால் காயம் பட்டு பர்வதத்திலிருந்து ஜலம் வீழ்வது போல் இரத்தம் புறப்பட்டது. அப்போது விட்டல் ராஜாவினுடைய பிள்ளைகள் ஸம்பாஜி, கேலோஜி இருவரும் இந்த கண்டாகலேய்க்கு சகாயம் பண்ணவேண்டுமென்று அந்த யானையைக் காப்பாற்றுவதற்காக முன்னே வந்தார். அப்போது தந்தவர்மா யானையை விட்டுவிட்டு ஸம்பாஜி யின்மேல் சண்டையிடலானார். இரண்டு பேர்களுடைய சேனைகளுக்கும் சண்டை முற்றிக்கொண்டு விட்டதால் ஷாஜி ராஜா சாதவ ராஜா மாமனாரென்றும் எண்ணாமல் தம்பிக்குச் சகாயமாய் முன்னே வந்து நின்றார். அப்போது மச்சினன் தத்தவர்மா வில்லெடுத்துக்கொண்டு அனேக பாணங்களினாலே அடித்தான். சேனைகளும் ஒருவருக் கொருவர் பாணங்களினாலே கத்தியினாலே அடிக்கும் போது சிறிது ஜனங்களுக்குக் கால் அறுந்து கையறுந்து, கழுத்தறுந்து. இரத்தப் பிரவாகமாயிற்று யானைகள், குதிரைகள் மிகுதியாய்ச் சேதப்பட்டன. தலைகள் அறுந்து போன உடம்புகள் கூத்தாடத் தலைப்பட்டன. ஸம்பாஜியி னுடைய அம்பு வேகத்தினாலே மிகவும் காயப்பட்டு தத்தவர்மா என்கிறவன் சொர்க்கலோகத்தை அடைந்தான்.

அதைப் பார்த்து சாதவராஜா பிள்ளை போன துக்கத்தினாலே வெகுரோஷத்தோடு இந்த ஸம்பாஜியை அடித்துப் பழிவாங்க வேண்டுமென்று கிருஷ்ணசர்பம் போல் எதிரே வந்தபோது ஷாஜிராஜா பார்த்துத் தம்பியை இரட்சிக்க வேண்டுமென்று மாமனாரென்றும் தாட்சண்யம் பாராமல் முன்வந்து நின்றார். அந்த சாதவ ராஜாவும்

மருமகனென்று பாராமல் மிக்க பலத்தோடு புஜத்தின் மேலே அம்பினால் அடித்துக்கொண்டு வந்து கத்தியினால் வெட்டினார். அதானல் மூர்ச்சைப்பட்டு வெகு பிரயாசத்து மேலே பிழைத்தார்

அதற்கு மேல் கேலோஜி வெங்காசிக்கு அடித்துத் தூத்தி வெகு கோபத்தினாலே ஸம்பாஜியிடம் வந்தான். அவனும் கத்தி வாங்கிக் கொண்டு நின்றான். இருவருக்கும் சண்டை முற்றிக்கொண்டு மதயானைக்கு மதயானை சண்டை போட்டாலெப்படியோ அவ்விதம் சண்டையா யிற்று. ஸம்பாஜியினுடைய பல அடிகளைச் சகித்துக் கொண்டு சாதவராஜா அந்த ஸம்பாஜியை அடித்துக் கீழே தள்ளினார். அவனும் சொர்க்க லோகம் சேர்ந்தான். அப்போது நிஜாம்ஷாவினுடைய சேனையும் நிர்வாக மில்லாமல் பின் வாங்கிற்று நிஜாம்ஷா எல்லோருக்கும் எஜமானனாயிருக்கப்பட்டவனானபடியினாலே இருவருக் கும் சமாதானம் செய்து விலக்கி விட்டான் பின் இரண களத்தில் கிடந்த தத்துவர்மாவையும் ஸம்பாஜியையும் அவரவர் தம்முடைய ஊருக்கு எடுத்துக் கொண்டுபோய் பண்ணவேண்டிய கிரியா கர்மங்களை பண்ணினார்கள். அதன்பின் அந்த சாதவராஜா நமக்குக் கிட்ட உறவாய் மகா பிரபலமாயிருக்கப்பட்ட ஷாஜி ராஜாவுக்கும் நமக்கும் விரோதம் வந்ததே யென்று வெகு விசனமாய் இருந்தார்.

## நான்காம் அத்தியாயம்

இப்படியிருக்கும் பொழுது நிஜாம்ஷா விட்டல் ராஜா வினுடைய பிள்ளைகள் பேரிலுள்ள அபிமானத்தினாலே இந்த சாதவ ராஜா மகா பிரபலன். அவனுக்குச் சேனையும் நிறைய உள்ளது. நமக்கு அடங்காமலிருக்கப்பட்டவன், இப்படிப் பட்டவனை அடக்கவேண்டுமென்று மனதிலே கபடம் வைத்துக்கொண்டிருந்தார். அந்தச் சேதி சாதவராஜாவுக்குத் தெரிந்து டில்லி சூரன் எதல்ஷாவினு

டைய [1] ஆசார் பிடிக்க வேண்டுமென்று நிஜாம்ஷாவினு டைய தேசத்தை விட்டுவிட்டு அவ்விடத்திற்குப் போனான். இவன் வந்ததைப் பார்த்து எதல்ஷாவுக்கு வெகு சந்தோஷ மாயிற்று முன் எதல்ஷாவுக்கும் நிஜாம்ஷாவுக்கும் ஆகாம லிருந்தபடியினாலே எதல்ஷா மொகல் பாட்சாவினுடைய ஆசார் பிடித்துக்கொண்டிருந்தான். அந்தப் பாட்சா எதல் ஷாவினுடைய தகப்பன் இப்ராமுசா மேல் பிரீதியினாலே எதல்ஷாவினுடைய காரியங்களெல்லாம் மனதுப்படிச் செய்து கொடுக்கிறேனென்று பிரதிக்ஞை பண்ணினான்.

அதற்குமேல் அந்த மொகல் பாட்சா ஜஹாங்கீர் என்கிறவன் தன்னுடைய சேனையை இப்ராஹிமுக்குக் கொடுத்தான். அதனால் எதல்ஷா நிஜாம்ஷாவைத் திரண மாய் எண்ணிக் கொண்டிருந்தான். நிஜாம்ஷாவும் தன்னுடைய சேனைகளோடுகூட ஷாஜி, சரபோஜி கேலோஜி, மாலோஜி, நாகோஜி, பாசோஜி தரிம்பக்ஜி, கங்காஜி, மனோஜி இவர்களோடு இன்னும் துலுக்கர் அம்மீர்தான், முசேகான் பேடர் தேசத்தரசனான சிம்ம ராஜா இது தவிர மராட்டியர் பலர் விட்டல்ஜி கான்ட்டே, தத்தாஜி, நரசிங்கராவ் இங்களே இது தவிர சாரத்கான், சுருப்கான், ஜோஹர்கான், அம்பீர்கான், அகமத்தான், பர்பர்கான், பரசூக்கான், பத்தேகான். ஆத்மகான், இசேகான் இப்படி மகா சூரர்களாயிருக்கிறவர்களைக் கூட்டிக்கொண்டு மற்றவர்களுகதுப் பறவை பண்ணாமல் இருந்தார். எதல்ஷாவும் மொகல் பாட்சாவினுடைய சகாயத்தினாலே நிஜாம்ஷா வோடு யுத்தம் செய்யவேண்டு மென்று ஜலாகான் கஜீர்கான், சிகந்தர்கான், கரமுல்லா கான், சுலேல்கான், இஜாமத்கான், பாதற்கான், ஸ ஜான்கான் இவர்கள் துலுக்க சர்தார்கள். இதுதவிர உதார்ராம், தாதாசிராவ் விசுவனாதராவ், இன்னும் சாதவராஜாவினுடைய பிள்ளை. கள் ஏகோஜி, அசலோஜி ஜஸ்வந்த்ஜி, பகதார்ஜி இப்படிப்பட்டச் சாதார்களுடனும்

1 கோட்டை.

மொகல் பாட்சா அனுப்பிய மகா சூரனாயிருக்கப்பட்ட ஷ்கர்கானனையும் அவனுடைய தளத்தையும் அழைத்துக் கொண்டு எதல்ஷா தெற்குப் பிராந்தியத்தையும் ஜெயிக்க வேண்டுமென்று புறப்பட்டு முஸ்தப்கான், மசூதுகான், பரீத்கான், திலாவர்கான், சஜிகான், எதல்ஷாவினுடைய தகப்பனார், இப்ரஹிம்கானுடைய சிநேகிதர்கள், இன்னும் சிறிது மராட்டிய சர்தார்களையும் முன்னே 2 அகாடியிலே அனுப்பிவைத்தான்.

அவர்கள் வருகிற செய்தி நிஜாம்ஷா கேட்டு அம்பர்கான் என்கிற சர்தாரையும் ஷாஜிராஜாவையும் இன்னும் சிறிது சர்தார்களையும் அனுப்பிவைத்து வருகிறவர்களை மறிக்கச் சொன்னார். இவர்களும் தளத்தைக் கூட்டிக் கொண்டு எதிரே போகும்போது ஒருவருக்கொருவர் கை கலந்து யுத்தமாயிற்று. அப்போது குதிரைகள் போகிற வேகத்தினாலே துளிகிளம்பி சூரியனை மேகம் மறைப்பது போல் இருந்தது. குதிரைகள் கர்ஜிதம் செய்வதும் யானைகள் கர்ஜினை செய்வதும், சூராளுடைய அட்டகாசமும் துந்துமி பேரிகைகள் முழங்குவதும் மத்தள மேளவாத்தியங்கள் முழங்கப்பட்டதுமான சத்தம் நாலு பக்கங்களிலேயும் வியாபித்தது. எல்லோரும் அம்புகளினாலேயும் கத்திகள், பாலாக்கள், பரிச்சிகளினாலே அடிக்கும்போது கால் போனவனும், தலைபோனபேரும், கைபோனவர்களும், யானை குதிரைகள் வெட்டுப்பட்டு கீழே விழும்போது அதனாலே சிறிது ஜனங்கள் மடிந்து போனதும், அவர்களுடைய இரத்தம் தானே ஒரு ஆறு போலேயும் ஓடத் தலைப்பட்டது. அப்படிப்பட்ட ரெணகளத்திலே ஷாஜி ராஜா, சரபோஜி ராஜா, கேலோஜி ராஜா இன்னும் சிறிது சர்தார்கள் வீராவேசத்தினாலே வில் அம்புகளினாலேயும், கத்தி கேடயம் எடுத்துக்கொண்டு சின்னா பின்னங்களாய் அடிக்கும்போது மொகல் பாட்சாவினுடைய சேனையும் எதல்ஷாவினுடைய சொந்த சேனையும் சண்டையிலே

---

2. அகாடி-முன், "முன்படை என" வந்த பொருள் போலும்.

நிாவாகமில்லாமல் நாலுதிக்கும் ஓடத்தலைப்பட்டது. அப்போது யானைகளுக்குச் சர்தாராயிருக்கப்பட்ட மகாசூரன் மனச்சேகரென்று ஒரு மொகல் அவன் வந்து ஓடுகிற சேனைகளை அழைத்துக்கொண்டு தான் முன்னே வந்து நின்றான்.

அப்போது ஷாஜி ராஜா பார்த்து வெகு பராக்கிரமத்தினாலே யுத்தம் பண்ணினார். சரபோஜி ராஜா கையிலே பாலாக்களி வாங்கிக்கொண்டு யானைகளுடைய சேனையிலே புகுந்து அடிக்கும்போது அவர்களும் சரபோஜி ராஜாவை சுற்றிக்கொண்டார்கள். இருவரும் புஜபலத்தோடு அம்புகள் வாங்கிக் கொண்டு யானைகளை அடிக்கும் போது யானைகள் வீரிட்டுக் கொண்டு மூலைக்குமூலை ஓடத்தலைப்பட்டது. ஷாஜி ராஜாவும் சரபோஜி ராஜாவும் கேலோஜி ராஜாவும் தம்பி தமையனோடு கூடிக் கொண்டு அடிக்கும்போது அந்த மனச்சேகரனென்கிற மொகல் சர்தார் அபஜெயத்தை அடைந்து ஓடினான். அப்போது ஓடுகிறவர்களை இவர்கள் பின் தொடர்ந்து பிடித்துப் பிடித்து அடித்தார்கள். எதல்ஷாவினுடைய சர்தார் கூட்டங்களில் சிறிது பேரைக் கைபிடியாப் பிடித்துக் கொண்டு மேளவாத்தியங்களோடு நிஜாம்ஷாவினுடைய பேட்டிக்கு வந்தார். நிஜாம்ஷாவும் வெகு சந்தோஷப் பட்டார்.

இப்படியிருக்கும்போது விட்டல் ராஜாவினுடைய பிள்ளைகள் கேலோஜி கர்னாஜி முதலானபேர் தர்மராஜாவோடு துரியோதனாதிகள் எப்படி [3] திரேஷம் பண்ணினார்களோ அந்த ரீதியாய் ஷாஜி ராஜாவின் பேரிலே திரேஷம் பண்ணி நிஜாம்ஷாவினுடைய மந்திரி அம்பர்கான் என்கிறவனை அனுசரித்துக்கொண்டு தங்களுக்கு ராஜ்யாதிபத்தியம் வரவேண்டுமென்று ஷாஜிராஜாவினுடைய பிற்பலத்தை ஜெயிக்கப் படாமல் எத்தனம் பண்ணத் தலைப்பட்டார்கள். அதைப்புத்தி மனத்தராயிருக்கப்பட்ட ஷாஜி ராஜா அறிந்து நமக்குள்ளேதான் இரண்டு பட்டது

---

3. துவேஷம்

என்று அந்த அம்பர்கானுக்கும் நிஜாம்ஷாவுக்கும் பறவை பண்ணாமல் இனிமேல் இங்கு இருக்கக் கூடாதென்று தன்னுடைய சேனைகளோடு அங்கிருந்து முன் தாமிருந்து ராஜ்யத்துக்குப் புறப்பட்டு வந்திருக்குப்போது நிஜாம் ஷாவினுடைய மந்திரி அம்பர்கான் என்கிறவன் இவர்களை முன்போலே சுவாதீனம் பண்ணிக் கொள்ள வேண்டு மென்று வெகு எத்தனம் பண்ணினான்.

அது இவருக்குச் சம்மதமில்லாமல் தன் ராஜ்யத்திலே தானே யிருந்து விட்டார். அது எப்படிப்போலென்றால் சூரியனில்லாத ஆகாசம் எப்படியிருக்குமோ அப்படி ஷாஜிராஜா இல்லாமல் நிஜாம்ஷா விளங்காமல் போய் விட்டான். இந்த சேதி எதல்ஷா கேட்டு ஷாஜிராஜாவுக்கு வெகு [4]ஆசரணையினாலே தனக்குச் சகாயமாய் வரவேண்டு மென்று அழைப்பித்தான். அப்போது ஷாஜிராஜாவும் எதல்ஷாவோடுபோய் கூடினார். அதன்பின் எதல்ஷா பிரதாபவந்தனாய் ஷாஜிராஜாவினுடைய சகாயத்தினாலே நிஜாம் ஷாவினுடைய சீமையிலே வந்து அம்பர்கானோடு சண்டையிட்டு அவனை அடித்துப் போட்டார். அதனால் எதல்ஷாவிற்கு ஜெயம் வந்தது. எதல்ஷா மகாசந்தோஷப் பட்டுத் தன்னுடைய ராஜ்யத்திலே பாதிராஜ்யம் ஷாஜி ராஜாவுக்குக் கொடுத்தார். அதன் பிறகு எதல்ஷா தன்னுடைய தகப்பனாருக்கு எதிரியாயிருக்கப்பட்ட முத்தேகான் முதலானவர்களை ஜெயிக்க வேண்டி ஷாஜி ராஜா பின்னோடு சேனையைக் கொடுத்தனுப்பி அவனை யும் ஜெயித்து கேரளதேசம். கர்னாடகதேசம் ஜெயித்து இந்த எதல்ஷாவினுடைய பொக்கிஷத்தைப் பணத்திலே நிரப்பினார். அதல்லாமல் இன்னும் சிறிது எதல்ஷா வினுடைய எதிரிகள் இருந்த பேரையும் ஜெயித்து ஸ்ரீ ராமருடைய ராஜ்யபாரம் எப்படி சுபஸ்ரீயா யிருந்ததோ அப்படி எதல்ஷாவுக்குப் பண்ணிவைத்தார்.

---

4. ஆசரணை—ஆசரிம்பு, வழிபாடு.

இப்படியுருக்கும்போது ஷாஜிராஜாவினுடைய மனைவி ஜீஜாபாயி கர்பிணியாய் சிரமத்தோடு ஆறு பிள்ளைகள் பெற்றாள். அதில் ஸம்பாஜி, சிவாஜி இருவரும் வம்சகர்த்தாக்களானார்கள். அதில் சிவாஜிராஜா சாஷாத் விஷ்ணுவினுடைய அம்சம். ராஜாக்களுக்கு நாயகனாய் சத்துருபட்சத்தை சிக்ஷிகிறவராய் ஆனார். அது எப்படியென்று காசிவாசியாயிருக்கப்பட்ட பிராமணாளைப் பார்த்து கவீந்திரர் முன் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

பூர்வத்திலே கலிபுருஷன் தன்னை வேதங்கள் [1]நிஷித்தம் பண்ணினபடியினாலே அவன் மாகாதேவரைக் குறித்து வெகுகஷ்டினமாயிருக்கப்பட்ட தபசு பண்ணி பிற்பலனாய் துஷ்டர்களுக்கு சௌக்கியம் கொடுக்கிறதும் நல்லவர்களாயிருக்கப்பட்ட சாதுக்களுக்கு துக்கத்தைக் கொடுக்கிறவனாயிருக்கப்பட்டவனைப் பார்த்து கம்சா சூரன் முதலான அசுரர்கள் துலுக்க ரூபமாய் ஜெனித்தார்கள். ஜெனித்து கலி புருஷனுடைய மதத்தை அனுசரித்துக் கொண்டு இந்தப் பூமியிலே வேதசாஸ்திரங்களாயிருக்கப்பட்ட மதங்களைக்கெடுத்து மேற்கத்திய தேசங்களெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டு வடக்குத் தேசமும் கைவசம் பண்ணிக்கொண்டு கிழக்குத் தேசமும் சாதித்து ஒருவராலேயும் ஜெயிக்கப்படாமலும் இருக்கப்பட்ட தெற்குத்தேசமும் வாங்கிக்கொண்டு தன்னுடைய மதங்களை ஸ்தாபித்து யக்ஞாராதிகளே யில்லாமல் பண்ணிவிட்டான். கலிபுருஷனுடைய பிற்பலத்தினாலே துலுக்கருக்குப் பாக்கியம் அதிகமாயிற்று. அப்போது அதைச் சகிக்கமாட்டாமல் சிறிது சத்திரியர்கள் அவர்களோடு யுத்தம் பண்ணி மடிந்து போனார்கள். சிறிது பலவீன மாயிருக்கப்பட்ட சத்திரியரை கைவசம் பண்ணிக்கொண்டார். இப்படி வேதசாஸ்திரங்களோடு நடக்கப்பட்ட சத்திரியர்கள் க்ஷீணமாய் போன பிறகு துலுக்கர்கள் பண்ணுகிற அதர்மங்களை பூமிதேவி

---

1. நிஷித்தம்-இகழ்ச்சி.

சகிக்கமாட்டாமல் முப்பத்து முக்கோடி தேவதைகளினாலே பூசிக்கப்பட்ட பிர்மதேவரிடம் போய் சகல லோகத்துக்கும் ஈசுரனாய், தாய் தகப்பனாய், சகல சராசரங்கள் உண்டாக்கினவராய், வேதமார்க்கங்களாயிருக்கப்பட்ட அநுஷ்டானத்திலே சந்தோஷப்படுகிற வராயிருக்கிற வரல்லவோ நீர், சோகமாயிருக்கப்பட்ட சமுத்திரத்திலே மூழ்கின வரை கரையேற்றுவதற்கு உம்மைத்தவிர வேறில்லையே என்று சொல்லி சொன்னார்.

பூர்வத்திலே தேவதைகள் எந்த அசுரர்களை சம்ஹாரம் பண்ணினார்களோ அவர்கள் இப்போது [2]மிலேச்சரூபமாய் பிறந்து என்னை வெகுவாய் கஷ்டப் படுத்துகிறார்கள். தைத்தியர்களுக்குக் காலாந்தகராயிருக் கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டத்திற்குப்போன பிறகு ஸ்ரீ பகவான் மௌனமாய் இப்போது [3]பவுத்தாவத் தாரமான படியினாலே மிலேச்சர்கள் பிறபலமாய் வெகு பாபத்தைப் பண்ணுகிறார்கள். அது என்னாலே பொறுக்கப் படவில்லை. தேவதைகளுக்குப் பிரதிஷ்டை ஒருவரும் பண்ணுவதில்லை. ஒருவரும் யெக்கியாகாதிகள் பண்ணுவ தில்லை. வேதங்கள், சாஸ்திரங்கள், அன்னசத்திரங்கள் தான தர்மங்கள் விரதங்கள், உபவாசங்கள் இவைக ளெல்லாம் நின்றுபோய்விட்டன. சாதுவா, யிருக்கப்பட்ட பேர்களெல்லாம் துக்கத்தை யடைந்தார் மிலேச்சர் களுடைய மதங்கள் வளரத்தலைப்பட்டது. எங்குபார்த் தாலும் மசூதிகள், தர்காக்கள் கட்டிப்போட்டார்கள். சிவபூசை, விஷ்ணுபூசை நின்றுபோயிற்று. பசுமாடுகளைக் கொல்லத் தலைப்பட்டார்கள். இனிமேல் ரொம்பச் சொல்ல வேண்டிய தென்ன வென்றால் நான் மிலேச்சர்களுடைய சுவாதீனமாகிவிட்டேன். பூர்வத்திலே எனக்குப் பயம் வந்தபோதெல்லாம் நீர் இரட்சித்திருக்கிறீர். இப்பவும் நீர் தான் இரட்சிக்கவேண்டும். உம்மைத்தவிர எனக்கு வேறு யாரிருக்கிறாரென்று சொல்லி கண்ணாலே கண்ணீர்

2. மதிகேடர் 3. பௌத்த அவதாரம்.

பெருக்கிக்கொண்டு சாஷ்டாங்கமாய் சேவித்துக் கைகட்டிக் கொண்டுநின்றார்.

அப்படிப்பட்டவரை பிரமதேவர்பார்த்து நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் உன் மனதுப்படியே நடக்கும். உன்னுடைய சாகைக்கு நீ போய் சுகமாயிரு நீ வருவதற்கு முன்னேதான் நான் தயா சமுத்திரனாயிருக்கப்பட்ட மகா விஷ்ணுவிடம் போய் பிரார்த்தித்தேன். அவர் பக்த பராதீனராயிருக்கப்பட்டவர். நீ சிந்தனை பண்ண வேண்டாம் உன்னுடைய அபிப்ராயத்தை அறிந்தேன். மால்வர் மாவினுடைய பிள்ளை ஷாஜி ராஜாவென்று தெற்குத் திக்கிலே மகாராஜாவாயிருக்கிறான். அவன் மகா குணசாலி. பலத்திலே வாயுக்கு சமானமாயிருக்கப் பட்டவன். மகா புண்ணியசாலி. அப்படிப்பட்டவனுடைய மனைவி மகா பதிவிரதையாய் தர்மசாலியாயிருக்கப்பட்ட ஜீஜாபாயி என்கிறவளுடைய கர்ப்பத்திலே ஜெனிக்கிறேன். என்னுடைய [1]தேசிசுபின்னை ஒரு ஸ்திரீ தரிக்கமாட்டாள். ஆகையினால் அவளுக்குக் குமாரனாய் பிறந்து உன்னுடைய மனோரதங்கள் பூரணம் பண்ணிவிக்கிறேன். வேதானு சாரமாயிருக்கப்பட்ட மதங்களை ஸ்தாபித்து யெக்கியாதிகள் பண்ணுகிற பிராமணர்களை இரட்சிக்கிறேனென்று பிரதிச்ஞை பண்ணி மாவிஷ்ணு சொல்லியிருக்கிறார். இனிமேல் நீ பயப்படாதே என்று பூமிதேவிக்குச் சமாதானம் பண்ணிச் சொல்லி அனுப்பி வைத்தார்.

## ஆறாம் அத்தியாயம்

அதன்பிறகு மகாவிஷ்ணு, தயாநிதியாயிருக்கப் பட்டவர் பூமிதேவியினுடைய பயம் தீர்ப்பதற்காகவும், லோகத்தை இரட்சிப்பதற்காகவும், மனிதரூபத்தை எடுக்க வேண்டுமென்று நினைத்து அந்த ஜீஜாபாயி அம்மாள் தன்னுடைய [2]மாலுக்குள்ளே அமுச தூளிகா தல்பத்துமேல்

---

1. தேஜஸ். 2. மால்—வீடு.

படுத்துக்கொண்டிருக்கிறவளுடைய சொப்பனத்திலே சங்கு சக்கரத்துடனே தேதீப்பியமானமாய் பீதாம்பரதாரியாய், இரத்தினகுண்டலங்கள் தரித்தவராய், பிரசன்னமுகராய், [1]துசாங்குசரேகை சின்னங்களுடைத்தானவராய், பால வேஷம் தரித்துக்கொண்டு ஜீஜாயி அம்மாளுடைய தொடைமேலே உட்கார்ந்திருந்தாற்போலே சொப்பனத்தைக்கண்டாள். உடனே அந்த விஷ்ணுவினுடைய அம்சம் கர்ப்பத்தே தரித்தாள்.

அந்தக் கர்ப்பச்சின்னங்களுடைத்தானவளாய் மகா சவுந்திரியத்தோடு இருக்கிறவளுக்கு அவளுடைய மனது பிரகாரம் தாதிகளும் உபசாரம் பண்ணிக்கொண்டு வரத்தலைப்பட்டார்கள். அப்போது அந்த அம்மாளுக்கு அபேட்சையானது என்னவென்றால் பர்வதத்தின்மேல் உட்காரவேண்டும், தீவுகளுக்குப்போகவேண்டும், யானை மேல் ஏறவேண்டும், சொர்ணமாயிருக்கப்பட்ட சிம்மாசனத்திலே இருக்கவேண்டும், [2]சுவேத சத்திரத்தினுடைய நிழலிலே இருக்கவேண்டும், [3]நிசானை பெரிசாய் நடவேண்டும், சாமரங்களினாலே விசிறவேண்டும், [4]நவபத்து நகாறாவினுடைய சத்தங்கள் கேட்கவேண்டும், ஒருத்தரோடு சண்டை போடவேண்டும், வில்லம்புகள் கையிலே பிடிக்கவேண்டும், தானதர்மங்கள் பண்ணவேண்டும் என்று இப்படிப்பட்ட அபேட்சைகள் உண்டாயிற்று.

இப்படி நாளுக்கு நாள் கிரமத்தோடு ஒன்பது மாதமான பிறகு வெகு பெரியவர்களாயிருக்கப்பட்ட ஸ்திரீகளையும் மருத்துவச்சிகளையும் அழைத்து நல்ல சிங்காரமாயிருக்கப்பட்ட வீட்டிலே போய் சாலிவாகன சகம் 1551-ஆம் வருஷம் உத்தராயணத்திலே சிசிரருது பங்குனி மாதம் கிருஷ்ண பட்சம் திரிதீயை அன்று இரவு சுபலக்கினம் சுபவேளை ஐந்து கிரகங்கள் உச்சமாயிருக்கும்போது இனி

1. துவஜ, அங்குச ரேகை. 2. வெண்குடை. 3. கொடி.
4. முரசு, பேரிகை.

மேல்பட்ட சகல சாம்ராஸ்யமும் அனுபவிக்கப் போகிறவ னென்கிற [1]சூசனையான வெகு லட்சணத்தோடு கூடிய குமாரனைப் பெற்றாள். அந்தப் பிள்ளையைப் பார்க்கும் போது சொர்ணகாந்தியும், சுருட்டை மயிரும், உயர்ந்த கழுத்தும் தாமரையிதழ்போல [2]கணங்களும், கிளிமூக்கு போல் மூக்கும் பிரசன்ன வதனமும், விசாலமாயிருக்கப் பட்ட மார்பும், நீண்ட கைகளும், இப்படிப்பட்ட பிள்ளை யைத் தாய்கள் பரர்த்து வெகு சந்தோஷப்பட்டார்கள்.

அப்போது அரண்மனை வாசலிலேயும் ஆகாச மார்க் கத்திலேயும், துந்துமிநகார் சத்தம் உண்டாயிற்று. அவ ரவர்கள் வீட்டிலேயும் மேளவாத்தியங்கள் அடிக்கத் தலைப்பட்டார்கள். நாலுதிக்கும் பிரகாசித்தது, ஆறுக ளும் நிர்மலமாயிருக்கப்பட்ட ஜலத்தோடு பிரவகித்தது. மெள்ள மெள்ளச் சுகந்தமாய் சீதளமாய் காற்று வரத் தலைப்பட்டது. பிரதட்சணமாய் அக்னிபகவான் சோபித் தான். அந்த வேளையிலே சுருதி, சுமிரிதி, மேதா, திரிதி, காந்தி, சாந்தி, [3]க்ஷசமே, [4]தயே, நீதி, கீர்த்தி, சரஸ்வதி லட்சுமி, [5]துஷ்டி, புஷ்டி, வித்தே, வினையம் இப்படிப் பட்ட தேவதைகள் எல்லோரும் அந்தப்பிள்ளை சமீபத் திலே வந்து சேர்ந்தார்கள். அந்த வேளையிலே ஷாஜி ராஜா பட்டாண்ணதரியாகான் என்கிறவனோடு யுத்தம் பண்ணவேண்டுமென்று தேசாந்திரத்துக்குப் போனபடியி னாலே புரோகிதன் சாதகர்மங்கள் விதித்தப் பிரகாரமாய் சரித்திரப் பிரகாரம் பண்ணினான். அந்தக்குழந்தை அசுரர்களை நிக்கிரகம் பண்ணவேண்டுமென்றும் தேசாந்தி ரத்துக்குப் போனபடியினாலே புரோகிதன் சாதகர்மங்கள் விதித்துப் பிரகாரமாய் சரித்திரப் பிரகாரம் பண்ணினான், அந்தக் குழந்தை அசுரர்களை நிக்கிரகம் பண்ணவேண்டு மென்றும், கோ, பிராமணர்களை இரட்சிக்க வேண்டுமென் றும், இந்த மாலோஜி ராஜா வம்சத்திலே அனாதியாயிருக்

1. சூசிகை-குறிப்பு. 2. கண்களும். 3. க்ஷமை 4. தயை.
5. துஷ்டி-சந்தோஷம்.

கப்பட்ட பகவான் இந்தப்பிள்ளை ரூபமாய் பிறந்தது என்று ஆசீர்வாதம் பண்ணினார்கள்.

அந்தக் குழந்தையினுடைய முன்பாக துவாதி சாதித்தாள். அஷ்ட வசுக்கள் ஏகாதெசிருத்திரர்கள், மருகணங்கள் எச்ச கின்னரர், கந்தருவர், சித்த சாத்திய வித்யாதரர் காமதேனு, நாரதர் முதலான தேவரிஷிகள், ரம்பை முதலான அப்சராக்கள் இந்திராதி முதலான திக்கு பாலர், அசுவனி குமாரர் சூரியன் முதலான நவக்கிரகங்கள் நட்சத்திரங்கள் வருஷம், மாசம், தினம், பட்சம், நாழி, முகூர்த்தம் இவைகளெல்லாம் [1]மூர்த்திகரித்துக்கொண்டு வந்து [2]தோஷத்திறவு பண்ணினார்கள். அதன் பிறகு ஐந்தாம் நாள் சிவதி அம்மனை எழுதி பூஜை பண்ணி அங்கே வில், அம்பு, சத்தி இன்னும் ஆயுதங்களும் வைத்து மந்திரத்தினாலே இந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணி புரோகிதன் நமஸ்காரம் பண்ணினான்.

அன்றைய தினம் இராத்திரி [3]சாகாணம் பண்ணினான. ஆறாம் நாளும் அவ்விதமே பண்ணினான். பத்தாம் நாள் சடங்கும் பண்ணினான். பதினோறாம் நாள் அந்தக் குழந்தை ஸ்நானம் பண்ணுவதற்கு தாம்பிரபரணி. காவேரி துங்கபத்திரா, கிருஷ்ணவேணி, பீமரதி, கோதாவரி, காயத்திரி, நர்மதா, யமுனை, பாகீரதி, சந்திரபாகா, கோமதி, கொண்டிகை, சரஸ்வதி, சரயூ முதலான இன்னும் சில நதிகளும், புஷ்கராதி முதலான சகல தீர்த்தங்களும் இவைகளெல்லாம் மூர்த்திகரித்துக்கொண்டு ஜனங்கள் கண்ணிலே படாமல் வந்து அந்தக் குழந்தையை அபிஷேகம் பண்ணினார்கள். சசிதேவி, தேவசேனை, சுவாகா சம்ருத்தி, சர்வமங்களா, அததீ. வினதா [4]சவுஞ்ஞியர் சாவித்திரி, அருந்ததி, இத்தியாதி முதலான லோகமாதாக்

1. உருவெடுத்து. 2. தோஷப்பரிகாரத்திற்கான தோத்திரம்.
3. சாகான்னம்—மரக்கறி உணவு. 4. ஸம்ஞை.

கள் வந்து அந்தக் குழந்தைத் தாயாருக்கு அதிரசமாயிருந்து கொண்டு அபிஷேக ஸ்நானம் பண்ணி வைத்தார்கள்.

அப்புறம் அந்த ஜிஜாபாயி அம்மாள் பீதாம்பரத்தை உடுத்துக்கொண்டு சகல ஆபரண பூஷிதையாய் அந்தக் குழந்தையை தொடைமேல் வைத்துக்கொண்டிருக்கும் போது வெகு பெரியவர்களாயிருக்கப்பட்ட சுமங்கிலிகள் வந்து ஆரத்தி எடுத்தார்கள். சிவகிரி என்கிற பிரதேசத்திலே இந்தக் குழந்தை பிறந்தபடியினாலே சிவாஜி என்று பெயர் வைத்தார். அவருடைய சாதகம் ஜோசியர் எழுதி சபையிலே கொண்டுவந்து வாசித்தது என்னவென்றால், இவர் மகா பலவந்தன், இவராலே வெகு மிலேச்சர்கள் நாசத்தை அடைவார்கள். விஸ்தாரமாய் கீர்த்தி உண்டாகும், கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு நாலு திக்கும் ஜெயிப்பான், தன்னுடைய ராஜ்யத்தைத் தர்மத்தோடு பரிபாலனம் பண்ணுவான். எப்படிப்பட்ட பலவந்தராயிருந்தாலும் அவர்களைப் பிடித்துவந்து பந்தீகானாவில் போடுவான். பாண்டிய தேசம், கர்னாடகதேசம், கேரளதேசம், காரடதேசம், விறாட, ஆங்கிர, மாளவ, ஆபீர்கூர்ஜர், ஆர்யாவர்த்த, குருசாங்கல், சவ்வீர், சௌராஷ்டிர, கோசல, பால்லீக், மாத்திர, காந்தார, திரிகர்த்த சைந்தவ, காமரூப, அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர், காம்போசி, கேகய, பாரசீக, புளிந்த, ஆரட்ட, பற்பற, மதஸ்ய, மரகத, விதேக, உத்தகல், டங்கண, கிராத, காசி, பாஞ்சல, சேதி, குணத்தள முதலான தேசங்களெல்லாம் ஜெயித்து பிருது சக்கரவர்த்தி, சிவிசக்கரவர்த்தி, மாந்தாதா, நளமகாராஜா, யயாதி, தசரதருடைய பிள்ளை ராமச்சந்திரர், சத்திய அரிச்சந்திரர், ஜனகர், தர்மராஜா இவர்கள் இந்தப் பூமியை ஏக சக்கராதிபதியாய் எப்படி ராஜ்ஜியபாரம் பண்ணினார்களோ, அந்தரீதியாய் இந்த ஷாஜிராஜாவினுடைய பிள்ளை சிவாஜிராஜா அதிர்ஷ்டவனத்தனாய், புத்தி வனத்தனாய், பராக்கியம வனத்தனாய் இருப்பானென்று பெரிய பெரிய பிரமாணர்கள், ஜோசியர்கள் சொன்னார்கள்.

அதன்பிறகு அந்தக் குழந்தை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வந்தது. அந்தக் குழந்தைக்கு நவரத்தின சகிதமாயிருக்கப்பட்ட ஆபரணங்கள் எந்தெந்த அவயவங்களுக்கு எந்தெந்த ஆபரணங்கள் போடவேண்டுமோ அந்தந்த ஆபரணங்கள் போட்டு மகா திவ்ய மங்களகரமாய் சோபிக்கும் குழந்தையைச் சவரட்சனை பண்ணிக் கொண்டிருக்கும்போது ஷாஜிராஜாவும் தரியாகானை ஜெயித்து சிவகிரிக்கு வந்தார். தன்னுடைய புத்திரனைப் பார்த்து வெகு சந்தோஷத்துடனே பொக்கிஷம் திறந்து வெகு திரவியம் ரெத்தினம், பூஷணங்கள், வஸ்திரங்கள் யானை குதிரைகள், பசுமாடுகள் பிராமணருக்குத் தானதர்மங்கள் கொடுத்தார்.

## ஏழாம் ஆண்டு

மேலும் பகவான் வந்து இந்த ரூபமாய் அவதாரம் பண்ணி யிருக்கிறாரென்று தாய் தகப்பன் அறியாது அந்தப் பிள்ளை விளையாடுவதைப் பார்த்து வெகு ஆனந்தத்தோடு வெகு சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள். க்ஷீர சமுத்திரத்திலே பள்ளிகொண்டிருக்கப்பட்ட பகவான் இந்த ஷாஜிராஜாவுக்குக் குழந்தையாகிப் பசியினாலே பாலுக்காக அழத் தலைப்பட்டான். வாமன அவதாரமெடுத்துப் பலிச் சக்கரவர்த்தியை பாதாளத்திலே போட்டு மூன்று லோகமும் ஓரடியாக அளந்த பகவான் தாயினுடைய விரலைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கத் தலைப்பட்டான். கருடாரூடராய் பதினாலு லோகமும் சஞ்சரிக்கப்பட்டப் பகவான் தாயாருடைய கையைப் பிடித்துக்கொண்டு மெள்ள மெள்ள நடக்கத் தலைப்பட்டான்.

(ஸ்ப) டிகங்களினாலே போட்ட சுவர்களிலே சூரிய பிம்ப பிரதிபலிப்பைப் பார்த்துக் கோபத்தினாலே அடிக்க(த்தலைப்பட்டா)ன். பூர்ண சந்திரனைப் பார்த்து கையிலே பிடித்துக்கொடுக்கச் சொல்லி அழுவான், பிள்ளை

விளையா (ட) தாய்மார்கள் கை கொட்டினால் அந்த லயத்துக்குச்சரியாய் தானும் கூத்தாடுவான். பிரம்மதே வருக்கு (வேதங்)களும் உபதேசம் பண்ணினவருக்கு இந்தத் தாய்கள் பேச்சுகள் சொல்லிக் கொடுக்கத் தலைப் (டார்கள்). தகப்பனாருடைய யானை குதிரை நன்றாக இல்லை என்று தான் மண் எடுத்துக்கொண்டு யானை குதிரை பண்ணத் தலைப்பட்டான். கிளிகள் கோகிலங்கள் குருவிகள் கூப்பிடுவதைப் பார்த்துத் தானும் அந்தக் குருவி களைப்போல் ஒலி எழுப்புவான். யானைக் கூப்பிடுவது போலே தானும் கூப்பிடுவான். மணலினாலே மேடை (அமைத்து) தன்னுடன் சிநேகிதமாய் விளையாடுகின்ற பிள்ளைகளுக்கு இது என்னுடைய கோட்டை (இது என்னு) டைய [1]துருக்கம் என்று சொல்லுவான். அப்படி விளையாடிக்கொண்டிருக்கிற பிள்ளையை வளர்த்துவரும் தாதிகள் தாயார வந்து சாப்பிடுவதற்கு வா! பால் குடிப்பதற்கு வா என்று கூப்பிட்டால் வருவதில்லை. கிட்டே போய் பிடிக்கப்போனால் ஓடிப்போவான். அவன் எங்கெங்கே ஓடுகிறானோ அங்கெல்லாம் இந்திராதி தேவதைகளிலிருந்து கொண்டு காப்பாற்றுவார்கள்.

இப்படிப்பட்ட பாலலீலைகளைக் காண்பித்துத் தாய் தகப்பனாருக்கு சந்தோஷம் கொடுத்துக்கொண்டிருந்தா ரென்று பரமானந்தர் பிராமணரைப் பார்த்துக் கதை சொல்லும்போது பிராமணர் கேட்டது. என்னவென்றால் அந்தச் சிவகிரி துருக்கத்திலே சிவாஜி ராஜா பிறந்தாரென்று சொன்னீரே அதிலே நமக்கு [2]சமுசயமாய் தோன்றுகிறது. அது என்னவென்றால் அந்த துருக்கம் நிஜாமனுக்கு வெகு பிரீதிகரமாயிருக்கப்பட்டதாயிற்றே அங்கு ஷாஜி ராஜா எப்படி வந்தாரென்று கேட்டதற்குப் பரமானந்தர் சொல்கிறார்.

மகாசூரனாயிருக்கப்பட்ட நிஜாமனுடைய மந்திரி அம்பர்கான் எப்போது நாசத்தை அடைந்தானோ

1. மலைமேற்கோட்டை, 2. சந்தேகமாய்.

அதனாலே நிஜாமன் மகா விசனத்தோடு இருந்தான். இதுவுமல்லாமல் அவனுடைய பெரிய சர்தார் இப்ராம்கான் என்கிறவனும் நாசத்தை அடைந்தான். அந்த இப்ராம் கானுடைய பிள்ளை மகமதுகான் என்கிறவன் தகப்பனாருடைய உத்தியோகத்தை யடைந்து வெகு பராக்கிரம சாலியாய் கர்விஷ்டனாய் டில்லிசுரனாக வேண்டுமென்று யோசனை பண்ணினான். இப்படி யிருக்கும்போது சையிதுகான் என்கிறவன் தன்னுடைய சேனையோடு தெற்குத் தேசத்துக்கு வந்தார். அந்த சேதி கேட்டு ஷாஜிராஜா முன்செய்த உபகாரத்தினாலே நிஜாமனுக்கு சகாயம் பண்ணவேண்டுமென்று எதிலிஷாவினுடைய விஜய நகரம் விட்டு புறப்பட்டுவந்தார்.

இப்படியிருக்கும்போது சாதவராஜாவும் மொகல் பாட்சாவை விட்டு விட்டு நிஜாமனுக்குச் சகாயமாய் தேவகிரிக்கு வந்தார். அப்போது நிஜாமனிடம் வெகு விசுவாசமாயிருக்கப்பட்ட விகவாச ராஜாவினுடைய வம்சத்திலே பிறந்தவன், மகா சிவபக்தான். பிரசித்தனாயிருக்கப்பட்டவன், சித்தபாலனுடைய பிள்ளை விஜய ராஜா அந்த சிவகிரி துருக்கத்திலே யிருக்கிறவனுக்கு ஜெயினத்தி பாயி என்றொரு பெண் இருந்தாள். அந்தப் பெண்ணை ஷாஜி ராஜாவினுடைய பிள்ளை சம்பாஜி ராஜாவுக்குக் கொடுக்கவேண்டுமென்று நிச்சயம் பண்ணினான். ஷாஜிராஜாவும் இவனுடைய சம்மந்தம் உத்தமமென்று தன் பிள்ளைக்கு உம்முடைய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டனுப்பினார். இருவருக்கும் வெகு சந்தோஷமாகி அவரவர்கள் பாரிசத்து உறமுறையாருக்குச் சொல்லி அனுப்பி இருவர் [1]பாரிசம் உறமுறையாரும் வந்து கூடினார்கள். அந்த சிவகிரித் துருக்கத்திலே மகா குணவதியாயிருக்கப்பட்ட ஜெயினத்தி பாயி என்கிற பெண்ணை சம்பாஜி ராஜாவுக்கு விஜய ராஜா பாணிக்கிரணம் பண்ணிக்

---

1. பாரிசம் பக்கம்

கொடுத்து [1]கல்யாண உற்சவங்கள் வெகு சந்தோஷமாய் நடத்திவைத்தார்.

அதன் பிறகு அந்தத் துருக்கத்திலே தன்னுடைய பரிவாரங்களைக் கூட்டிக் கொண்டு சம்மந்தி விஜய ராஜாவினுடைய சர்மதத்தின்மேல் தன்னுடைய பெண் சாதி கர்ப்பவதியாயிருக்கிறவளை அந்தத் துருக்கத்திலே வைத்துவிட்டு ஷாஜிராஜா தரியாகானை ஜெயிக்க வேண்டுமென்று போனார். அந்தச் சிவகிரி துருக்கத்திற்கு ஷாஜிராஜா எப்படி வந்தாரென்று கேட்டீர்களே: அங்கே வந்ததற்குக் காரணம் இதுவென்று பிராமணரைப் பார்த்து கவிந்திரர் சொன்னார்.

## எட்டாம் அத்தியாயம்

அதற்குமேல் பிராமணர் கவிந்திரரைப் பார்த்துக் கேட்டது. அந்த மகா பலசாலியாயிருக்கப்பட்ட சாதவ ராஜா டில்லீசுரனை விட்டு விட்டு இந்த மொகலன் பேரிலே யத்தத்துக்கு வரவேண்டுமென்றிருக்கும்போது அந்த சேதி நிஜாமன் கேட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந் தான். மேலும் பிராமணர் கவீந்திரர் சொன்னது. நிஜாமன் கால வசத்தினாலே பெண்கள் மோகத்தில் அதே விசனமாயிருந்து துஷ்ட மந்திரிகளும் கூடினபடி யினாலே நிஜாமனுடைய புத்திக்குப் பிரமை வந்து நல்லவனாயிருக்கப்பட்டவனும் துஷ்டனாய் தோன்றிற்று துஷ்டனாயிருக்கப்பட்டவன் நல்லவனாய் பட்டது. தன்னை ஸ்தோத்திரம் பண்ணுகிறவன் பேரிலே பிரீதி பண்ணத் தலைப்பட்டான். [2]மத்தியபிராசனம் பண்ணி சித்த சுவா தீனமில்லாமல் எல்லோரையும் துஷ்ட வசனங்கள் பேசத் தலைப்பட்டான். அதனால் ராஜ்ய ஈனதிசை அடைந்தது.

இப்படி யிருக்கும்போது ஒரு நாள் அவசரத்திலே நிஜாமனுடைய பேட்டிக்கு அந்த சாதவராஜா வந்தான்.

---

1. கல்யாணமுக உற்சவங்கள் என்றளது. 2. மதுவருந்தி

அவனுக்கு நிஜாமன் அவமானம் பண்ணினபடியினாலே அபிமானுயாயிருக்கப்பட்ட சாதவராஜா [1]முரிச்சுக் கொண்டு நடந்தான். இதற்குமுன் தானே நிஜாமன் அம்மீரிசா முதலான சர்தார்களோடு கூடியிருந்த சாதவ ராஜாவை [2]கிரித்துருவம் பண்ணவேண்டுமென்று யோசனை பண்ணியிருந்தான். அவர்கள் இந்தச் சாதவ ராஜாவை குறுக்கே வந்து மறித்தார்கள். அப்போது சாதவராஜாவுக்கும் அவர்களுக்கும் யுத்தமாகி சாதவராஜா புத்திரர்களோடு வீர சொர்க்கத்தை யடைந்தான். அது எப்படி இருந்ததென்றால் மேருவுக்குச் சலனம் வந்தாற் போலேயும், சூரியன் கீழே விழுந்தாற்போலேயும் எமனுக்கு நாசம் வந்தாற்போலேயும் சமுத்திரராஜாவுக்குத் தாகம் வந்தாற்போலேயும் இப்படியாகச் சாதவராஜாவி னுடைய சேதியை ஜனங்கள் கேட்டு வெகு விசனத்தை யடைந்தார்கள். இந்தச் சேதியை சாதவராஜாவினுடைய மாப்பிள்ளை ஷாஜிராஜா கேட்டு நிஜாமனுக்கு சகாயம் பண்ணவேண்டுமென்று வந்த யோசனையை விட்டுவிட்டு சும்மா தன்னுடைய இடத்தில் தானே இருந்துவிட்டான்.

இப்படியிருக்கும்போது மொகலனுடைய சேனை தாபீதடாவிலிருந்து நிஜாமனுடைய தேவகிரி என்னும் தாராகிரியை வந்து சுற்றிக்கொண்டது. அந்தச் சமயத்திலே எதல்ஷாவும் தன்னுடைய தளத்தைத் தாராகிரிமேல் அனுப்பி வைத்தான். இவர்கள் இரண்டுபேருடைய சேனையும் தாராகிரிமேல் யுத்தம் பண்ணத் தலைப் பட்டது, அந்தவேளை நிஜாமன் தாராகிரியிமேல்யிருந்து கொண்டு இவர்களோடு சண்டை செய்தான். அதன் பிறகு மொகலனுடைய சர்தார் முகமதுகான் என்கிறவன் நிஜாமனை ஜெயித்து அவருடைய சேனையும், பத்தே கான் என்கிற சர்தாரையும் அடித்துப்போட்டு அந்த தாராகிரியையும் பிடித்துக் கொண்டான். இந்தச் சேதியை

1. 'முறைத்துக்கொண்டு' போலும்
2. கிருத்திரிமம்-பொய் வஞ்சனை,

கவீந்திரர் செல்ல பிராமணர் கேட்டதாவது நிஜாமனுக்கு எண்பதினாயிரம் குதிரை, அதற்குத் தக்க சேனைகள். அவனுக்கு அனேகமாயிருக்கப்பட்ட தேசங்கள். துருக்கங்களாயிருக்கப்பட்டவன், சத்துருக்களுக்கு அசையாமலிருக்கப்பட்டவன் முன்னே டில்லீசுரனுடைய சேனையையும் எதல்ஷாவினுடைய சேனையையும் துரத்தித்துரத்தி அடித்தவன், எந்தக் காரணத்தினாலே அகப்பட்டு மோசம் போனானென்று பிராமணமர் கேட்க கவீந்திரர் சொல்லுறார்.

நிஜாமனுடைய மந்திரி சகல ஜனங்களுக்கும் சவரட்சனை பண்ணிக்கொண்டுவந்த அம்பர்கான் பரலோகத்துக்குப் போனபிறகு நிஜாமன் பத்தேகான என்கிறவனுக்கு [1]மந்திரித்தனம் கொடுத்தபிறகு அவன் ஜனங்களுக்கு உபத்திரவம் பண்ணத் தலைப்பட்டான். நிஜாமனும் அம்மீருசா முதலானபேர்களுடைய துற்புத்திகளைக் கேட்டு எப்போது அந்த சாதவராஜாவை அடித்தானோ அன்றைய முதற்கொண்டு ஷாஜிரராஜா முதலான சர்தார் கூட்டங்களெல்லாம் விசனத்தையடைந்து நிஜாமன் பேரிலே அவிசுவாசத்தினாலேயும் கோபத்தினாலேயும் சிறிதுபேர் எதல்ஷாவோடு போய் கூடினார்கள். சிறிதுபேர் மொகலனோடு போய் கூடினார்கள். சிறிது பேர் கோபத்தினாலே நிஜாமனோடு திரேஷம் பண்ணத் தலைப்பட்டார்கள். இப்படித் துற்புத்தியாயிருக்கப்பட்ட நிஜாமனுடைய பாபத்தினாலே அவனுடைய ராஜ்யத்தில் மழை பெய்யாமல் போய்விட்டது. அதனாலே பூமியில் பயிரில்லாமல் ஆகிவிட்டது. [2]வெகுசாய ஷசாமம் வந்த படியினாலே திரவியமுண்டானவன் ஒரு மரக்கால் ரெத்தினங்கள் போட்டு ஒரு மரக்கால் கொள்ளை வாங்கி காலட்சேபம் பண்ணினான். இல்லாதவர்கள் வயிற்றிக்கில்லாமல் கூக்குரலுடன் மனிதனுக்கு மனிதன் பிடுங்கித் தின்னத் தலைப்பட்டார்கள். நாலுகால் மிருகங்களிலே

---

1. 'மந்திரிதினம்' என்றுள்ளது. 2. விவசாயப்பஞ்சம்.

பலமாயிருக்கப்பட்ட மிருகங்கள் சிறிய மிருகங்களை அடித்துத் தின்னத் தலைப்பட்டது. இவ்வித சிரமத்தினால் சேனைகளெல்லாம் க்ஷீணகதியடைந்தது. அந்தச்சமயம் பார்த்து மொகலன் வந்து நிஜாமனை ஹதம் பண்ணி அந்த தாராகிரி துருக்கத்தை வாங்கிக்கொண்டதால் டில்லீசுரன் சந்தோஷப்பட்டான். எதல்ஷாயினுடைய சேனை அபஜெயப்பட்டு தன் தேசத்துக்குப்போய்விட்டது.

## ஒன்பதாவது அத்தியாயம்

அந்தச் சமயத்திலே ஷாஜிராஜா சிவகிரி முதலான சில துருக்கங்களை சுவாதீனம் பண்ணிக்கொண்டார். இது தவிர கோதாவரி, நீரா, பீமரதி இந்த ஆறுகள் சமீபத்திலே இருக்கின்ற தேசங்களெல்லாம் சுவாதீனம் பண்ணிக் கொண்டார். இது தவிர சைய பர்வத பிராந்தியம் சுவாதீனம் பண்ணிக்கொண்டார். அதன்பின் ஷாஜிராஜா இந்திரப்பிரஸ்த ராஜாவினுடைன் விரோதம் பண்ணினார். அந்தச் சமயத்தில் மராட்டிய தேசத்து ராஜாக்களெல்லோரும் ஷாஜிராஜா பக்கம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் யாராரென்றால் காண்டகே, காட்கர், காயகவாட, காவாடே, கோபடே, கராடே,[1] வாகே, கோர்படே இவர்களையெல்லாம் சேனாதிபதிகளாய் ஆக்கினான், அதன் பிறகு சானுகானென்கிறவன் ஷாஜிராஜாவை ஜெயிக்க வேண்டுமென்று எதல்ஷாவோடு கூடிச் சிறிது ஜனங்களையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டுவந்தான், அவர்களோடு மூன்று வருஷம் யுத்தம் பண்ணினான். அப்போது ஒரு நாள் ஷாஜிராஜாவினுடைய சொப்பனத்திலே ஈசுவரன் வந்து சொன்னது பின்வருமாறு:-

நீ மகா காந்தி வந்தனாயிருக்கப்பட்டவன், இந்த டில்லீசுரன் பலவந்தனாயிருக்கிறான். அவனோடு நீ யுத்தம் பண்ணவேண்டாம், அவன் தபசு பலன் இன்னும் சிறிது நாளிருக்கிறது. அதுவரை அவன் நாசத்தை அடைய

---

1. தொம்பர், பாண்டரே என்றுமுளது.

மாட்டான். இந்தத் துலுக்கரெல்லாம் அசுரர்களுடைய அம்சங்கள். தேவ பிராமணர்களுக்குத் திரேஷம் பண்ணுகிறவர்கள். இவர்களைச் சம்ஹாரம் பண்ணுகிற மகா விஷ்ணுவினுடைய அம்சம் உன்னுடைய பிள்ளை சிவாஜி ராஜா சிறிது நாளையிலே இந்தத் துலுக்கர்களை எல்லாம் சம்ஹாரம் பண்ணி உன் மனதுப்படி நடக்கும். நீ சும்மாயிரு என்று இவ்விதம் சொப்பனத்திலே ஈசுவரன் சொன்ன வார்த்தையைக் கேட்டு அருணோதய சமத்தில் விழித்துக் கொண்டு எழுந்திருந்தார்.

அதன் பிறகு தன்னுடைய சீமை தவிர நிஜமானுடைய சீமை [1]கட்டினம் சிறிது சீமை மொகலனுக்கும் சிறிது சீமை எதல்ஷாவுக்கும் கொடுத்து சமாதானம் பண்ணிக் கொண்டார். அதன் பிறகு எதல்ஷாவினுடைய பலங் குறைந்த படியினால் மொகலன் வந்து நிஜாமனை எவ்விதம் முழுகடித்தானோ அப்படித் தன்னையும் முழுகடிப் பானென்று யோசனை பண்ணி ஷாஜிராஜாவை சேர்த்துக் கொண்டு ஆலோசனை பண்ண வேண்டும். பூர்வத்திலே ஷாஜிராஜாவினுடைய சகாயத்திலே என்னுடைய தகப்பனார் இப்ரஹிம்கான் சத்துருக்களைச் ஜெயித்து பயமில்லாமலிருந்தார். என்னைவிட அதிகமாய் ஷாஜி ராஜாவை சவரட்சணை பண்ணினார். அவர் மகா சூரன். நான் துற்புத்தியினாலே அவருக்கு அவமானம் பண்ணின படியினாலே அவர் நம்மை விட்டு விட்டுப் பராபரியாய் போய்விட்டார். இப்பவும் அவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று யோசனை பண்ணி தன்னுடைய பிரதானியை ஷாஜிராஜாவிடம் சமாதானத்துக்கு அனுப்பி வைத்தார். அவன் போய் சமாதானம் பண்ணினான். அதற்குமேல் ஷாஜிராஜா எதல்ஷாவுக்கு சகாயம் பண்ணுறேனென்று சம்மதித்தார். அதனால் சந்தோஷப் பட்டுத் தன்னுடைய ரணதுல்லாகான் என்கிற வனைச் சேனைக் கெல்லாம் பெரியதனம் கொடுத்து அவனோடுகூட

---

1. ?

ஷாஜிராஜாவையும் கூட்டி கர்னாடக தேசம் சாதிக்க வேண்டுமென்று அனுப்பிவைத்தான்.

அப்போது பரிதுகான், யாகூப்கான், உசேன்கான், அம்பர்கான், மசூதகான் காட்டிகே, காயகவாட், கோர்படே இப்படிப்பட்ட சர்தார்களோடு ரணதுல்லா கான் புறப்பட்டு ஷாஜிராஜாவினுடைய சகாயத்தினாலே கர்னாடக தேசத்திலே வந்து இந்துபுரத்து வீரபத்திர ராஜா, விருஷ பட்டிணத்து கோங்க நாயக், காவேரிப் பட்டிணம் ஜகதேவர், சீரங்கப்பட்டிணத்துக்கண்டீரவர், தஞ்சாவூர் விஜயராகவராஜா, செஞ்சி வெங்கிட நாயக்கர் மதுரை திருமலை நாயக்கர், வித்தியாநகரம் ரெங்கராஜா அம்சகூடபுரம் தர்மகவுடராஜா, இப்படிப்பட்ட பேர்களை யெல்லாம் ஷாஜிராஜா சுவாதீனம் பண்ணிக்கொண்டு அந்த ரணதுல்லாகானுக்கு சந்தோஷம் பண்ணிகொண்டு அதன்பிறகு ரணதுல்லாகான் பெங்களூரிலே யிருக்கிற கவுடராஜாவோடு யுத்தம் பண்ணி பெங்களூர் வாங்கிக் கொண்டு ஷாஜிராஜாவுக்கு இனாயாய் கொடுத்தார்.

அங்கே பந்து ஜனங்களோடு இருந்துகொண்டு சாரி [1]சிகாரி பண்ணிக்கொண்டு தேவபிராமணர்களை ரெட் சித்துக் கொண்டிருந்தார். அப்போது சம்பாஜி, சிவாஜி இரண்டு பிள்ளைகளையும் பார்த்து ஷாஜிராஜா ஆனந்தத்தை அடைந்தார். சிவாஜிராஜா பிறந்தநாள் முதற்கொண்டு ஷாஜிராஜாவுக்கு நாளுக்குநாள் யானை கள், குதிரைகள், சீமையிலே பயிர்கள், அபிவிருத்தியாய், சாமர்த்தியமும் கீர்த்தியு முண்டாகி வெகு கோட்டை களும் துருக்கங்களும் சுவாதீனமாய் போனவிடங்களி லெல்லாம் ஜெயத்தோடு கூடினவராயிருந்தார், அப்போது சிவாஜி ராஜாவுக்கு ஏழுவயதாயிற்று. அவருக்கு வித்தியாப் பியாசம் பண்ணிவைக்கவேண்டுமென்று வாத்தியார் வைத்து அவரோடுகூட மந்திரி பிள்ளையும் சேர்த்து

1. சிகாரி—வேட்டை.

வைத்துப் படிக்கவைத்தார். அந்த வாத்தியார் முதலட்சரம் எழுதிக்கொடுத்தால் மேல் இரண்டாமச்சரம்தான் தானே எழுதத் தலைப்பட்டார். சகல லிபியும் வந்தது. இவருடைய புத்தி விசேஷத்தைப் பார்த்து வாத்தியார் இவரிடத்திலே வெகு அதிசயமாயிருக்கிறதென்று எண்ணிக் கொண்டார். சகல வித்தைகளும் வந்தன. அப்போது சிவாஜி ராஜாவுக்குப் பன்னிரண்டு வயதாயிற்று.

## பத்தாம் அத்தியாயம்

இப்படியிருக்குப்போது ஒருநாள் ஷாஜிராஜா சிவ பூஜை பண்ணி ராத்திரி நித்திரை பண்ணிக் கொண்டிருக்கும்போது சொப்பனத்திலே பார்வதிசமேதராய் ஈசுவரன் வந்து நின்றார். அவனைப்பார்த்துச் சாஷ்டாங்க மாய் நமஸ்காரம் பண்ணிக் கைகட்டிக்கொண்டு நின்றார். இவரைப்பார்த்து ஈசுவரன் சொன்னது : சூரிய வம்சத்திலே பிறந்தவனே ! மகா புத்தி வந்தனாயிருக்கப்பட்டவனே ! உனக்கு நன்மையாகக் கடவது. என்னுடைய வார்த்தை யைக் கேள். உன் இளைய பிள்ளை சிரமத்தோடு விருத்தி யடைந்து சகலமான துலுக்கரையும் சம்ஹாரம் பண்ணி இந்தப் பூமியைக் கைவசம் பண்ணிக்கொள்வான். அந்தச் சமயத்திலே என்னுடைய பார்வதி தேவி சகாயமாயிருந்து சரட்சணை பண்ணுவாள். இவன் என்னுடைய மகா பக்தன். சகல சத்துருக்களையும் சம்ஹாரம் பண்ணி இந்தப் பூபாரத்தைத் தீர்ப்பான். ஆகையினால் இந்தப் புனா பட்டண ராஜ்யத்திற்குப் பட்டம் கட்டிவை என்று இவ் விதம் சொல்லி முத்து மாலையைச் சிவாஜிராஜா கழுத்திலே போட்டாற்போல் இந்த ரீதியாய் சொப்பனத்தைக் கண்டு அருணோதயச் சமயத்திலே விழித்துக்கொண்டு எழுந்தி ருந்தார்.

நம்மிடத்திலே ஈசுவரன் பிரசன்னமானரென்று ஆச்சரியப்பட்டு அந்த மூர்த்தியினுடைய தியானத்தைப் பண்ணிக்கொண்டு சூரிய உதயமானவுடனே தன்னுடைய புரோகிதன் பிரபாகரப் பட்டன் என்பவரை அழைத்துத்

தான் சொப்பனங்கண்ட சமாசாரமெல்லாம் சொன்னார். அது கேட்டு வெகுவாய் சிலாகித்தார். அதன் பிறகு நல்ல நாள் நல்ல முகூர்த்தம் பார்த்துப் சிவாஜி ராஜாவுக்குச் புனா பட்டணத்தினுடைய ஆதிபத்தியத்தைக்கொடுத்து சிறிது யானை, குதிரை, கால்பலம், திரவியம், பிருதுகள், [1]துவசங்கள் கொடுத்துப் பிரதானிகளையும் நேமித்துச் சிறிது பந்து ஜனங்களையும் கூடக் கூட்டிப் புனா பட்டணத்துக்கு அனுப்பிவைத்தார். அவரும் கர்னாடக தேசம் விட்டுப் புறப்பட்டுப் பிறபாவசக்தி, உற்சாகசக்தி, மந்திரசக்தி யுடனே மகாராஷ்டிர தேசத்துக்கு வந்து பிரஜைகளுக்கு அனுகூலமாயிருந்துகொண்டு சவரட்சணை பண்ணிக்கொண்டு வந்தபடியினாலே அவருடைய கீர்த்தி விஸ்தாரமாயிற்று.

சிவாஜிராஜா சகல சாஸ்திரங்கள், புராணங்கள் தனுர்வித்தைகள், சகல பாஷைகள் இவற்றிலே சமர்த்தரானார். யௌவன காலமும் வந்தது. அப்போது நல்ல குலத்திலே பிறந்தவளாய் நல்ல குணசாலியாய் நல்ல லட்சணம் உடைத்தானவளாயிருக்கப்பட்ட பெண் சாதியை அடைந்து தர்மார்த்தக் காம மோட்சங்களுக்கு யோக்கியராயிருந்தார்.

## பதினொன்றாம் அத்தியாயம்

அப்போது கவீந்திரரைப்பார்த்து பிராமணர் சிவாஜி ராஜாவை புனாவுக்கு அனுப்பியபின் ஷாஜிராஜா கர்னாடக தேசத்திலே யிருந்துகொண்டு என்ன பண்ணினார். எதல்ஷா என்கிற மகமதுகான் என்ன பண்ணினார். என்று கேட்டார். அதற்குக் கவீந்திரா சொன்னது ஷாஜிராஜா தன்னுடைய புஜடலத்தினாலே கர்னாடகதேசமெல்லாம் சுவாதீனம் பண்ணிக்கொண்டபடியினாலே சகல ராஜாக்களும் அவருடைய ஆக்ஞைபடிக்கு

1. துவசம்—கொடி, விருதுக்கொடி.

புஷ்பங்களைப் பார்த்தால் எப்படிச்சிரசிலே தரித்துக்கொள் வார்களோ அப்படித் தரித்துக்கொண்டு நடந்து வந்தார்கள்.

ரணதுல்லாகான் வஞ்சனையினால் வீரபத்திர ராஜாவினுடைய சிம்மாசனத்தை வாங்கியிருந்தான். அந்தச் சிம்மாசனம் ஷாஜிராஜாவை அனுசரித்துக் கொண்டு திரும்ப அந்தச் சிம்மாசனத்தை வாங்கிக்கொண்டான். எந்தெந்த வேளையில் எப்படி யோசனை பண்ணவேண்டுமோ அப்படிப் பண்ணிக்கொண்டு வந்தபடியினாலே சகல பேரும் துலுக்கருடைய பயத்தை விட்டு விட்டார்கள். அந்த ரணதுல்லாகானும் சுவாமி காரியத்தை ஷாஜிராஜாவினுடைய யோசனை மேல் பண்ணிக்கொண்டு வந்தான். சிறிது நாளைக்குப் பிறகு அந்த ரணதுல்லாகான் பாலோகத்தை அடைந்தான். அதற்குமேல் எதல்ஷா கர்னாடக தேசத்து ராஜாக்களெல்லாம் சுவாதீனமாயிருக்கவேண்டுமென்று சிறிது சர்தார் கூட்டங்களை அனுப்பிவைத்தான். அவ்வாறு வருகிற சர்தார்களெல்லாம் ஷாஜிராஜாவைத் தானே அனுசரித்துக்கொண்டு இருந்து விட்டார்.

இந்தச் சேதி கேட்டு எதல்ஷா வெகு ஆத்திரப்பட்டு ஷாஜிராஜாவைப் பிடித்துக் கொண்டுவரவேண்டுமென்று முஸ்தபகானுக்கு சேனைகளைக் கொடுத்து அனுப்பி வைத்தான். அவன் வெகு சேனையுடனே வெகு பராக்கிரமசாலியாய் நகாறா நவபத்துகள் அடித்துக்கொண்டு வருகின்ற சேதி ஷாஜிராஜா கேட்டு இவன் மகா வஞ்சகன், பொல்லாதவனென்று அறிந்துகொண்டு தன் மேலே விசுவாசம் வரத்தக்கதாய் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று தன்னுடைய தனத்தோடு அவனுக்கு எதிரே போய் சினேகிதனைப்போல் உபசாரத்துடனே வஸ்திரங்கள், பூஷணங்கள், யானை குதிரைகள், கொடுத்து பேட்டி வாங்கிக் கொண்டு அதன் பிறகு இரண்டுபேருடைய சேனையும் கிட்டமாய் இறங்கினார்கள் இப்படியிருக்கும் போது இந்த ஷாஜிராஜாவைப் பிடிக்கவேண்டுமென்று

எத்தனம் பண்ணி சமயம் பார்ப்பானோ அந்தவேளை யெல்லாம் ஷாஜிராஜவும் உசாராயிருக்கத் தலைப் பட்டான். அதை முஸ்தபகானும் பார்த்து தன்மேல் விசுவாசம் வரத்தக்கதாய் சகல காரியங்களுக்கும் ஷாஜி ராஜாவை அழைத்து யோசனை பண்ணிக்கொண்டு, சகல காரியங்களும் பார்க்கத்தலைப்பட்டான். ஷாஜி ராஜா பேட்டிக்கு வந்தால் தானே எதிரேபோய் [1]கைலாகு கொடுத்து அழைத்துக் கொண்டு வந்துதான் இருக்கிற ஆசனத்தின் பாதியிலே அவரை உட்காாவைத்துத்தானும் உட்கார்த்து நகைத்துக்கொண்டு அன்றன்றாடுதான் பண்ணின யோசனைகளெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தான்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் அந்த முஸ்தபகான் தன்னிடமுள்ள சர்தார் கூட்டங்களையெல்லாம் அழைத்துச் சொன்னது என்னவென்றால் நாம் எவனுடைய அன்னத் தைச் சாப்பிடுகிறோமோ இந்தச் சரீரம் அவனுடையதல்லா மல் நம்முடையதல்ல, வித்தையில்லாமல் பெரியதனம் வரமாட்டாது. அறிவில்லாமல் காரியத்தைப் பண்ணக் கூடாது எப்படியோ அப்படி எஜமானனுடைய தயவில் லாமல் சௌக்கியம் வராதானபடியினாலே எஜமானனு டைய காரியத்திலே எவன் சரீரத்தை விடுகிறானோ அவனே பெரியவன். எவன் எஜமானனுடைய காரியத்திலே அஜாக்கிரதையாயிருக்கிறானே அவன் தகப்பனென்றும் தமையனென்றும் தம்பியென்றும் பந்து ஜனங்க ளென்றும் சிநேகிதனென்றும் பார்க்கக்கூடாது, எஜமான் சந்தோஷப்பட்டால் சேவுகம் பண்ணுகிறவன் சௌக்கியத் தையடைவான். எஜமானுக்கு கோபம் வந்தால் இவனுக்கு கஷ்டகாலம் பிராப்தமாகும்.

ஆகையினால் நாமெல்லாம் எஜமானனுடைய காரீயத்தின்மேல் ஜாக்கிரதையாயிருக்கிற படியினாலே

1. கைலாகு-கைகொடுத்தல் ('கயலாகுகள்' என்றுளது)

அவருடைய [1]உத்தாரப்படி ஷாஜிராஜாவை நிக்கிரகம் பண்ணவேண்டும். ஆகையினால் இன்றைய ராத்திரி போனபின் பொழுது விடியும் சமயத்திலே அவரவருடைய சேனையுடன் ஒரு மிக்க ஒன்றாய் கூட்டிக்கொண்டுபோய் ஷாஜிராஜாவைப் பிடிக்கவேண்டுமென்று சொன்னான். அவ்விதமே பண்ணுகிறோமென்று அந்தந்த சந்தார் கூட்டங்களெல்லாம் ஜாகைக்கு வந்தார்கள். என்றைய ராத்திரி இவர்கள் யோசனை பண்ணினார்களோ அன்றைய ராத்திரி ஷாஜிராஜாவினுடைய பாளையத்திலே அபசகுனங்கள் காண்பிக்கத் தலைப்பட்டது.

அது என்னவென்றால் குதிரைகள் கண்ணாலே ஜலம் பெருக்கத் தலைப்பட்டன யானைகள் கூப்பிடத் தலைப் பட்டன. தன்னிச்யைாய் நிசான்கள் ஒடிந்து கீழே விழத் தலைப்பட்டது. ஒருவரும் அடிக்காமல் நகார் சப்தம் உண்டாயிற்று சுழல் காற்று உண்டாயிற்று மேகங்களில் லாமல் ஆலங்கட்டிகள் விழத்தலைப்பட்டது. மின்னலும் மின்னிற்று விளக்குகளும் பிரகாசமாய் எரியவில்லை. இப்படிப்பட்ட அடிசகுனங்கள் கண்டும் ராஜா உஷாராக வில்லை. முஸ்தபகானுடைய சேனை தயாராயிற்று என்ற சேதி வந்தது. அப்போதும் கால விபரீதத்தினாலே ராஜா உஷாராகவில்லை.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

அருணோதய சமயத்திலே முஸ்தபகானுடைய உத்தாரம்படி திலாவர்கான், மசூதகான். சரிசாகான், யாகூப்கான், அம்பர்கான், பரீதுகான், அஜ்ஜமகான், மல்லிகுறாகனகான், ராகவசித்து, வேதசித்து, பல்லாள், சித்தாள், ஆகிய சர்தார்களெல்லாம் நகாறா நவபத்து களடித்துக்கொண்டு வந்து ஷாஜிராஜாவினுடைய கூடாரத்தைச் சுற்றிக்கொண்டார்கள். அவர்களுக்குப் பின்பலனாய் முஸ்தபகான் வந்து நின்று கொண்டான்.

1. உத்தாரம் உத்தரவு, கட்டளை.

இப்படி யிருக்கும்போது சண்டர்சிது, அப்புசிது, மானசிது, ஏசவனத்து ஆகிய சர்தார்கள் ஷாஜிராஜாவி னுடைய கூடாரத்துக்குள்ளே புகுந்து படுத்துக் கொண்டிருந்த ஷாஜிராஜாவை எழுப்பினார்கள். அவர் எழுந்திருந்து தானும் முஸ்திப்பாய் சேனைக்கும், தயாராகச்சொல்லி தாக்கீது பண்ணினி அவர்களும் தயாரானதைப்பார்த்து சத்துரு சேனையும் பயந்தது. அப்போது ஷாஜிராஜா பாரிசம் கண்ட பாட்லே என்கிற சர்தார் சீரத் தொபபி போட்டுக்கொண்டு கையிலே கத்தி கேடயம் எடுத்துக்கொண்டு குதிரைமேலேறி தனியாய் சோர்ப்படே என்கிறவன் மேலே நோக்கமாய் வருவதைப்பார்த்து முஸ்தபகானுடைய சர்தார் கூட்டங்கள் அவரைச் சுற்றிக்கொண்டார்கள். அப்போது அந்த கண்ட பாட்லே கையில் பாலா எடுத்துக்கொண்டு குதிரையைச் சுற்றவிட்டு சிறிது பேருக்குச் சிரசிலேயும் சிறிதுபேருக்கு மார்பிலேயும் சிறிதுபேருக்கு புஜத்திலேயும் இப்படி குத்தித்தள்ளத் தலைப்பட்டான். அப்படிப் பட்டவனைச் சுற்றிக் கொண்டு அம்புகளினாலேயும் கத்திகளினாலேயும் அடித்தார். அதனால் காயப்பட்டு இரத்தப் பிரவாகமாய் சண்டைபோடுகின்ற கண்ட பாட்டலுடைய சாமர்த்தியத்தைப் பார்த்து மானசிது என்கிறவன் வந்து தன் பாலாக்களியினாலே கண்டபாட்லே என்கிறவன் பாலாக்களியை முறித்துத்தள்ளினான். அதன்பிறகு அவன் கத்தியை வாங்கிக்கொண்டு வரும்போது பாஜிராஜா எதிர்ப்பட்டவன் மார்பிலே அடித்தான், அந்தக் காயத்தி னாலே பாஜிராஜா மூர்ச்சையடைந்தான்.

இதற்குள் அப்புசிது என்கிறவன் [1]பரிகாதயும் எடுத்துக்கொண்டான். மானசிது என்கிறவன் முதுகலா யுதத்தை எடுத்துக்கொண்டான். மல்லசிது பரிச்சியை எடுத்துக்கொண்டான். பலசிது பாலா வாங்கிக்கொண்டு எல்லோருமாய் வந்து கண்டபாட்லை அடிக்கும்போது

---

1. பெருத்தடிபோனிம்.

அவன் தன் கத்தியினாலே எல்லோருடைய ஆயுதங்களை யும் முறித்துத் தன் குதிரையை சக்கரம்போல் சுற்ற விட்டுக் கொண்டிருக்கும்போது பாஜிராஜா கதையை எடுத்துக்கொண்டு வந்து கண்டபாட்லை அடித்தான். அந்தக் காயத்தினால் வீரசொர்க்கத்தை அடைந்தான் அதன் பிறகு பாஜிராஜாவினுடைய சேனை ஷாஜிராஜா வினுடைய சேனைக்குக் காபிரிபடுத்தி அடிக்கும்போது ஷாஜிராஜா [1]சீரா [2]புவுத்தற் போட்டுக்கொண்டு குதிரை யிலேறி பாஜிராஜாவை அடிக்கவேண்டுமென்று வரும் போது ஆபீர்தேசத்து ராஜா தேசசிது. பான்டோலசர். யோகசிது குஞ்சாவட்டு. மேகசிது, திரும்பகராஜா, தத்தராஜா. முதலானவர்கள் ஷாஜிராஜாவை ரட்சிக்க வேண்டிச் சுற்றிக்கொண்டு வரும்போது பாஜிராஜா முதலானசர்தார் கூட்டங்கள் காஜித்துக் கொண்டு வரும் போதுகோர்ப்படே என்கிறவனுடைய சேனை ஷாஜி ராஜாவைசுற்றிக்கொண்டது.

அப்போது திரும்பகராஜாவுக்கும் மால்சித்துக்கும் சண்டை முற்றிக் கொண்டது தத்தராஜாவினுடனே கண்டசித்து சண்டையிட்டான். யோகசித்தோடு மல்ல சித்து சண்டையிட்டான். மேகசித்தோடு அம்புசித்து சண்டையிட்டான். ஷாஜிராஜாவோடு பாஜிராயர் [3]யுத்தம் பண்ணினான். இப்படிக் குதிரைக்குக் குதிரை, யானைக்கு யானை, கால்பலத்துக்குக் கால் பலன் இப்படி ஒருவருக் கொருவர் நேர்ந்துகொண்டு அடிக்கும்போது வெகு ஜனங்கள் மடிந்து விழத் தலைப்பட்டார்கள். கண்டசித்து தத்த ராஜாவினுடைய கையை அறுத்தான். மால்சித்து திரும்பகராஜாவை அடித்துத் துரத்தினான். ஷாஜிராஜா வினுடைய சேனை பின் வாங்கிற்று. அப்போது ஷாஜிராஜா அம்புகளினாலே பாஜிராஜாவை அடித்தான். அதனால் சரீரமெல்லாம் வெகு காயங்களாயிற்று பாஜிராஜாவும் பாலாக்களியினாலே ஷாஜிராஜா மார்பிலே குத்தினான்.

---

1. சீரா-கவசம்' பலாகசு 2. — ? (ஒருவகைப் போர் உடைபோலும்.) 3. 'உத்தமம்' என்றுளது.

இப்படி ஒருவருக்கொருவர் யுத்தம் பண்ணும்போது மானாஜி முதலான சர்தார் கூட்டங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு பாஜிராஜாவை ரெட்சிக்க வேண்டுமென்று ஷாஜிராஜாவை வந்து சுற்றிக்கொண்டார்கள். அப்போது அவர் கடுங்கூராயிருக்கப்பட்ட பாணங்களினாலே அடிக்கும்போது எல்லோருக்கும் காயங்கள் பட்டு இரத்தப்பிரவாகமாய் சிறிது பேர் ஓடத்தலைப்பட்டார்கள். சிறிதுபேர் ஒருமிக்கவந்து ஷாஜிராஜாவிடம் ஆயுதங்கள் வைத்துக்கொண்டிருக்கிற சேவுகரை அடித்துத் துரத்தி அவர் ஒருவர்மேல் பலர் கூடிக்கொண்டு அடிக்கும்போது அவர் குதிரையின் மேலிருந்து கீழே குதித்து அம்புக் காயங்களினாலே வெகு சிரமப்பட்டு மூர்ச்சை அடைந்தார். அப்போது பலசித்து என்கிற சர்தார் வந்து கேடயத்தினாலே, நிழல் பிடித்தான். அப்போது பாஜிராஜா ஓடிவந்து ஷாஜிராஜாவைப் பிடித்தான். அப்போது முஸ்தபகானும் வந்து கையிலே அகப்பட்ட ஷாஜிராஜாவை யானையின்மேல் உட்கார வைத்துக்கொண்டு எதல்ஷாவிடம் கொண்டுபோகும் போது ஜனங்கள் பார்த்து இந்த முஸ்தபகான் மகா பொல்லாதவன். உமக்கு வஞ்சனை செய்வதில்லை என்று மகனைத் தொட்டுக் கொடுத்தான், படிக்கும் குரானைத் தாண்டிக் கொடுத்து இப்படி விசுவாசம் காண்பித்து கபடம் பண்ணினானென்று ராஜாவும் மகா புத்திசாலியாயிருக்கப்பட்டவர் மோசம்போய் அகப்பட்டுக்கொண்டாரென்று ஜனங்கள் வெகுவாய் சொல்லத்தலைப்பட்டார்கள். ஷாஜிராஜாவினுடைய கூடாரத்துக்குள்ளே இருக்கப்பட்ட ஆயுதங்கள், பணம். காசு, வஸ்திரம், யானை, குதிரை சகலமும் கொள்ளையடித்தார்.

## பதிமூன்றாம் அத்தியாயம்

ஷாஜிராஜாவைப் பிடித்த செய்தி எதல்ஷா கேட்டு மகா சந்தோஷப்பட்டான். இந்தச் சேதி பெங்களூரிலிருக்கும் சம்பாஜிராஜா தன் தகப்பனாரைச் சத்துருக்கள்

வந்து பிடித்துக்கொண்டு போனாரென்று கேட்டு வெகு கோபமானார். சிவாஜிராஜாவும் இந்தச் சேதி கேட்டு இந்த எதல்ஷாவையும் நான் அடிக்கிறேனென்று பிரதிக்ஞை பண்ணினார்.

அதன் பிறகு இந்த மிஸ்தபகான் பெங்களூர் வாங்க வேண்டுமென்றுதான் சித்துராஜா பிராமணன் விட்டல் கோபால், பராதுகான் இவர்களோடு சேனைகளைக் கொடுத்து அனுப்பிவைத்தான். எதல்ஷா என்கிற முகமதுகானும் சிவாஜிராஜாவினுடைய தேசத்தின் மேல் பத்தேகான், மினாதுசேக்கு, ரத்னசேக்கு, சற்பசர், காட்டிசே, மத்தராஜா, பாஜினாயக்கன், பல்லாள். இவர்களை அனுப்பிவைத்தான். அவரவர் தன் சேனையோடு வந்து சிரோபலம் என்கிற துருக்கத்தைப் பிடித்தார்கள். அந்தச் சேதி சிவாஜிராஜா கேட்டுச் சிரித்துக் கொண்டு தன்னுடைய சர்தார் கூட்டங்களை அழைத்துச் சொன்னது என்னவென்றால் என் தகப்பனார் முஸ்தபகானுடைய பேச்சை விசுவாசமாயெண்ணி விசனத்தை அடைந்தார். ஆகையினால் சகல சாஸ்திரங்களும் தெரிந்திருந்தும் கடைசியிலே மோசம் போய்விட்டார். இந்த எதல்ஷாவுக்கு என்ன அபகாரம் பண்ணினார். நல்லது ஆகட்டும் இதற்குப் பலனை அனுபவிப்பான். சம்பாஜிராஜா பெங்களூரிலே யிருந்து சண்டை கொடுப்பான். நானும் கோட்டைகள் துருக்கங்களெல்லாம் சமாளித்துக்கொண்டு யுத்தம் பண்ணி ஷாஜிராஜாவை விடுவிக்கிறேன். முன் ஜெய வல்லி என்கிற ராஜ்யத்தை வாங்கிக்கொண்டு அதிலே சந்திர ராஜாவை வைத்திருக்கிறேன் கோர்ப்படே முதலானவர்கள் கருடனைக்கண்ட சர்ப்பம்போல் என்னைக்கண்டு தலையைக் கீழே போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பவும் பத்தேகான் முதலியோர் என்னோடு யுத்தத்திற்கு வந்திருக்கிறார். இந்தப் பல்லாள் சிரோபல் என்கிற துருக்கத்தை வாங்கிக்கொண்டுதான் வெகு சமர்த்தனாயெண்ணிக்கொண்டு இருக்கிறான். ஆகையினால் நீங்கள் விரைவில் போய் அந்தப் பல்லாளனை

அடித்து அந்தத் துருக்கத்தை வாங்கிக் கொள்ளுங்கள். நானும் இந்தப் பத்தேகானை அடிக்கிறேன். என்று காவுகள் என்கிற சர்தாருக்கு பெரியதனம் கொடுத்து அவரோடு கோந்து. பீமன், சிவா, ஆபீசுகன் ஆகிய சர்தார்களை நேமித்து சேனையோடுகூட அனுப்பினார்.

அந்தக் காவுகனும் சேனையோடு புரந்தறகெடி விட்டுப் புறப்பட்டு சிரோபலன் நகரத்துக்குச் சமீபமாய் போகும் போது அங்கிருக்கும் பல்லாளன் சிவாஜி ராஜாவினுடைய சேனை வந்தது என்று தன்னிடமுள்ள சர்தார்களை அழைத்துச் சொன்னது யாதெனில் நீங்கள் பயப்படாதீர்கள். சண்டையிலே சாவதல்லாது ஓடிப்போவது பெரிதல்ல, நாமும் பத்தேகானுடைய உத்தாரத்து மேல்தான் இந்த சிரோபலத்தை வாங்கினோம். இந்தத் துருக்கத்துக்கு வெளியில் இருந்துகொண்டு சண்டை கொடுத்தால் மோசம் வரும். கோட்டைக்கு உள்ளே இருந்து [1]ஆசறா பிடித்துக்கொண்டு சண்டை கொடுக்கவேண்டுமென்று எல்லோரும் ஆசறா பிடித்தார். அப்போது சிவாஜி ராஜாவினுடைய சேனாபதி என்கிற காவுகனென்கிறவன் தன்னுடைய சேனையைப் பார்த்து இந்தப்பல்லாளன் கோட்டை ஆசறா பிடித்தான். இந்தக் கோட்டைக்குக் கொத்தளங்கள் இல்லை. சுற்றிலும் அகழியுமில்லை. இது வாங்குதற்குப் பிரயாசமல்ல. ஆகையினால் நீங்கள் இந்தக் கோட்டையைச் சுற்றிக்கொண்டு உள்ளேயிருந்து ஒருவரையும் வெளியே விடாமற் வெளியேயிருந்து ஒருவரையும் உள்ளே விடாமல் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு கடப்பாரை, குந்தாளி, மண்வெட்டியினாலே சுவரை இடித்து மேலே ஏறுங்கள் என்று சொல்லி அப்படி எல்லோருங் கூடிக் கொண்டு கோட்டை அருகில் நெருங்கும்போது கோட்டைக்கு உள்ளே இருப்பவர்கள் சக்கரங்களினாலே அம்புகளினாலே உரல் உலக்கைகள் எந்திரங்கள் கடப்பாரைகள் குறக்கொள்ளிகள் கொதிக்கக் காய்ச்சின எண்ணெய்கள்

---

1. ஆசறாவாசல்-தலைவாசல்.

இவற்றினாலே அடிக்கத் தலைப்பட்டரர்கள். இவர்களும் இவர்களும் சாகசம் பண்ணி ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு சுவரிடித்து ஏணியை வைத்து மேலே ஏறினார். அந்தக் காவுகளும் கோட்டைவாசல் கதவைப் பிளந்து உள்ளே புகுந்து கைகலந்து ஒருவருக்கொருவர் அடிக்கும்போது பல்லாளனுடைய சேனை பின்வாங்கி ஓடத்தலைப்பட்டது.

அது பார்த்துப் பல்லாளன் கத்தியெடுத்துக்கொண்டு காவுகளை அடிக்க வந்தான். காவுகன் குந்தாயுதத்தினாலே பல்லாளனை அடித்துக்கீழே தள்ளினான். அவனும் வீரசொர்க்கத்தை அடைந்தான். அவனுடைய சேனை சிறிது ஓடிப்போயிற்று. சிறிதுபேர் யுத்தம் பண்ணி வீர சொர்க்கத்தை அடைந்தார். அப்போது இரத்த மாமிசங்களால் பூமி நிறைந்து போயிற்று. கைபோனவன் கால் போனவன் தலை போனவன் அந்த ரணகளத்திலே புரளத் தலைப்பட்டார்கள். இப்படிச் சண்டை பண்ணி அந்த துருக்கத்தைக் கைவசம் பண்ணிக்கொண்டு அவர்களுடைய யானை குதிரை வஸ்திராபரணங்கள் திரவியங்களெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு ஜெயத்தை அடைந்து முத்தாரங்கள் ரெத்தின ஆரங்கள் [1]சரப்பளிகள் கழுத்திலே போட்டுக்கொண்டு சன்னாகத்துடனே அங்கேயிருந்து புறப்பட்டு புரந்தற்கெடிக்கு வந்து சிவாஜி ராஜாவுக்கு முசிராப் பண்ணினான்.

## பதினான்காம் அத்தியாயம்

இப்படியிருக்கும்போது அந்தப் பத்தேகான் அயபத்துக் கானனுடைய பிள்ளை சண்டையிலே விழுந்தானென்று சேதி கேட்டு சிவாஜி பேரிலே வெகு கோபம் பண்ணி வெகு கர்வத்துடனே முசேகான் மத்தசிது இன்னும் சிறிது சர்தார் கூட்டங்களுடனே வெகு வேகமாய் புரந்தற்கெடி

1. சரப்பளி-ஓராபணரம்

சமீபத்திலே வந்து பாளையத்தோடு இறங்கினான். அதைச் சிவாஜி ராஜா பார்த்து பர்வதத்தினுடைய சிகரத்து மேலே நகாறா அடித்த சப்தத்தினாலே சத்துருக்களுடைய சேனைக்குப் பயமுண்டாயிற்று. அதற்குமேல் பத்தேகான் முசேகான் முதலான சூரர்களைப் புரந்தற்கெடிமேல் ஏறச் சொல்லி தான் பின்னே நின்றுகொண்டு பலஸத்தான் என்கிறவனையும் காட்டிக்கே என்கிறவனையும் பக்கங்களிலே வரச்சொல்லி ஏறிப்போகும்போது துருக்கத்து மேலிருந்து பிரங்கிகளினாலேயும் துப்பாக்கிகளினாலேயும் அடித்தான். அம்புகளினாலேயும் பல ஆயுதங்களினாலேயும் அடித்தார்கள். அதனால் சத்துரு சேனைகள் வெகுவாய் அடிபட்டு சிறிதுபேர் ஓடிப்போனார்கள். சிறிதுபேர் மடிந்து போனார்கள். கைபோனவன் கால்போனவன் போவதற்கு சக்தியில்லாமல் அங்கேயே கிடந்தார்கள். இவற்றையெல்லாம் முஸேகான் பார்த்துத் தன்னுடைய ஜனங்களிடம் சொன்னதாவது:

இந்தப் புரந்தற்கெடிமேல் இருக்கிறவருடைய சாமர்த்தியம் வெகு அதிகமாயிருக்கிறது. ஆகையால் நம்மை அடிப்பார்கள். வெகு உஷாராய்ப் போகவேண்டுமென்று ஏறுகிறபோது முஸேகான், மீனாதுகான், ரெத்தினாகான் இவர்களோடு பயிரவன், காட்டிக்கே, வாகே இவர்கள் பாணங்களினாலேயும் கத்திகளினாலேயும் யுத்தம் பண்ணினார். அப்போது கோந்து என்கிறவன் பாலாக்களியினாலே முஸேகானுடையா மார்பில் குத்தினான். அவன் அந்தப் பாலாவைப் பிடித்துக்கொண்டு ஒடித்துவிட்டான். சற்பசாவோடு தீர்சத என்கிறவன் வந்து யுத்தம் செய்து இரண்டுபேருக்கும் இரத்தப்பிரவாகமாயிற்று. வியாக்கிரனென்கிறவன் காட்டிக்கே என்கிறவனை புஜத்துமேல் அடித்தான். அவனும் இவனை புஜத்திலே அடித்தான். மீனாத்துகான், ரெத்தினகான் இருவரும் பயிரவனை பாணங்களினாலே அடித்தார்கள். அவனும் இவர்கள் இருவரையும் பாணத்தினாலே அடித்து ஜெயத்தை அடைந்தான்.

அப்போது அந்த புரந்தர் கெடிமேல் இரத்தநதி ஓடிற்று அந்த வேளை விமானத்திலே தேவதைகள் ஏறிக் கொண்டு சண்டை வேடிக்கை பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அந்தக் கோந்து என்கிறவன் கையிலே பட்டாக் கத்தியை வாங்கிக்கொண்டு பட்டாணிகள் நூறுபேரை இரண்டு துண்டுகளாய் வெட்டிப்போட்டான். அந்தப் பராக்கிரமத்தை முஸேகான் பார்த்துக் கத்தி எடுத்துக் கொண்டுபோய் கோந்து என்கிறவனை அடிக்கப்போனான். இதற்குள்ளே அந்த முஸேகானை இரண்டு துண்டசய் வெட்டிப்போட்டான், அதன்பிறகு சற்பசா என்கிற வனுடைய வில்லை சத என்கிறவன் பிடுங்கி ஒடித்துப் போட்டான். பின் சற்பசா என்கிறவன் பரிகாயுதத்தை எடுத்தான். அதையும் சத என்கிறவ வெட்டிப்போட்டான். அதனால் அந்த சற்பசா என்கிறவன் ஆயுதமில்லாமல் நிராயுதனாய் விலகிப்போனான். அதன்பிறகு சத்துரு வினுடைய சேனை பின்வாங்கிற்று. அதனால் சிவாஜி ராஜா வெகு சந்தோஷப்பட்டு இனிமேல் விசையபுரத்து எதிலிசாவை ஜெயிக்கவேண்டுமென்று சொல்லி ஆயத்தப் பட்டான் பத்தேகான் அபஜெயப்பட்டு விசையநகரம் போய்ச் சேர்ந்தான்,

## பதினைந்தாம் அத்தியாயம்

அந்த எதிலிசா என்கிற மகமதுகான் கேட்டு புரந்தர் கெடிமேலே போன முஸேகானும் நாசத்தையடைந்தான். பத்தேகானும் அபஜெயப்பட்டு வந்தான் என்று ராத்திரி பகல் விசனத்தோடுகூடி நாம் மிகவும் காப்பாற்றின துலுக்க சர்தார்கள் எல்லாம் மடிந்துபோனார்கள். இது என்ன ஆச்சரியம் என்று ஷாஜிராஜா நம்முடைய ஆசறா வினாலே வெகு பாக்கியத்தையடைந்து கர்வத்தை உடைத்தானவனாய் நம்முடைய ஆக்ஞை எண்ணாமல் ஷாஜிராஜா முன்னே பண்டரபுரத்துக்கிட்டே யுத்தம் பண்ணி என்னுடைய ரெணதுல்லாகானை ஜெயித்தான் பின்னும் பயமில்லாமல் அரக்கலேசுரன் என்கிறவனை

அடித்தான். கர்னாடகதேசத்து ராஜாக்களெல்லோரும் நம்முடைய ஆக்ஞை எண்ணாமல் அவரோடு கூடினார்கள். நாம் எந்தவேளையிலே அழைத்தாலும் வராது போய் விட்டார்கள். இந்த ஷாஜிராஜா நம்முடைய தகப்பனார் இப்ராமுசாஷுக்கு மிகவும் உபகாரம் பண்ணினபடியினாலே அவரும் இவர்மேல் சந்தோஷப்பட்டு வெகு பெரியதனம் கொடுத்தார். ஆகையினாலே இவருடைய நூறு அபரா தங்கள் பண்ணினாலும் நான் சகித்தேன். அதன் பிறகும் சகிக்கப்படாமலிருக்கப் பட்ட அபராதங்கள் பண்ணின படியினாலே அந்த ஷாஜிராஜாவை நிக்கிரகம் பண்ண வேண்டி முஸ்த்து பாகானனை அனுப்பிவைத்து அவரைக் கைப்பிடியாய் பிடித்துக்கொண்டு வந்தபடியினாலே அவருடைய பிள்ளை செம்போராஜா சிவாஜி ராஜா இவர் கள் இரண்டுபேரும் நம்மை ஜெயிக்கவேண்டுமென்று பல யுத்தம் பண்ணினார்கள்.

இந்த ஷாஜிராஜாவினுடைய நிமித்தியம் செம்பே ராஜா நம்முடைய பறாது கானனை ஜெயித்தான். சிவாஜி ராஜாவும் ரண களத்திலே பத்தேகானனிடம் துரத்தினான். இது என்ன ஆச்சரியம்! சிவாஜி ராஜாவினுடைய கையிலே சிம்மக்கெடி, புரந்தர் கெடி இவையிரண்டுமிருக்கிற படியினாலே அவனுக்குக் கர்வமில்லாமல் எப்படியிருப்பான். ஆனால் அந்தப் புரந்தர் கெடி வாங்குவது அசாத்தியம், பெங்களூரிலே செம்போராஜாவை வைத்ததும் புரந்தர் கெடியிலே சிவாஜி ராஜாவை வைத்ததும் பார்த்தால் நம்மை ஜெயிக்கவேண்டுமென்று வைத்தாற்போல் தோன்றுகிறது. இந்த ஷாஜிராஜாவுக்கு நிர்பந்தம் பண்ணி யிருக்கிறோமே இவரை விட்டுவிட்டால் எப்படியோ விடாமலிருந்தால் எப்படியோ என்று மனதிலே நானா பிரகாரம் யோசனை பண்ணி, நல்லது; விட்டு விட்டால் இந்த உபகாரம் மனதிலே வைத்து அனுகூலமாயிருப்பா னென்று நிச்சயம் பண்ணி தன்னிடமுள்ள புத்திமானா யிருக்கப்பட்ட மந்திரியிடம் சொன்னான். அவனும் யுக்தமாயிருக்கிறதென்று சொன்னான்.

அதன்பிறகு அந்த ஷா ஜிராஜாவை அழைத்து மங்களஸ் நானங்கள் பண்ணிவைத்து நல்ல வஸ்திரபூஷண ஆபரணங்களும் கொடுத்து ஷாஜிராஜாவை சதிரிலே அழைத்துக் கொண்டுவந்து உயரமாயிருக்கப்பட்ட ஆசனத்திலே உட்காரவைத்து வெகு உபசாரத்துடனே எதிலிசா என்னும் மகமதுகான் சொன்னது நீர் மிகவும் தெரிந்தவர். இந்தப் பிரபஞ்சத்தினுடைய சேதிகள் எல்லாம் உமக்குத்தெரியுமே. நாம் முலத்துபாகானனை உம்மிடம் அனுப்பியது திரேஷத்தினாலே அனுப்பினதல்ல. அப்படியிருந்தாலும் அது எண்ணாமல் பொறுக்கவேண்டும். அது என்னவென்றால் உம்முடைய பேட்டிக்காகப் பண்ணின காரியமேயல்லாமல் வேறில்லை. இப்போது நீர் நிர்பந்தத்திலேயிருந்து விடுபட்டீர் பெரிய குலத்திலே பிறந்தவர். ஆனபடியினாலே நமக்கு இதவாயிருக்கப்பட்டக் காரியத்திலேயிருக்க வேண்டும். பெரியவராயிருக்கப்பட்ட ஒருவர் பதினாயிரம் அபராதம் பண்ணினாலும் அவனாலே கொஞ்சம் உபகாரமிருந்தாலும் அதுவே பெரிதாய் பண்ணிக்கொண்டு சகிக்கிறார் என்று இப்படிப்பட்ட வார்த்தையினாலே உபசாரம் சொல்லி ஓ! ஷாஜிராஜாவே! உம்முடைய இளைய பிள்ளைக்கு புத்தி சொல்லி நம்முடைய சிம்மக்கெடியை விட்டுவிடச் சொல்லவேண்டும். அதன் மேல் நமக்கு வெகு ஆசையாயிருக்கிறது. பெங்களூரும் நமக்கு நேசா பண்ண வேண்டுமென்று மிகவும் உபசாரத்தோடு சொன்னான்.

இனிமேல் ரொம்ப சொல்லவேண்டிய தென்ன வென்றால் நீரும் நாமும் ஒன்று. உம்மைத்தவிர நமங்கு யாரிருக்கிறார். ஆகையினால் இந்தக்காரியம் [1]அகத்தியமாய் பண்ணவேண்டியதென்று எதிலிசா ஷாஜிராஜாவுக்கு வெகு உபசாரமாய் சொன்னதைக் கேட்டு சிரித்துக்கொண்டு அவனுடைய மனதுப்படி [2]பிரதிஉத்தரம் சொல்லி சந்தோஷம் பண்ணிவைத்தார். அதன்பிறகு எதிலிசா யானைகள் குதிரைகள் கொடுத்தனுப்பினார்.

---

1. அகத்தியம்—அவசியம். 2. பிரதிஉத்தரம்—மறுமொழி.

அது எப்படியிருந்ததென்றால் மேகங்களினாலே மறைந்திருக்கப்பட்ட சந்திரன் வெளிப்பட்டு அந்தப் பிரகாசத்தினாலே எப்படி ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்களோ அப்படி மிலேச்சருடைய கையிலே அகப்பட்டிருந்த ஷாஜி ராஜா விடுபட்டு ஜெகத்துக்கெல்லாம் ஆனந்தம் அடையப்பண்ணி வைத்துக்கொண்டு தன்னுடைய ராஜியத்துக்கு வந்துசேர்ந்தார். அதன்பிறகு ஷாஜி ராஜாவினுடைய ஆக்ஞானுசாரமாய் சம்பாஜிராஜா எதில்ஷாவுக்கு வெகு திரவியங்களும் சேனைகளும் கொடுத்துத் தன்னுடைய சத்துருக்களை ஜெயிக்கவேண்டி உத்தரம் பண்ணினார்.

இப்படியிருக்கும் போது சிவாஜிராஜா சொர்ணசர்மா என்கிறவனை அழைத்துச் சொன்னது. யாதெனில் தகப்பனாரால் சிம்மக்கொடியை விட்டுவிட்டேன். புத்தி வந்தனாயிருக்கப்பட்ட ஷாஜி ராஜா என்னுடைய சொரூபத்தை அறியாமல் இருக்கிறார். புத்திவானாயிருக்கப்பட்ட ஜனங்கள் என்னைச் சிலாகித்து சமர்த்தியவானென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அஞ்ஞானியாயிருக்கப்பட்டவன் என்னை யறியாமல் போனால் அதனாலே எனக்கு துக்கமில்லை. இவர் மகா புத்திசாலியாயிருந்துகொண்டு என்னுடைய சொரூபம் அறியாமல் போனபடியினாலே எனக்கு வெகு விசனமாயிருக்கிறது. என்னுடைய சொரூபத்தை அறிந்திருந்தால் அந்த சிம்மக்கொடியை வாங்குவதற்கு யாராலே ஆகும். இப்படி யிருக்கும்போது சத்துருவாயிருக்கப்பட்டவன் மேலே விசுவாசத்தை எண்ணியிருக்கிறார். கையாலே ஆகாதவன் சத்துருவாயிருந்தாலும் அவனை [1] உபேட்சை பண்ணக்கூடாது. அது எப்படியென்றால் தத்துக்கிளி சின்னதாயிருந்தாலும் விளக்கிலே விழுந்து எப்படி விளக்கை அணைக்கிறதோ அதுபோன்றும். சிறிதாயிருக்கப்பட்ட எறும்பு யானை துதிக்கைக்குள்ளே புகுந்தால் எப்படி யானை நாசத்தை அடைகிறதோ என்று

1. உபேட்சை—அசட்டை.

அப்படி எண்ணாமலிருக்கிறதே இது ஒரு ஆச்சரிய மல்லவோ! நல்லது ஆகட்டும் இந்த ஷாஜி ராஜாவைப் பிடித்துக்கொண்டு போய் பத்தேகானாவிலே போட்ட தற்கு அப்படிப்பட்ட சத்ருவை பதில் கிரியை பண்ணுகிறேன். இன்றைய முதற்கொண்டு நம்மைத்தொட்டு இந்த மிலேச்சர்களுக்கு நாசம் வந்ததென்று ஜெகத்திலே கீர்த்தி உண்டாகப்போகிறது. யார்யாருக்கு எப்படிப்பட்ட மிலேச்சர்களுண்டோ அவர்களை எல்லாம் என்னுடைய பாணத்தினாலே நாசம் பண்ணுகிறேன். இந்த விசைய நகரம் வாங்கவேண்டுமென்று என்னுடைய மனத்திலே யிருக்கிறது. ஆகையினால் சேனை எல்லாம் தயார் பண்ணச்சொல்லிச் சொன்னார்.

இந்தப் பேச்சுக்கேட்டு அந்த சொர்ணசர்மா சொன்னது என்னவென்றால் கேளும் ராஜாவே! பலவந்தனோடே [1]வயிரம் பண்ணலாகாது. அப்படி வயிரம் வந்தபடியினாலே பலவந்தனாயிருக்கப்பட்ட சத்துருக்கு திரவியங்கள் கொடுத்துச் சுவாதீனம் பண்ணிக்கொள்ள வேண்டும். சரிசமானமாயிருக்கப்பட்ட சத்துருக்கு நல்ல வசனம் சொல்லிச் சுவாதீனம் பண்ணிக்கொள்ளவேண்டும். துற்பலனாயிருக்கப்பட்டச் சத்துருவை சிட்சைபண்ணி சுவாதீனம் பண்ணிக்கொள்ள வேண்டும். [2]பிதுபா பண்ணுவது எல்லோருக்கும் சரிதான், இதல்லாமல் ஸ்திரி விசனத்தினாலே சரீரப்பலன் போகும். மத்திய விசனத்தினாலே சித்தத்துக்கு மோகம் வரும். சூது விசனத்தினாலே தனநாசம் வரும். லோபியா யிருக்கப்பட்டவனுக்குக் காரியம் கூடிவரமாட்டாது. நிஷ்டூரமாயிருக்கப்பட்ட வார்த்தையினாலே தரித்திரம் வரும். வேட்டையாடுவதாலே பாபம் வரும். சிட்சை பண்ணுவதாலே அபகீர்த்தி வரும். இந்த ஏழு விசனங்களும் ராஜாக்களுக்கு இருக்கலாகாது.

இதிலே ஒன்று இருந்தாலும் புத்தியைக் கெடுக்கும், இதுவல்லாமல் நீதிசாஸ்திரம் பார்க்கவேண்டும். பாராமல்

---

1. வயிரம்—சினம், பகை. 2. பிதுபா—எதிரிகளுக்கிடையே பகையை உண்டாக்குதல்.

போனால் லெட்சுமி நிற்கமாட்டாள் எப்போதும் விசனத்தோடு கூடியிருந்தால் சேவிக்கிறபேருக்குத் திருநுவதற்கு இடமுண்டாகும். சிறிதுபேர் ராஜாவை விட்டுப் போய்விடுவார்கள். சிறிதுபேர் பரவைபண்ணாமல் இருப்பார். சிறிதுபேர் சத்துருவோடு போய்ச் சேருவார். ஆகையினால் ராஜாக்கள் விசனத்தை விட்டுவிட வேண்டும். விசனத்தோடு எவனொருவன் இருக்கிறானோ அவன் யுத்தத்திலே சத்துருவினாலே ஜெயிக்கப்படுவன். நீர் ஷாஜி ராஜாவைத் தொட்டுச் சிம்மக்கொடியை சத்துருவுக்குக் கொடுத்தீர். பெங்களூரும் கொடுத்தீர். அதனால் சத்துருவுக்கு என்ன யோக்கிதாம்சம் உண்டாயிற்று இது இரண்டும் எங்கே போயிற்று. நம்முடையது நமக்கு வரவே வரும். இப்போது இந்த விஜயநகரம் வாங்க வேண்டுமென்று எத்தனம் பண்ணுகிற உமக்கு இந்தப் பூமண்டலம் எட்டுத்திக்கும் உமக்கு கைவசமாயிற்றென்று எண்ணிக்கொள்ளும்.

இராஜா மந்திரி ஆப்தமாயிருக்கப்பட்ட ஜனங்கள் திரவியம் ராஜ்யம் துருக்கங்கள் சேனை இது ஏழும் ராஜாங்கம் என்று அறிந்துகொள்ளும். இவற்றில் ஒன்று குறைந்தாலும் சத்துருக்களுக்குப் பரிகாசம் பண்ணுவதற்கு இடமாம். இந்த ஏழுக்குள்ளே ராஜா வென்கிறது-[1]மஸ்தகம், மந்திரி என்கிறது முகல், திரவியம் சேனை இது இரண்டும் இரண்டுகை, குறையுடம்பெல்லாம் ராஜ்யம், ஆப்த ஜனங்கள் துழச்சு [2]சந்துகள், துருக்கங்கள் எலும்பு இப்படி ராஜாங்கம் ஏழு என்று அறிந்து கொள்ளும். இந்த ஏழு அங்கத்தோடு இருக்கப்பட்ட ராஜாவுக்கு ஆத்மா வந்து தர்மம், ஆலோசனையே பிராணன். நீதி என்பது பலவு (ம்) நீதியில்லாமல் இருப்பவன் அபசாமர்த்தியன், சாமர்த்திய மில்லாதவன் நியாயத்தோடு தண்டனை பண்ணுவதே சௌரியம், அதர்மமே சத்ரு பரன்பரமாய் பேதம் பண்ணுவதேமதம்,

1. மஸ்த்தகம் - தலை 2. சந்துகள்-மூட்டுகள்

பேதம் பண்ணாமல் அபேதமாயிருக்கப்பட்டதே தீர்க்காயுசு. ஜனங்களுக்குச் சந்தோஷம் பண்ணிவைப்பதே பெரிய தனம். முன்யோசனை பண்ணுவதே பார்க்கிறது. காந்தியாயிருக்கப்பட்ட ரூபமே பிரதாபம், நிர்மலமாய் இருக்கப்பட்ட புத்தியே ஆயுதம் நித்திரையே பிரமாதம், நன்மையாயிருக்கப்பட்டதே சாவதானம், ஸமமென்றும் விஷமமென்றும் வயிரம் இரண்டு பிரகாரம். சமானமாயிருக்கப்பட்ட சத்துருவோடு வயிரம் பண்ணுவது சமவயிர மென்றுபேர், பலவந்தமாயிருக்கப்பட்டச் சத்துருவோடு வயிரம் பண்ணுவது விஷம் வைரமென்று பேர். சமனாயிருக்கப்பட்ட சத்துருவோடு யுத்தம் பண்ணி ஜெயிப்பது ஜெயமல்ல பலவந்தனாயிருக்கப்பட்ட சத்துருவோடு யுத்தம் பண்ணி ஜெயிப்பதே ஜெயம் என்று பேர்.

இப்போது பத்தேகானனை ஜெயித்ததினாலேயும் முலேகானனை நாசம் பண்ணினதனாலேயும் ராத்திரி பகல் உம்மேல் மகமதுஷா பொறுக்கப்படாமல் இருக்கிறான். கேளும் சிவாஜி ராஜாவே! இந்த எதிலிஷாவும் டில்லிபாட்சாவும் மிலேச்சர்கள் பலிஷ்டனாயிருக்கப்பட்டவர்கள். உன்னுடைய தேசத்துக்குச் சமீபத்திலே இருக்கிறார்கள். ஆகையினால் இங்கே இருப்பது உசிதமல்ல. எங்காகிலும் ஜெயிக்கப்படாமல் இருக்கும் துருக்கம் பார்த்து அதிலே இருந்து கொண்டு யுத்தம் பண்ணினால் இந்தப் பூமியெல்லாம் சுவாதீனம் ஆகிவிடும். தேவதைகள்கூட ஈசுவரர் கயிலாச பர்வதத்தைப்பிடித்திருக்கிறார்கள். தேவேந்திரன் மேரு பர்வதத்தைப் பிடித்திருக்கிறார். மகாவிஷ்ணு க்ஷீர சமுத்திரத்திலே இடம் பண்ணிக்கொண்டிருக்கிறார். ஆகையால் உனக்கு எத்தனை துருக்கங்கள் கெடிகவிருக்கிறதோ அதற்குள்ளே அசாத்தியமாயிருக்கப்பட்ட துருக்கத்திலே இருக்கவேண்டுமென்று இப்படி சொர்ண சர்மா சொன்ன யோக்கியமாயிருக்கப்பட்ட வார்த்தைகளைக் கேட்டு சிவாஜிராஜா இந்தப் பூமியெல்லம்

தன்னுடைய கைவசமாயிற்றென்று எண்ணிச் சந்தோஷப் பட்டார்.

## பதினேழாம் அத்தியாயம்

இப்படியிருக்கும் போது சிறிது நாளைக்கு மேல் எதிலிஷாவினுடைய பிள்ளை அல்லிஷா தன்னுடைய சேனாதிபதி அபசல்கானனை அழைத்துச்சொன்னது என்ன வென்றால் நம்முடைய துலுக்கச் சாதியாயிருக்கப்பட்ட பேருக்கெல்லாம் நீ இதவாயிருக்கப்பட்டவன். தேவ பிராமணர்களுக்குத் திரேஷமாயிருக்கிறவன். இந்தக் கலி புருஷனே உன்னுடைய ரூபமாய் பிறந்திருக்கிறான். பூர்வத்திலே ராமராஜா வம்சத்து ராஜாக்களெல்லாரை யும் யுத்தம் பண்ணி நீ ஜெயித்திருக்கிறாய், இப்படிப் பட்ட பிரதாபசாலி. நீரெங்கராஜா, கர்ணபுரத்துராஜா மதுராபுரத்துராஜா, காஞ்சிபுரத்துராஜா இவர்களோடு யுத்தம் பண்ணி ஜெயித்து வெகு திரவியங் கொண்டு வந்தாய். வீரபத்திர ராஜாவுக்குச் சத்திரச் சாமரங்கள் கொடுத்து அவனை உனக்குச் சேவகனைப்போல் பண்ணிக் கொண்டாய், சிம்மராஜா மகாசூரன், அவன்கூட உன்னைப் பார்த்துப் பயப்படுகிறான். இந்திரி பிரஸ்த ராஜாவும் உன்னுடைய பராக்கிரமத்தைக்கேட்டு ராத்திரி பகல் நித்திரையில்லாமல் இருக்கிறான். இப்படிப்பட்டவன் நீ மகாசூரனாயிருக்கும்போது சிவாஜிராஜா என்னை ஜெயிக்கவேண்டுமென்று இருக்கிறான். அவன் வெகு சூரன் உற்சாகத்தோடு தங்களுடைய தர்மங்களை விஸ்தாரமாய். வளரச்செய்துகொண்டு துலுக்கருடைய தர்மங்களெல்லாம் நாசம்பண்ணிக்கொண்டு வனத்திலே விடப்பட்ட சிம்மம் போல் பயப்படாமல் என்னுடைய ஆக்ஞை எண்ணுவ தில்லை. என்னுடைய தகப்பனார் மகமதுஷா ராஜபுரியீ சுரனை முன்பு தானே கைவசம் பண்ணிக்கொண்டபடி யினால் நல்லதாயிற்று.

இந்தச் சிவாஜி ராஜாவை ஜெயித்து ஜெயவல்லி நகரம் வாங்கிக் கொண்டான். பின் ரெங்கராஜாவுக்கு நிஜாமனு டைய தேசம் சமாதானத்துக்காக கொடுத்திருந்தான்.

அதை நமக்கு அவமானம் பண்ணிப் பிடித்துக்கொண்டான். இது அல்லாமல் இருந்தாற்போல் இருத்துவந்து நம்முடைய தேசமெல்லாம் கொள்ளையடிக்கிறான். ஒரு மாதம், பதினைந்து நாள் நடக்கிறவழி நிமிஷத்திலே வந்துவிடுகிறான். மேலும் மொகல் சீமையெல்லாம் அதிகமாய் வாங்கிக்கொண்டு அவர்களைச் சிட்சை பண்ணுகிறான் நிஜாமனுடைய ராஜ்யம் வாங்கின பிறகு டில்லி பதியாயிருக்கிறவன் இவனுடைய பயத்தினாலே விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறான். என்னுடைய பாட்டனார் ஷாஜி ராஜாவை மிகவும் ரெட்சித்தான். ஷாஜிராஜாவாள் தன்னுடைய பிள்ளைச்கு [1]சிஷ்சிக்கிரதுக்கு ஆகவில்லை. முன்னே என்னுடைய தகப்பனார் ஷாஜிராஜாவைப் பிடித்துத் திருப்ப மரியாதையோடு விட்டு விட்டார். இந்தச் சிவாஜி ராஜா சிறுபிள்ளையாயிருந்தாலும் பயப்படாமல் நம்மை ஜெயிக்கிறான். நாளுக்குநாள் இந்த சிவாஜி ராஜாவினுடை பராக்கிரமமும் பாக்கிய லெட்சுமியும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதரமாயிருக்கப் பட்ட ராஜாக்களும் அவனைத்தானே அனுசரிக்கிறார்.

இப்படிப் பலசாலியாயிருக்கப்பட்ட சிவாஜிராஜா நம்முடைய தேசத்திலும் சுவாதீனம் பண்ணிக்கொண்டான். முன்னே இந்த சிவாஜி ராஜாவை அடிக்கவேண்டுமென்று சூரனாயிருக்கப்பட்ட வெகு சர்தார் கூட்டங்களை அனுப்பி வைத்தேன். அவர்களை எல்லாம் அடித்துவிட்டதானால் இப்போது உன்னைத்தவிர இந்த சிவாஜி ராஜாவை ஜெயிப்பதற்கு ஒருவருமில்லை. ஆகையினால் நீ போய் யுத்தம் பண்ணி உயிரோடு பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று இவ்விதம் அலிஷா சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அப்சல்கான் சொன்னது என்னவென்றால் எஜமான்கள் எப்படி சொல்கிறார்களோ அப்படி செய்வது சேவுகருடைய காரியந்தான். சத்துருவை அடிக்கிற சாமர்த்தியும் எனக்கு இருக்கிறது. ஆகையினால் உத்தாரம்

---

1. சிக்ஷிப்பதற்கு

கொடுத்து அனுப்பிவைத்தால் என்னுடைய சாமர்த்தியும் தெரியவரும். அந்தச் சிவாஜீ ராஜாவைப் பிடித்து உங்களிடம் கொண்டுவந்து விடுகிறேன். கர்னாடக தேசத்திலே வெகு ராஜாக்களை நான் ஜெயித்திருக்கி றேன். இந்த சிவாஜிராஜாவை நான் ஜெயிக்காமல் போனால் என்னுடைய பவுஷியந்தானென்ன இருக்கிற தென்று இப்படிச் சொன்னதைக் கேட்டு அந்த அப்சல் கானுக்கு வெகு வஸ்திர ஆபரணங்கள் கொடுத்து யானைகள், குதிரைகள், ஒட்டைகள், சீராபச்தற். தன்னுடைய விருதுகள், பொன், வெள்ளி, போட்ட கட்டில்கள் இன்னும் வெகு சாமான், வெகு திரவியமும் கொடுத்துத் தன் கை கத்தியும் கட்டாரியும் கொடுத்து அல்லிஷா அப்சல்கானுக்கு உத்தாரம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

அப்போது அபசல்கான் தண்டகப்படிக்கு அல்லிஷா வுக்கு முசிரா பண்ணிப்போகும்போது அவனுககுச் சகாய மாய் சம்பர்கான், யாகூப்கான், பட்டரணி, மூலேகான், அசனகான், ரெணதுல்லாகான், அங்குசவான், பர்பர்கான், இலால்கான் இப்படிப்பட்டத் துலுக்கச் சர்தார்களும் இது தவிர பாண்டல் நாயக்கன், கறாட நாயக்கன், கலியாண நாயக்கன் இவர்களெல்லாம் அவரவருடைய சேனைக ளோடு அப்சல்கான் பின்னோடு அனுப்பிவைத்தார். அவனும் முகூர்த்தம் பார்த்துக்கொண்டுப் புறப்படும் போது அபசகுனமானது என்னவென்றால் காக்கைகள் கத்திக்கொண்டு இடப்புறத்திலே போயிற்று. நல்ல [1]உருமத்திலே சூரியன் பிரகாசமில்லாமல் போயிற்று, ஆகாசமார்க்கத்திலே புகை தென்பட்டது. [2]குறக்கொள்ளி கள் விழத்தலைப்பட்டது. மேகங்களில்லாமல் மினனல் மின்னிற்று. நரிகள் கூப்பிட்டன. [3]செண்டா ஒடிந்து

1. உருமம்—மத்தியானம் 2. குறைக்கொள்ளிகள்போலும்

3. செண்டா—கொடி

விழுந்து மண்ணுங்கல்லுமாய் காற்றடித்தது. சேனைக்கு முன்னே போகும் [1]நிசான் யானை நடக்க மாட்டாமல் என்ன அடித்தாலும் அங்கேயே சுற்றத்தலைப்பட்டது.

இப்படிப்பட்ட அபசகுணங்களானாலும் அதை எண்ணாமல் யுத்தம் செய்யவேண்டுமென்னும் உற்சாகத்தினாலே விஜய நகரத்திலிருந்து புறப்பட்டு ஆறுகோசத்துக்கு அப்பாலே போய் அப்சல்கான் இறங்கின அங்கே சர்தார் கூட்டங்கள் தங்கள் தங்கள் சேனையோடு வந்து சேர்ந்தார்கள். அந்தச் சேனையைப் பார்த்தால் சமுத்திரம் வந்து இறங்கினதுபோல் தோனறிற்று. அவரவர்கள் கூடாரங்கள் படுதாக்கள் போட்டது எப்படி இருந்தது தென்றால் ஆகாசத்தை மறைத்தாற்போல் இருந்தது. யானை குதிரைகளுடைய சப்தத்தினாலே நாலுதிக்கும் ஆயிற்று. இரவும் பகலும் வெகு ஜாக்கிரதையாய் பாராசவுக்கை பண்ணிக்கொண்டு வெகு கர்வத்தோடு சேனைகளுடன் அப்சல்கான் விராட தேசத்துக்குச் சமீபத்திலே வந்து இறங்கினான்.

## பதினெட்டாம் அத்தியாயம்

அதற்கு மேல் பிராமணர் கவீந்திரரைப் பார்த்துக் கேட்டது. சிவாஜி ராஜா புனாவிலே இருக்கையில் அப்சல்கான் விராட தேசத்துக்குப் போகவேண்டிய காரியமென்னவென்று கேட்கும்போது அது காரணம் சொல்கிறேனென்று கவீந்திரர் சொல்கிறார்.

அது என்னவென்றால் சிவாஜி ராஜா, பாஜிராவ், கிருஷ்ணராவ், இவர்கள் இரண்டுபேர்களுடைய தகப்பனார் சந்திரராவ் என்கிறவரை ஜெயித்து அவருடைய ஜெயவல்லி என்கிற நகரத்தை வாங்கினார். இந்தச் ஜெயவல்லி பெரிய துருக்கம். அந்தத் துருக்கத்திற்கு மலைகளே அரணாகயிருக்கிறது. ஒருவராலேயும்

1. நிசான்யானை--கொடியேந்திச்செல்லும் யானை

வாங்கப்படாமலிருக்கிற அந்த நகரத்தை வாங்கி சந்திர ராயருடைய தம்பி தமையன் எல்லோரையும் அடித்துப் போட்டார். அதில் சந்திர ராயருடைய தம்பி பிரதாபவர்மா என்கிறவன் தம்பி சிவாஜி ராஜாவினுடைய பயத்தினாலே ஓடிப்போய் எதில்ஷாவிடம் போய் வெகு உபசாரம் பண்ணினான். அவனை எதில்ஷா பயப்படாதேயென்று சிவாஜிராஜாவை அடித்து உன்னுடைய தேசத்தை உனக்கு வாங்கிக்கொடுக்கிறேனென்று பரவசமாய் சொன்னான். அதனால் அந்த பிரதாபவர்மா சந்தோஷப்பட்டு இந்த அப்துல்கானோடு கூடிக்கொண்டு பிதுபா பண்ணுகிற யோசனைகளெல்லாம் அப்துல் கானுக்கு சொல்லிக்கொண்டு விராட தேசத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தான். ஜெயவல்லி துருக்கத்துக்கு எஜமான் எவனோ அவனோடு அந்த விராடதேசம் சேர்ந்தது. சைய பர்வதம் முதற்கொண்டு இருக்கப்பட்ட சீமைகளெல்லாம் ஜெயவல்லி நகரத்தைச் சேர்ந்ததான படியினாலே அந்த ஜெயவல்லி துருக்கத்தை வாங்க வேண்டுமென்று அப்துல்கான் விராட தேசத்திற்குப் போனரென்று கவீந்திரர் பிராமணருக்குச் சொன்னார்.

அதன்பிறகு அப்சல் ஜெயவல்லி துருக்கத்தை வாங்க வேண்டுமென்று சமீபத்திலே போய் இறங்கினான். அப்போது சிவாஜி வெகு சமர்த்தனாயிருக்கப்பட்டவர் மனதிலே யோசனை பண்ணிக்கொண்டு எதல்ஷா அப்சல்கான்னை என்பேரிலே அனுப்பி வைத்திருக்கிறார், இவனும் தன்னுடைய பராக்கிரமத்தைக் காண்பிப்பான், இவனுக்குத் தயவு தாட்சண்யமில்லை, வெகு கோபிஷ்டன் பிராமணர்களைக் கண்டால் அடிக்கிறவன். தர்மத்தை நாசம் பண்ணுகிறவன், பசுக்களை சம்ஹாரம் பண்ணுகிறவன் ஆகையினால் இப்படிப்பட்டப் பாபிஷ்டனை தர்மமாயிருக்கப்பட்ட பூமியில் வைக்கக்கூடாது அடிக்க வேண்டும். இந்தப் பூமி தர்மத்தை அனுசரித்துக்கொண்டிருக்கிறான். அந்தத் தர்மத்தைத் தேவதைகள் அனுசரித்திருக்கிறார்கள். அந்த தேவதைகளை பிராமணர்கள்

பிடித்திருக்கிறார்கள். ஆசையினால் சகலத்திற்கும் பிராமணர்களே காரணம்ப்படி அப்பட்டப் பிராமணர்களை ரெட்சிக்கவேண்டும், பூசை பண்ணவேண்டுமென்றும், துஷ்டர்களைச் சம்ஹாரம் பண்ணவேண்டுமென்றும் ஸ்ரீ பகவான் அந்த யுகத்திலே அவதாரம் பண்ணித் தர்மத்தைத ரெட்சித்துக்கொண்டு வந்தார்

சங்காசுரன் வேதத்தைத் திருடிக்கொண்டு சமுத்திரத் துக்குள்ளே போய் ஒளிந்துகொண்டான். அப்படி ஒளிந்து கொண்டவனை மட்சாவதாரமெடுத்து அவனை அடித்து வேதங்களைக் கொண்டுவந்தார். கூர்மாவதாரமெடுத்து மந்தர பர்வதத்தை முதுகிலே தாங்கினார். வராக அவ தாரமெடுத்துப் பூமியைக் கடவாய்சிங்கப் பல்லினாலே எடுத்தார். நரசிம்மவதாரமெடுத்து இரணியாட்ச இரண்ய கசிபுவை அடித்துப் பிரகலாதனை ரெட்சித்தார். வாமன அவதாரமெடுத்துப் பலிச்சக்கரவர்த்தியை பாதாளத் திலே அழுக்கினார். பரசுராம அவதாரமெடுத்துக் கார்த்த வீரியார்ச்சுனன், க்ஷத்திரியர் முதலானபேரை சம்ஹாரம் பண்ணினார். ஸ்ரீராம் அவதாரமெடுத்துச் சேதுபந்தனம் பண்ணி ராவணனை சம்ஹாரம் பண்ணினார். கிருஷ்ணாவதாரமெடுத்துக் கம்சாசுரன் முதலான அரக்கர் களைச் சம்ஹாரம் பண்ணினார் அப்படிப்பட்ட ஈசுவரன் நான். இந்தப் பூபாரத்தைத் தீர்க்கவேண்டியே இந்த ரூப மாய் அவதரித்திருக்கிறேன். இந்தத் துலுக்கர் எல்லோரும் தயித்தியாளுடைய அம்சம். தன்னுடைய மதத்தினாலே தர்மத்தை முழுகடிக்கவேண்டுமென்று இருக்கிறார். இந்தத் துலுக்கரை எல்லாம்அடித்துச் சம்ஹாரம் பண்ணித்தர்மமா யிருக்கப்பட்ட மார்க்கத்தை விருத்தியாக்குகிறேன் என்று மனதிலே யோசனை பண்ணித் தன்னுடைய கெடி ஸ்தலங் கள் யெது யெது உண்டோ அவற்றையெல்லாம் ரெட்சிக்க வேண்டிய சர்தார் கூட்டங்களை வைத்துவிட்டுத் தன் கால் பலத்துடனே ஜெயவல்லி நகரத்துக்கு வந்துசேர்ந்தார்.

அதன் பிறகு சிவாஜி ராஜா ஒருவருக்கும் தெரியாமல் ஜெயவல்லி நகரத்திலே வந்துசேர்ந்து தன்னோடு சண்டை

போட வேண்டுமென்று தயாராயிருக்கிற சமாச்சாரம் அப்சல்கான் கேட்டு சிவாஜிராஜாவுக்குக் காகிதம் எழுதி அனுப்பிவைத்தான்.

அது என்னவென்றால் ஓய் சிவாஜி ராசாவே! நீ பண்ணுகிற துடுக்குத்தனம் சோறாவரியெல்லாம் எதிலிஷாவுக்கு வெகு கோபமாயிருக்கிறது, நிஜாமன் நாசத்தை அடைந்தபடியினாலே உனக்கு நல்லதாயிற்று. மொகலனுக்கு எதிலிஷா வெகு சீமை கொடுத்திருக்கிறார். அந்தச் சீமையை நீ கட்டினாய். இராசபுரியீசுவர னென்கிறவன் உன்பேரிலே வெகு கோபமாயிருக்கிறான். சந்திரராஜாவை அடித்துப் பலவந்தமாய் அவனுடைய சீமையைக் கட்டிக் கொண்டாய். கலீயாணபுரம் வாங்கினாய். பீமபுரியும் வாங்கினாய். துலுக்கருடைய ஷ்தலங்கள் எது எது உண்டோ அவற்றையெல்லாம் நாசம் பண்ணினாய். அவர்களெல்லாம் உன்பேரிலே வெகு கோபமாயிருக்கிறார். துலுக்கருடைய மதத்தை நடக்கவொட்டாமல் பண்ணினாய். இது தவிர பயமில்லாமல் சக்ரவர்த்தி ராஜாக்கள் கொடுக்கும் விருதுகளை நீ வைத்துக்கொண்டிருக்கிறாய். பொன்னாலே இருக்கப்பட்ட சிம்மாசனத்தை நடத்திக் கொண்டு வருகிறாய். யாரை வணங்கி நமஸ்காரம் பண்ண வேண்டுமோ அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணுவதில்லை. நீ சுதந்திரனாய் இருக்கிறபடியினாலே நீ எவனுக்குப் பயப்படுவாயோ அப்படிப்பட்ட என்னை எதிலிஷா அனுப்பியிருக்கிறார்.

முஸேகான் முதலான மகா சூரராயிருக்கப்பட்டவர்கள் இந்த ஜெயவல்லி நகரத்தை வாங்குவதற்கு என்னை துரிதப்படுத்துகிறார்கள். ஆகையினால் என்னுடைய ஆக்ஞையினாலே சமாதானம் பண்ணிக்கொள். சகல கெடிகளும், சகலதேசமும் இது தவிர சிம்மக்கெடி, லோககெடி, புரந்தர்கெடி. சக்கிராவதிபுரி, நீராதேசம் இவற்றையெல்லாம் நமஸ்காரத்தைப் பண்ணி டில்லீசுரனுக்குக் கொடுத்து சுகமாயிரு. சந்திர ராஜாவை அடித்து வாங்கின

இந்தச் ஜெயவல்லி நகரத்தை அல்லீஷாவுக்குக் கொடுத்து விடு என்று இவ்விதம் அப்சல்கான் காகிதம் எழுதி அனுப்பி வைத்தான்.

## பத்தொன்பதாம் அத்தியாயம்

சிவாஜி ராஜா காகிதத்தைப் படித்துப்பார்த்து அந்தப் பாவம் மனதிலே வைத்துக்கொண்டுத் தான் ஒரு யோசனையைப்பண்ணி அந்த அப்சல் சானுக்குப் பதில் காகிதம் எழுதினார். கர்நாடக ராஜாக்கள் வெகுபேரை எவன் அடித்தானோ அவனுடைய தயவு என்மேலே எப்போதாயிற்றோ அப்போதே எனக்கு அனுகூலமாயிற்று. உன்னுடைய [1]பாவுபலம் அதிகமாயிருக்கிறது. நீ பிரதாபவந்தன். சேனையும் மிகுதியாயிருக்கிறது. இந்தப் பூமண்டலமெல்லாம் உனக்கு சுவாதீனமாயிருக்கிறது. ஆகையினால் உன்னிடத்திலே எனக்குக் கபடமில்லை. இந்த வனத்திலே என்னென்ன பதார்த்தங்களிருக்கிறதோ அவற்றையெல்லாம் நீ இங்கே வந்து பார்க்கலாம். உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கு மிகவும் உள்ளது. இந்த ஜெயவல்லி நகரத்தையும் பார்க்கலாம். நீ வந்தாய் என்கிற சமாசாரம் கேட்டேன். அதனால் எனக்குச் சந்தோஷமாயிற்று, எனக்கு வெகு பாக்கியம் வரும் நீ வெகு சூரன். உன்னைத்தவிர இந்த எதிலிஷாவினுடைய சேனையைத் திரணமாய் எண்ணுகிறேன். உனக்கு வழி விட்டிருக்கிறது. நீ இங்கே வந்தால் உனக்குச் சகல கெடி ஸ்தலங்களும் கொடுக்கிறேன், நீ கேட்டதனால் இந்த ஜெயவல்லி நகரத்தையும் கொடுக்கிறேன். உன்னுடைய ரூபம் மகா பயங்கரமாயிருக்கிறது. அந்தப் பயத்தினாலே என் கைக் கத்தியும் உனக்குக் கொடுக்கிறேன். உன்னுடைய சேனையும் இந்த வனத்தைப் பார்த்துச் சுகப்படும் என்று இவ்விதம் காகிதம் எழுதி கெட்டிக்காரனாய் பார்த்து ஒரு மனிதன் கையிலே கொடுத்து அப்சல்கானிடம் அனுப்பி வைத்தார்.

---

1, பாகுபலம் - தோள்வலிமை

அந்த அப்சல்கான் காகிதத்தைப் பார்த்துக்கொண்டு அறுகாத வழிக்கப்பாலே இருக்கிற ஜெயவல்லி நகரத்தைக் கைவசமாயிற்றென்று எண்ணிக் கொண்டான், அதன் பிறகு அப்சல்கான் தன்னுடைய சேனாபதியை அழைத்துச் சொன்னது, சிவாஜி ராஜா சமாதானம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று என்னை ஜெயவல்லி நகரத்திற்கு அழைக்கிறான். சாமிகாரியம் சாதிக்கவேண்டி எனக்கு அங்கே போகவேண்டியிருக்கிறது. நீயும் சேனையோடு கூடவா. அங்கே ஒருவருக்கும் பயமில்லை. அது மகா அகோரமாயிருக்கப்பட்ட வனம். அந்த வனத்திலே ஆகாசத்தினுடைய வெளிச்சங்கூடத் தெரிவதில்லை. சிம்மங்கள், காட்டு யானைகள், புலிகள், கரடிகள் திரிந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வனத்தை நீ பார்க்கவேண்டும். அந்த வனத்திலே நம்முடைய யானைகள் சுகமாய் சஞ்சரிக்கும். எனக்குப் புத்தி மோசம் வரமாட்டாது. சிவாஜி ராஜா என்னுடைய வார்த்தைப்படி நடவாமல் போனால் இந்தப் பூமியைப் பேதிக்கப்போடுவேன், பர்வதங்களை இடித்துப் போடுவேன். சகலத்தையும் பஸ்மீகரமாய் செய்திடுவேனென்று வெகு ஆத்திரத்தோடு பேசுவதைப் பார்த்து அவனுடைய சேனாதிபதி புதிய உத்தரவு சொல்லாமலிருந்து விட்டான்.

அதன்பிறகு அப்சல்கான் பயணமாய் புறப்படும் போது சகலமான மந்திரிகளும் வந்து வெகு வணக்கத்தோடு சொன்னது. நீங்கள் செய்யும் காரியும் செய்யுங்கள். உங்கள் பேச்சுக்குத் தடை பண்ணுகிறவன் யாரிருக்கிறார். ஆனால் தெய்வ சகாயம் எங்கு இருக்கிறதோ தெரியாது. சிவாஜி ராஜா உன்னிடத்திலே விசுவாசமாயிருந்தாரானால் இந்தக் க்ஷணம் ஜெயவல்லி நகரத்தை விட்டு வெளியே வந்து உம்மைக் கண்டு முசிரா பண்ணிக் கேட்டதையெல்லாம் கொடுப்பார். இந்தச் சிவாஜி ராஜா செம்போ மகாதேவரைத் தவிர தன்னுடைய சிரசை வணங்கி ஒருவருக்கும் சலாம் பண்ணினதில்லை. சொப்பனத்திலேகூட இரண்டாம்பேரை வணங்கினதில்லை.

சிறுபிள்ளை முதற்கொண்டு இதுவரைக்கும் அவர் பண்ணின காரியங்கள் தேவதைகள் பண்ணின காரியங்கள்போலே கேட்கப்படுகிறது. இதுவுமன்றி நம் துலுக்கருடைய சாஸ்திரங்களெல்லாம் அவருக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும் தன்னுடைய தர்மசாஸ்திரப்படி நடக்கிறவன் நம்முடைய சாஸ்திரத்தை எண்ணுவதில்லை.

அப்படிப்பட்ட சிவாஜி ராஜா பயமில்லாமல் உன்னை அழைக்கிறான். ஆகையினால் அவன் மனதிலே ஒரு யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறான், இது தவிர எத்தனை மனிதரை விட்டு இந்தவழிச் சேவை பண்ணினாலும் மலையடியான படியினாலே செம்மை பண்ணப்படவில்லை. இப்படிப்பட்ட வழியிலே குதிரைகள் எப்படிப்போகும். பெரிய பெரிய விருட்சங்களெல்லாம் ஒன்றுக்கொன்று பின்னி வழியை மறித்துக் கொண்டிருக்கிறது. அதனாலே யானைகள் போக மாட்டாது. நீயானல் அல்லிஷாவினுடைய சரீ (ர)மே, டில்லிசுரனுக்கும் கூட உன்னுடைய பயமிருக்கிறது இந்தச் சேனைக்கெல்லாம்நாயகனாயிருக்கிறபடியினால் இப்படிக் கடினமாயிருக்கப்பட்ட வழியில் போகவேண்டாம்.

சிவாஜி ராஜாவானால் யோகீஸ்வரனைப்போலே ஆகாரம் நித்திரையை விட்டுவிட்டுச் சர்வக்ஞனாயிருக்கிறான். சமஸ்தான ஜனங்கள் மனதிலேயிருக்கப்பட்ட பாவங்களை அறியக்கூடியவன். பர்வதத்தினுடைய சிகரத்திலேயிருந்து குதித்து அடிக்கிற சாமர்த்தியமுண்டு சர்ப்பத்தைக் கண்டக் கருடன் எப்படி விழுந்து அடிப்பானோ அதுபோலே அடிப்பான். எத்தனைந் காதவழியிலே இருந்தாலும் நிமிஷத்திலே வந்துசேருவான். அவன் வருவது ஒருவருக்கும் தெரியாது. நீ முன்னே துளஜா பவானி அம்மனுக்கு வெகு அபகாரத்தைப் பண்ணியிருக்கிறாய். அவன் உன்னுடைய புத்திக்குப் பிரமை போட்டிருக்கிறான். சிவாஜி ராஜாவுக்குச் சகாயம் பண்ணுகிறார். ஆகையினாலே வெகு சேனையோடு சிவாஜி ராஜாவால்

ரெட்சிக்கப்பட்ட இந்தத் துருக்கம் உமக்கு எப்படிக் கைவச மாகும் என்று மந்திரிகள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கண்கள்சிவக்கப்பண்ணிக் கோபத்தோடு சேனாதி பதிகளுடைய வார்த்தைகளைத் தள்ளிப்போட்டுச் சொன்னது என்னவென்றால் வெகுநாளாய் கர்வத்தினாலே எனக்கு அபராதம் பண்ணினவன் என் முன்னே எப்படி வருவான். சிவாஜிராஜா பண்ணின காரியமெல்லாம் நீங்கள் வெகுவாய் சிலாகித்துக் கொள்கிறீர்கள். அது எனக்குத் தெரியும் என்னுடைய சாமர்த்தியம் தெரியாது. என்னு டைய குதிரைகள் போகிறவேகத்தினாலே கர்னாடக ராஜாக்களுடைய சேனை நசுங்கிப்போயிற்று. தேவதை களுடைய சேனைகளையும்கூட ஜெயிப்பேன். நான் கோபிஷ்டனென்று அறிந்து எமதர்மராஜாவும்கூட எனக் குச் சகாயமாயிருந்து என்னைச் சமாதானம் பண்ணிக் கொள்வான். ஆகையினால் இந்த ஜெயவல்லி துருக்கத்தி னுடைய மார்க்கம் வெகு கடினமாயிருந்தாலும்யெல்லாம் வெட்டி விரவிப்போடுவேனென்று இவ்விதம் சொல்லிப் புறப்பட்டான்.

## இருபதாம் அத்தியாயம்

இப்படியிருக்கும்போது பக்தர்களை ரெட்சிக்கிற துளஜா பவானி அம்மன் சிவாஜி ராஜாவுக்குப் பிரத்யட்ச மாய் தன்னுடைய ரூபத்தைக் காண்பித்தாள். அப்போது சிவாஜி ராஜா அம்மானைப் பார்த்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணிக் கைகட்டிக்கொண்டு நின்றார். அவரைப் பார்த்து அம்மன் சொன்னது: இங்கே வா குழந்தாய் இந்த அப்சல்கான் என்கிற துலுக்கன் துஷ்டன் உன்னோடு சண்டைக்கு வந்திருக்கிறான். அவன் தேவ பிராமணர்களுக்கு வெகு கண்டகனாயிருக்கிறான். என் னுடைய கபடத்தினால் அவனுடைய புத்திக்குப் பிரமை போட்டபடியினாலே என்னிடம் வருகிறான். அப்படிப் பட்டவனை கத்தியினாலே இரண்டாய் வெட்டி கீழே தள்ளிவிடு. நீ கிருஷ்ணாவதாரம் பண்ணின போது உனக்குச் சகாயமாய் நான் சொர்க்கத்திலே இருந்து

நந்தனுடைய வீட்டிலே அவதரித்தேன். இப்பவும் உனக்குச் சகாயம் பண்ணுகிற நிமித்தியம் துளஜாபுரம் விட்டு உன்னிடம் வந்தேன் உன் கையினாலே அவனுக்கு மரண மிருக்கிறதென்று இவ்விதம் சொல்லி அந்தர்தியான மானாள்.

அதைப்பார்த்து நான் சொப்பனந்தான் கண்டேனோ வென்று பிரமித்துக்கொண்டு அந்த அம்மனுடைய ரூபத்தைத் தியானம் பண்ணிக்கொண்டு சதிரிலேவந்து தன்னுடையசேனாதிபதிகளை அழைத்துச் சொன்னது, இந்த அப்சல்கான் சேனையோடு என்னுடைய சமாதானத்துக்கு வருகிறான். ஆகையினால் அந்தச் சேனை வழிக்கு நீங்கள் போக வேண்டாம். அவன் ஆயுதத்துடனே என்னுடைய பேட்டிக்கு வருகிறான். நீங்களிருந்தால் அவன் பயப்படுவான். ஆகையினால் நீங்களெல்லோரும் ஆயுதத்துடனே ஒருவருக்கும் தெரியாமல் கிட்டமாய் இந்தக் காட்டிலே மறைந்து கொண்டிருங்கள். அந்தத் துலுக்கன் வந்து சமாதான மில்லாவிட்டால் நகாராச் சத்தம் கேட்டு அவனுடைய சேனைமேல் போய் விழுந்து அடியுங்கள் என்று ரகசியமாய் சர்தார்களுக்குச் சொல்லி அனுப்பி வைத்தார்.

அதன் பிறகு அந்த அப்சல்கான் அந்தத் துருக்கத்து மலை ஓரமாய் வந்து யானைகள் குதிரைகள் ஒட்டைகள் சேனைகள் எல்லாம் மலைமேல் ஏறச்சொல்லி உத்தாரம் கொடுத்தார். அப்போது அவரவர் வெகு கடினத்தோடு மலைமேல் ஏறுகிறபோது முன்னே யானைகளும் ஏறுவதனால் அந்த மலைகளிலே இருக்கப்பட்ட கற்கள் உருண்டு பின்னால் வருகிற ஜனங்கள் பேரிலே விழுந்து அதனால் சிறிது ஜனங்கள் சேதமாகி நாசத்தை அடைந்தார்கள். இதல்லாமல் ஜனங்கள் ஏறுகிறபோது செடிகளுடைய கொம்புகளைப் பிடித்துக்கொண்டும் சின்னஞ்சிறிய செடிகளைப் பிடித்துக்கொண்டும் ஏறுகிறபோது அந்தச் செடிகளுடைய கொம்புகள் ஒடிந்து விழுகிற பேரும், செடிகளை வேரோடு பிடுங்கிக்கொண்டு விழுகிற பேரும், இப்படி

சிறிது ஜனங்கள் சேதப்பட்டுப் போனார்கள். அந்த மலை மேல் இருக்கப்பட்ட மூங்கில் குத்துகளிலே நிசானங்களும், கொடைகளும், சாமரங்களும் சிக்கிக்கொண்டு சின்னா பின்னமாய் விழத் தலைப்பட்டது.

இவ்விதம் கடினத்தோடு சேனைகளை மலைமேல் ஏற்றுவித்துப் போகும்போது இந்த ஜெயவல்லி நகரம் நமக்கு கைவசமாயிற்றென்று அப்சல்கான் மனதிலே எண்ணிக்கொண்டான். இந்த அப்சல்கான் மலைமேல் வந்த சேதி சிவாஜி ராஜா கேட்டுத் தெய்வ அனுகூலமாய் இந்தத் துலுக்கன் என் கைகளிலே அகப்பட்டுக்கொண் டான் என்று மனதிலே எண்ணிக்கொண்டார். அதன் பிறகு அப்சல்கான் தன்னுடைய சேனையை எல்லாம் குமுத வதி என்கிற ஆற்றங்கரை ஓரமாய் பதுங்கவைத்து அதற்கு மேல் அப்சல்கானனும் சிவாஜி ராஜாவும் ஒருவருக்கொரு வர் தூதுகளை அனுப்பிவித்துப் பேச்சு வார்த்தைகள் நடந்தது.

சிவாஜி ராஜா தன்னுடைய பிரதானிகளை அழைத்துச் சொன்னது; வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் யார் யாருக்கு எப்படி உபசாரம் பண்ண வேண்டுமோ அப்படிப் பண்ணவேண்டும். ஆகையினால் இந்த அப்சல்கான் பிள்ளைகளோடும் பந்து ஜனங்கள் சேனாதிபதிகளோடும் கூட வந்திருக்கிறான். அவர்கள் பேர்வழி, மூஸேகான், அங்குசகான், யாகூத்கான், அம்பர்கான், அசலைகான் முதலானோர். அவனுக்குப் பெரிய தகப்பனாராயிருக்கப் பட்ட அம்பராசகான் இன்னும் சிறிது உறவு முறை கூட்டங் கள், சர்தார் கூட்டங்கள் வந்திருக்கிறார்கள். அவரவர் களுக்குத் தக்கனையாய் பதக்கங்கள். முத்து ஆரங்கள் [1] துத்துகள், [2]சாதுராக்கள் கொடுக்கவேண்டும், அதற்கு ரெத்தின பரீஷகர்களை அழைத்து அதற்குத்தக்க எத்தினங்களைப் பண்ணிக்கொண்டு இருக்கச்சொல்லி சொன்னார்.

---

1. துத்த—கம்பளி 2. சாதரா—பொன்னாடை.

இந்தச் சேதி அப்சல்கான் கேட்டுத் தன்னிடமுள்ள வார்த்தகர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் வந்து தன்னிடமுள்ள ரெத்தினங்கள், ஆபரணங்களைக் காண்பித்தார்கள். அதெல்லாம் சிவாஜிராஜா விலைக்கு வாங்கிக் கொண்டு அவர்களையும் கிட்டே வைத்துக்கொண்டார். இந்தச்சேதி அப்சல்கான் கேட்டு சிவாஜிராஜாவுக்குத் தன் பேரிலே வெகு விசுவாசமாயிருக்கிறதென்று எண்ணிக் கொண்டு மனதிலே ஒரு உபாயத்தை நினைத்தது என்ன வென்றால் பேட்டிக்குப் போகும் போது [1]சமுதாடு ஒளி(த்து)க்கொண்டுபோய் ராஜாவிடம் போனவுடனே அந்தச் சமுதாடுவினாலே குத்தித் தேவதைகளுக்குக்கூட பயம் வரத்தக்கதாய் பண்ணவேண்டுமென்று மனதிலே நினைத்தான்.

## இருபத்தி ஒன்றாம் அத்தியாயம்

அந்த யோசனை சிவாஜி ராஜாவுக்குத் தெரிந்து இப் படிப்பட்டப் பாபிஷ்டனைப் பதில் கிரியை பண்ணவேண்டு மென்று யோசனை பண்ணினார். அதன் பிறகு சிவாஜி ராஜா தூதனிடம் சொல்லி அனுப்பினது, சேனையெல் லாம் ஒரு பக்கத்திலே வைத்து நீ மட்டும் உறை போட்ட ஆயுதத்தோடு மூன்று நான்கு பேரோடு பல்லக்கில் உட் கார்ந்துகொண்டு இந்தப் பிரதாபப் பர்வதச் சமீபத்திலே வந்து பேட்டி வாங்கு. உனக்குப் பண்ணவேண்டிய உப சாரமெல்லாம் பண்ணுகிறோமென்று சொல்லி அனுப்பு வித்தபடி அவனும் அவ்விதம் வெகு பராக்கிரம சாலியா யிருக்கப்பட்ட அப்சல்கான் அந்தப் பர்வதச் சமீபத்திலே வந்து சேர்ந்தான்.

அந்தச் சேதி சிவாஜி ராஜா கேட்டுச் செம்போ மகா தேவருடைய பூஜை பண்ணி நித்திய தானங்கள் பண்ணிக் கொஞ்ச ஆகாரமும் பண்ணி, ஆசமனியம் பண்ணிக் கொண்டு துளஜா தேவி அம்மனுடைய தியானம் பண்ணி

1. சமுதாடு—ஓராயுதம்.

அதன் பிறகு சீலை புடவைகள் போட்டுக்கொண்டு தன்னு டைய புரோகிதருக்கும் பெரிய பெரிய பிராமணர்களுக்கும் நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டுத் தயிர். அருகம் புல் அட்சதைகளைத் தொட்டு சூரிய மண்டலத்தைத் தரிசனம் பண்ணி அப்போது சொர்ண அலங்கார கோதானம் பண்ணிச் சூரர்களாயிருக்கப்பட்ட சர்தார்களைத் துருக் கத்தைச் சாவதானமாய் ரெட்சித்துக்கொண்டிருங்கள் என்று சொல்லி ஆச்ஞாபித்து தான் கத்தியும் பட்டாவும் தரித் துக்கொண்டு புறப்பட்டுப் போகும்போது ஜனங்கள் பார்த்து மகாவிஷ்ணுவானவர் கதையைத் தரித்துக் கொண்டு வந்தாலெப்படியோ அதுபோலிருந்தது என்று பாவித்துக்கொண்டார்கள்.

சிவாஜிராஜா அப்சல்கானிடம் போகும்போது அவன் ராஜாவைப் பார்த்தான். இவரும் அவனைப்பார்த்தார். சிவாஜிக்குத் தன்னிடத்திலே விசுவாசம் வரவேண்டுமென்று தன் கையிலுள்ள கத்தியை கிட்டே யிருக்கிறவன் கையில் கொடுத்து ராஜாவைப்பார்த்துப் பேசினது, என்னவென் றால் ஓய்! ராஜாவே [1]வியர்த்தமாய் யுத்தத்தை இச்சிக்கி றாய். நியாயமாயிருக்கப்பட்ட மார்க்கத்தை விட்டு நியாயம் தப்பின மார்க்கத்தில் ஏன் நடக்கிறாய், எதிலி ஷாவுக்கும் சூரனாயிருக்கப்பட்ட டில்லீசுரனுக்கும் எண் ணாமல் கர்வத்தோடு இருக்கிறாய். ஆனகயினால் உன்னைப் பிடித்துக்கொண்டு போகும் நிமித்தியமாய் நான் வந்தேன். இந்தத்துருக்கத்தை எனக்குக்கொடு. கபடமாயிருக்கப் பட்டப் புத்தியை விட்டுவிடு. எனக்குச் சரணமாய் வந்தால் நல்லது. இல்லாவிட்டால் உன்னைப்பிடித்து விசைய நகரத்துக்குக் கொண்டுபோய் அல்லிஷாவுக்கு முன்னே உன் தலையை வணக்கி, நமஸ்காரம் பண்ணிவைத்து அதன் பிறகு உன்னை ராஜாவென்று சொல்லி பாக்யத்தைக் கொடுக்கிறேன். ஆகையினால் பயத்தை விட்டுவிட்டு உன் கையினாலே என் கையைப்பிடித்து ஆலிங்கனத்தைக்

---

1. விறத்தமாய் என்றுளது

கொடு என்று இந்தப் பிரகாரம் பேசி இடது கையினாலே ராஜாவினுடைய கழுத்தைப் பிடித்து வலது கையினாலே சமுதாடு வாங்கி வயிற்றிலே வைத்தான்.

அப்போது சிவாஜி ராஜா சமத்தனான படியினாலே அவன் கையிலே அகப்பட்ட கழுத்தை விடுவித்துக்கொண்டு வயிற்றிலே வைத்த சமுதாடையும் தப்பித்துக்கொண்டு அப்சல்கானுடனே பேசினது, ஓய்! துலுக்கனே உனக்கு நான் கத்தியைக் கொடுக்கிறேன், வாங்கிக்கொள் என்று சொல்லி கத்தியினாலே முதுகு மட்டுக்கும் தடாரிச்சு உருகுறாப்போலே வயிற்றிலே குத்தினான். அது எப்படிப் போலே யென்றால் சுப்ரமணியருடைய வேலாயுதமானது கிரவுஞ்ச பர்வதத்தை எப்படி பேதிச்சுதோ அப்படிப் பேதிச்சு வயிற்றிலே இருக்கப்பட்ட குடல் வெளியே புறப் பட்டது. இரத்தப் பிரவாகமாயிற்று. அப்போது அப்சல் கான் அந்தக்குடலை கையினாலே பிடித்துக்கொண்டு கிட்டேயிருக்கிறவனைப் பார்த்துச் சொன்னது, சிவாஜி ராஜா என்னை அடித்துவிட்டான். அதற்குப் பதில் பழி நீங்கள் வாங்குங்கள் என்று சொன்னான்.

அப்போது அப்சல்கானுடைய கத்தியை அவனிடமிருக் கின்ற பிராமணன் வாங்கிக்கொண்டு நான் பிராமணனான படியினாலே என்னை சிவாஜி ராஜா அடிக்க மாட்டா ரென்று எண்ணிக்கொண்டு கத்தியினாலே சிவாஜி ராஜாவை அடிக்க வந்தான். பிராமணனை அடிக்கலாகா தென்று சிவாஜி ராஜா எண்ணி அந்தக்கத்தி வெட்டை தப்பித்துக்கொண்டு தன் கத்தியினாலே அப்சல்கானுடைய கழுத்தை அறுத்துப்போட்டான். அப்போது அப்சல் கானுடைய சிரசு கீழே விழுந்தது. பர்வதத்தினுடைய சிகரம் கீழே விழுந்தால் எப்படி முண்டமாய் இருக்குமோ அப்படி முண்டமாய் கீழே விழுந்தான், அப்போது சிவாஜி ராஜா தேவேந்திரனைப் போலே சோபித்தான். அப்சல் கானுடைய சிரசொருபக்கம் தலையொரு பக்கம், குட லொருபக்கம், தலைப்பாகை ஒரு பக்கம், முத்து ஆரங்கள்

பதக்கங்கள் ஒரு பக்கம் இப்படி மூலைக்கு மூலையாய் விழுந்து புரண்டது.

இந்தச் சேதி அப்சல்கானுடைய சர்தார் கூட்டங்கள் கேட்டு ஓடி வந்து அப்சல்கானுடைய அவஸ்தைகளைப் பார்த்து வெகு ஆக்கிரத்தினாலே சிவாஜி ராஜாவை அடிக்கவேண்டுமென்று எல்லோருமாய் ஏகோபித்துக் கொண்டுவந்த பேர்வழிகள் யாரென்றால் சையிதுகான். அதுல்கான், படேகான், சையிதகான், ரஹீம்கான், துர்மது கான் இது தவிர அப்சல்கானுடைய தமையன் பிள்ளைகள், பயில்வான்கான், மகாமானிகான், மகானுவையகான், பிலி சித்தகான், சங்கர்கான் இன்னும் சிறிது சூரர்களாயிருக்கப் பட்டபேர் எல்லோருமாய் முஸ்தீப்புடனே வருகிறபோது சிவாஜிராஜா பட்டாக்கத்தியை திருப்பிக்கொண்டு ஒரு வரையும் கிட்டே வரவொட்டாமல் சுற்றிக்கொண்டு ஆகாசத்திலே கிளம்பி அங்கிருந்து கீழே வருவான். கீழே பார்த்தால் பக்கத்திலே வருவான். பக்கத்திலே பார்க்கும் போது ஆகாச மார்க்கத்திலே கிளம்புவான்.

இப்படி நாலு திக்கும் பட்டாக்கத்தியினாலே திருப்பிக் கொண்டு அவர்களுடைய கண் பார்வையிலே அகப்படாத படிக்குச் சுற்றிக்கொண்டிருக்கும்போது சிவாஜிராஜாவினு டைய சர்தார் கூட்டங்கள் வந்த பேர்வழி சம்பன், காவுகீயன், இங்களே, குண்டசிது, யோகோசிது, கிருஷ்ண சிது, சூரசிது, காண்டகர், விசுவசிது, முருமகர், சுரவீர், இபராம்கான், பர்பர்கான், இப்படிப்பட்ட மஹாவீரர்கள் சிம்மகர்ஜனை பண்ணிக்கொண்டும் கத்திகளை உருவிக் கொண்டும் அப்சல்கானனுடைய சர்தார்களோடு எதிர்த்து யுத்தம் பண்ணத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய அட்டகாசம் ஆகாசம் வரைக்கும் வியாபித்தது. இப்படி ஒருவருக்கொருவர் அடிக்கும்போது அப்சல்கானனுடைய சர்தார் கூட்டங்களிலே சிறிதுபேர் தலைகள் அறுந்து கீழே விழுந்தது. சிறிதுபேர் கை போனவனும், கால் போனவனும் இப்படியாய் அதமாய் போய்விட்டார்கள்.

இந்தச் சண்டை எப்போது நடந்ததென்றால் சாலிய வாகன சகம் [1]குருநாஅம்க-(௲) விகாரி [2]சம்வச்சரம் மார்கழி-மீ சுக்கில பட்சம் சப்தமி குருவாரம் மத்தியானம் சமயத்திலே தேவ பிராமணர்களுக்குக் கண்டகனாயிருக்கப் பட்ட அப்சல்கான் செத்தான், அப்போது தென்றல்காற்று வெகு சீதமாய் வாசனைகளோடு அடிக்கத் தலைப்பட்டது. அதைப்பார்த்துப்பிராமணர்கள் வெகு சந்தோஷப்பட்டார்கள். சகலமான தேவதைகளும் வெகு சந்தோஷப்பட்டுத் தங்கள் தங்களுடைய ஸ்தானத்திற்குப் போனார்கள். சத்துருவுடைய சர்தார் கூட்டங்களை அடித்து ஜெயத்தோடு துர்க்கத்துமேலே ஜெயபேருகை அடித்தார்கள்.

## இருபத்திரண்டாம் அத்தியாயம்

அந்தச் சப்தத்தைக்கேட்டு சிஜாஜி ராஜாவினுடைய சர்தார் கூட்டங்கள் பதுங்கியிருந்தவர்கள் யாரென்றால் சவுலட்சிகன், கமலசித்து, யேதோசித்து, கங்கசித்து, தானசித்து, மல்லசூரன், குண்டசித்து, வற்கலன், ராமன், பாங்காரிகன் இப்படிப்பட்ட வீரர்கள் பதினாயிர கால் தளம் நாராயணன் என்கிற பிராமணன் ஐயாயிரம் கால் தளம் இப்படி இருபது முப்பதினாயிரங் கால்தளத்தோடு சத்ருவுடைய தளத்தைப்போய் மறித்தார்கள். அப்சல்கானுடைய சேனைகள் அப்சலாகான் செத்தானென்று சமாச்சாரம் கேட்டுக் காபிரிப்பட்டுச் சிவாஜி ராஜாவினுடைய கால் தளங்கள் வழி மறித்ததைக் கண்டு அப்சலாகானுடைய சர்தார் கூட்டங்கள் மதம் போன யானைகள் போல, விஷம்போன சர்ப்பம் போலே, சிகரமில்லாத பர்வதம் போலே, ஜலமில்லாத மேகம் போலே, தனமில்லாத ராஜாவைப் போலே, அம்சலாகானில்லாத படியினாலே அப்படித்தோன்றிற்று.

அப்போது அப்சலாகானனுடைய பிள்ளைகள் மூன்று பேர் தகப்பன் செத்த சேதிகேட்டுச் சமுத்திரத்திலே ஓடம்

---

1. சக வருஷம்—1581. 2 வருஷம்.

முழுகினால் அந்த ஓடத்தில் இருக்கப்பட்ட ஜனத்துக்கு எப்படி ஜீவனுடைய ஆசை விட்டுப்போமோ அப்படி யாயிற்று. அதன் பிறகு மகாசூரனாயிருக்கப்பட்ட முஸேகான் என்கிற பட்டாணி எஜமான் பெயரிலேயிருக்கப் பட்ட விசுவாசத்தினாலே ஓடிப்போகும் சர்தார் கூட்டங் களை நிறுத்தி அப்சலாகான் சுவாமி காரியத்திலே ஜீவன் திரணமாய் எண்ணிச் செத்தான். நீங்கள் ஓடிப்போகிறீர் களா? நாலு பக்கமும் மலையான படியினாலே நீங்கள் எங்கே போகிறீர்கள். ஆகையினால் நின்று யுத்தம் பண்ணுங்கள் என்று ஓடிப்போகிறவர்களைவிடாமல் மறித்து எமனைப்போலே பயங்கரனாயிருக்கப்பட்ட முஸேகான் கையிலே கத்திபிடிதுக்கொண்டுக் குதிரை மேலேறிச் சேனை யைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அசனகான் என்கிறவனும் தன்னுடைய சேனையோடு அவனுடன்கூட வந்தான். அவர்களுக்கும் சிவாஜி ராஜாவினுடைய சேனை களுக்கும் அம்புகளினாலேயும், கத்திகளினாலேயும், பட்டாவுசளினாலேயும், பாணங்களினாலேயும் சண்டை மூத்திக்கொண்டது.

அப்போது கால் போனவனும், தலைபோனவனும் கை போனவனும், உடல் இரண்டு துண்டமாய் போனவனும் இப் படிச் சின்னாபின்னயாய் முஸேகானுடைய குதிரைபோய் கையிலே யிருக்கப்பட்ட கத்திபோய் பயந்து ஓடத்தலைப் பட்டான். யாகூத்துகான். அசனகான் அப்சலாகானுடைய மூத்தமகன் இவர்களெல்லோரும் வேஷம் மாற்றிக்கொண்டு ஓடிப்போவதை சிவாஜி ராஜா வினுடைய சேனை மறித்துக்கொண்டது.

இப்படியிருக்கும்போது ஷாஜிராஜாவினுடைய தம்பி மம்பாஜிராஜாவும் சத்துரு சேனைகளோடுயுத்தம்பண்ணிப் பராதுகானனுடைய பிள்ளை ரெணதூல்கானைப் பிடித் தான். இன்னும் சிறிது சர்தார் கூட்டங்களையும் பிடித்துப் பந்தனம் பண்ணினார்கள். அப்போது ஜெயவல்லி நகரத்துக்குச் சமீபமாய் ரெணபூமியிலே அவரவர்களுடைய

ஆயுதங்கள் ஆபரணங்களினாலேயும் அந்த ரெணபூமி நிறைந்தது. [1]பூத, பிரேத, சாகினி, டாகினிகளுக்கெல்லாம் சந்தோஷமாயிற்று.

## இருபந்திமூன்றாம் அத்தியாயம்

அதன் பிறகு சிவாஜிராஜா தன்னுடைய சர்தார் கூட்டங்களை அழைத்து வெகு உபசாரம் சொல்லி வஸ்திர பூஷணங்கள் கொடுத்துச் சந்தோஷம் பண்ணிவைத்து சத்துருவுடைய சர்தார் கூட்டங்கள் அகப்பட்டபேரை எவரெவர்களை எப்படி சிட்சை பண்ணவேண்டுமோ அப்படிச் சிட்சை பண்ணினார். சத்துரு சேனைகளிலேயிருக்கப்பட்ட ஆயுதங்கள் வஸ்திர பூஷணங்கள் திரவியங்கள் இவற்றை யெல்லாம் கொண்டுவந்து கோட்டையிலே சேர்த்தார்.

இதல்லாமல் முன்னே சிவாஜிராஜா இந்த அப்சலாகானை அடிக்க வேண்டுமென்று ஜெயவல்லி நகரத்துக்குப் புறப்படும்போது ஒரு குதிரை சர்தாரை சத்துருவுடைய ராஜ்யத்தைக் கட்டச் சொல்லி அனுப்பியிருந்தார். அவனும் அவ்விதம் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். இதல்லாமல் சத்துருவுடைய பாரிசத்திலிருந்து சிறிது சர்தார் கூட்டங்கள் சிவாஜிராஜாவினுடைய ராஜ்யத்தைக் கட்டுவதற்குப் புறப்பட்டிருந்தார்கள். அவர்களில் யாதவகான் என்கிறவன் சூராப்பக்கெடியை வாங்கினான். பாண்டற்கானென்கிறவன் சிரோபல் நகரத்தை வாங்கினான். கராட்டகானன் சாகசவடம் என்கிற நகரத்தை வாங்கினான். இலாலுகான் என்கிறவன் பூனா ராஜ்யத்தைக் கட்டினான். சையிப்புகான் என்கிறவன் தலகொங்கணமென்கிற துருக்கத்தைச் சுவாதீனம் பண்ணிக்கொண்டான்.

இதல்லாமல் சிவாஜி ராஜாவினுடைய சர்தார் பார்த்து இவர்களை யெல்லாம் அடிக்கிறேனென்று

---

1. பூத, பேத, சாகினி, டாகி என்றுளது.

ஏழாயிரம் குதிரை, ஏழாயிரம் கால்தளங்கள் இவற்றோடு போகும்போது சிவாஜி ராஜா அந்தச் சர்தாருக்குச் சொல்லி அனுப்பினது. அப்சலாகான் என்னோடு சமாதானம் பண்ண வேண்டி ஜெயவல்லி நகரத்துக்கு வந்திருக்கிறான். அந்த மனசு பார்த்துக்கொண்டு அதன் பிறகு நீ புறப்பட்டு போவென்று சொல்லி அனுப்பினதைக் கேட்டு அப்புறம் போகாமல் நடுவழியிலே தானேயிருந்தான். அதன் பிறகு அப்சலாகானுக்கும் சிவாஜி ராஜாவுக்கும் சண்டையான சேதி கேட்டு அந்த சர்தார் விராடதேசத்துக்கு வந்தான். இங்கே சிவாஜி ராஜா அப்சலாகானனை அடித்த பின்பு முஸேகான் முதலான பேர் சண்டை போட்டு நிர்வாகமில்லாமல் நாலு திக்கும் ஓடுகிறபோது அந்தக் காட்டிலே வழிதெரியாமல் பயத்தினாலே கற்பாறை மறைவிலேயும் செடிமறைவிலேயும் காட்டுமறைவிலேயும் ஒளிந்துகொண்டு சிவாஜிராஜாவினுடைய சிப்பாய்கள் இதோ வந்தார்கள் அதோ வந்தார்கள். அடிக்கவென்று காபிரிப்பட்டுக்கொண்டு அந்தக் காட்டிலே ஜனங்கள் ஓடும்போது கற்பாறைமேலே விழுந்து மடிந்துபோன பேரும். முட்களால் கிழிபட்டுக் காயம்பட்ட பேரும் இப்படியாகக் காபிரிப்பட்டுக்கொண்டிருக்கும்போது சந்திரராஜாவினுடைய தர்பி பிரதாபவர்மா என்கிறவன் நாலைந்து பேரோடு ஓடிப்போகிறவனை இவர்கள் கண்டு இவனாலல்லவோ இந்தயட்டுக்கும் நாசமாயிற்றென்று இவனை அடித்துப்போட வேண்டுமென்று வரும்போது அந்தப் பிரதாப வர்மா இந்தத் துலுக்கருடைய காலிலே விழுந்து நல்ல வார்த்தை சொன்னான்.

நல்லது ஆகட்டும். இந்தக்காட்டிலே ஒருவருக்கும் தெரியாமலிருக்கப்பட்ட வழிகளெல்லாம் உனக்குத் தெரியுமே எந்த வழியிலே ஆகட்டும் நம்மெல்லோரையும் இந்தக் காடு தாண்டி அப்புறம் கொண்டுபோய்விடு விராட தேசத்துக்குப் போய் உனக்கு உபகாரம் பண்ணுகிறோமென்று சொன்னான். அவனும் ஒருவருக்கும்

தெரியாமலிருக்கப்பட்ட வழியிலே அழைத்துக்கொண்டு தகப்பன் விராட தேசத்திலே வைத்திருந்த யானை, குதிரைகள், திரவியங்கள் பெண்கள் இவர்களை அழைத்துக் கொண்டு ஓடும்போது அந்த சிவாஜிராஜாவினுடைய சர்தார் முன்னே போயிருந்தவன் இந்தச் சேதிக் கேட்டு வந்து வளைத்துக்கொண்டான்.

அதன்பிறகு சிவாஜிராஜாவும் அல்லீஷாவினுடைய தேசத்தைக் கட்ட வேண்டுமென்று சேனையோடு கூச்சி நகறா அடித்துக்கொண்டு விராட தேசத்துக்கு வந்து சத்துரு கூட்டங்கள் எவரெவர் எந்தெந்த கெடிகள் கட்டினார்களோ அவர்களையெல்லாம் அடித்துக்கொண்டு விராட தேசத்துக்கு வந்து அந்தத் தேசங்களெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டு நிஷ்களங்கமாய்ப்பண்ணி கிருஷ்ணாதீரத்திலேயிருக்கப்பட்ட பிராமணர்களையும் சேவித்துப் பின் தன்னுடைய சேனாபதியை முன்னே அனுப்பிக் குறை அல்லீஷாவினுடைய தேசங்களைக் கட்ட வேண்டுமென்று சந்தனம வந்தனம் என்ற இரண்டு கெடிகளை முற்றுகையிட்டுக்கொண்டிருக்கும்போது முன்னே அப்சல்கான் தெண்டம் பிடித்துத் துரத்திவிட்ட யாதவர்கள் வந்த சிவாஜிராஜாவுக்கு நமஸ்காரம் பண்ணி உபசாரம் பண்ணினபேரை, நீங்கள் நம்முடையவர் களென்று வெகுமானம் பண்ணினார்.

அதன்பிறகு சிவாஜிராஜா கட்டுவாங்கம் என்கிற கெடி, மாயவனம், ராமபுரம், கலதவுதம், பால்லவம், ஆங்ஜெயம், அஷ்டநாமகம், வடக்கிராமம், வேலாபுரம், உதும்புரம், சூரனாமகம், கராட்டனாமகம், சூரப்பனாமகம் பல்லினாமகம், நேரளனாமகம், காமநகரம், விசுராமபுரம் பரவுனாமகம், உளான்நாமகர், கோலங் கரவீரபுரம் இப்படிப்பட்டக் கெடிகளும் கோட்டைகளும் சுவாதீனம் பண்ணிக்கொண்டு அங்கேயிருக்கப்பட்ட ஜனங்களுக் கெல்லாம் அபயம் கொடுத்துத் தன்னுடைய அகத்திலே

வைத்துக்கொண்டு பனாளா என்கிற கெடியை வந்து சுற்றிக்கொண்டார்கள். அந்தத் துருக்கத்திலேயிருக்கிற வர்கள். மேகம்போலே கர்ஜினை பண்ணிக்கொண்டு பாணங்களினாலேயும் பீரங்கியினாலேயும் அடித்தார்கள்.

சிவாஜிராஜாவினுடைய சர்தார் கூட்டங்களும் பாணங்கள் வரிஷிச்சு அந்த பனாளா என்கிற கெடி மேலேறிக் குதித்து விழுந்து சத்தருஜனத்தைக் கத்திகளி னாலே யுத்தம் பண்ணி அடித்து, அந்த துருக்கத்தைக் கைவசம் பண்ணிக்கொண்டு அங்கே சேனைகளெல்லாம் வைத்துத் தனக்கு ஆப்தமாயிருக்கிற சர்தார் கூட்டத்தோடு அங்கிருக்கப்பட்ட குளங்களும் நடவாவிகளும் சிங்காரத் தோட்டங்களும் ஆச்சரியகரமாயிருக்கப்பட்டதையெல்லாம் பார்த்துச் சந்தோஷகரமாய் இருந்தார். அதன்பிறகு அப்சலாகான் செத்துப்போன பிற்பாடு தப்பிஓடிப்போன சர்தார் கூட்டம் முஸேகான், பாசில்கான், யாகூத்கான், அங்குசகான், அசனகான், அபுசித்துகான் இவர்களெல் லோரும் விசையநகரம் போய்ச் சேர்ந்து தங்களுடைய எஜமானன் அல்லீஷாவுக்கு முசிரா பண்ணி தலைவணங்கிக் கொண்டு வெட்கத்தோடு நின்றார்கள்.

## இருத்திநான்காம் அத்தியாயம்

அந்தப் பெரிய சருதாராயிருக்கப்பட்ட முஸேகானைப் பார்த்து அல்லீஷா சொன்னது: அப்சலாகான் சுவாமி காரியத்திலே வெகு சாகசம் பண்ணியிருந்தாற்போலே யிருந்துச் செத்துப்போனான். இனிமேல் விசனப்பட்டுக் காரியமென்ன? சிவாஜிராஜா கவடுபண்ணி ஒண்டியாய் அழைத்துக் காந்தமாயிருக்கிற இடத்திலே அப்சலாகான னை அடித்துப்போட்டான். அவன் சேனையோடு இருந்தா னானால் அவனுக்கு இந்த அவதி வராது சாகசம் பண்ணினதினாலே காரியம் கூடி வரப்போகுதல், நல்லது ஆகட்டும் சிவாஜி ராஜா பாம்பினுடைய பல்லிலே தலைவைத்தான். ஆகையினால் அவனை உபேட்சைப் பண்ணியிருக்கலாகாது நமக்கு வெகு அபகாரத்தைப்

பண்ணியிருக்கிறான். ஆகையினால் சிர்மக்கொடியை வாங்கிக்கொண்டு பழிக்குப்பழி வாங்குவேன். சிவாஜி ராஜாவும் விராட தேசத்திலே வந்து சேனைகள் சேகரம் பண்ணிக்கொண்டு பனாளா என்கிற கொடியைச் சுற்றிக் கொண்டு இருக்கிறார்களென்று சேதி வந்திருக்கிறது.

ஆகவே நீங்களெல்லோரும் ஒன்றாய் அந்தந்தக் கெடிகளிலேயிருக்கிற சர்தார்களையும் கூட்டிக்கொண்டு சத்துருவை ஜெயிப்பதிலே உஷாராய் சேனையை முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு புறப்படுங்கள். பராகதூானனுடைய பேரன்ருஸத்து மகான் யுத்தத்திலே சமர்த்தன். அவனுக்குச் சேனாதிபதியாய் பண்ணிகாரியத்தைப் பாருங்களென்று சொன்னார். அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு சர்தார் கூட்டங்களெல்லாம் முசிரா பண்ணி விசையா நகரம் விட்டு வெளியே புறப்பட்டார்கள்.

இப்படியிருக்கும்போது சிவாஜிராஜா பனாளா வாங்கினாரென்று அரிக்காரர் வந்து சேதி சொன்னார். அதனால் வெகு கோபத்தோடு அல்லீஷா சேனையை முஸ்தீப்புப் பண்ணினாரென்று சிவாஜி ராஜா கேட்டு அந்தப் பனாளாக் கெடியைக் காப்பாற்றுவதற்குப் பெரிய சர்தாராய்ப் பார்த்து வைத்தான் சேனை முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு சத்துருவாயிருக்கப்பட்ட றாஸத்துமகானனுடைய எதிரே நடந்தார். அந்த ருஸத்து மகான் சிவாஜி ராஜாவினுடைய தனத்தைப் பார்த்துப் பாசில்கான் முதலான பேரோடு சொன்னது சிவாஜி ராஜாவினுடைய தனம் வருவதைப் பாருங்கள்' அந்தச் சேனையிலே மகாசூரனாய் பலசாலியாய் பேர் பெற்றவராய் சர்தார் கூட்டங்கள் வருகிறது. சிவாஜி ராஜாவும் தேவதைகளுக்குச் சமானமாய் இருக்கப்பட்டவன். ஆகையினால் நீங்கள் சர்தார் கூட்டங்களெல்லோரும் தங்கள் தங்களுடைய சேனையோடு முஸ்தீபாய் சண்டை முகத்திலே நில்லுங்கள். நானும் வில் அம்பு எடுத்துக் கொண்டு சேனைக்கு நடுவிலே நின்றுகொண்டு சேனையைக் காப்பாற்றுகிறேன். பாசில்கான் என்கிறவன் சேனை

யோடு இடது பக்கத்திலே வரட்டும். சாதாத்துகான், மல்லிக்கு இது பார்கான், வலது பக்கத்திலே வரட்டும். பத்தேகான், உல்லாக்காண் இவர்கள் இரண்டு பேரும் சேனைக்குப் பின்பக்கத்திலே காப்பாற்றிக்கொண்டு வரட்டும். கோர்ப்படேகான், சற்சாகான் இவர்கள் சேனையைச் சுற்றிலும் சுற்றிக்கொண்டு வரட்டும், இப்படி ருஸைத்துமகான் வார்த்தையைக்கேட்டு முஸ்தீப்பு ஆனார்.

இந்தச் சேதி சிவாஜிராஜா கேட்டுத் தானும் தன்னுடைய சேனையும் செருட முதமாய் பண்ணிக்கொண்டு தன்னுடைய சர்தார் கூட்டங்களுக்குச் சொன்னது தன்னுடைய சேனாதிபதி பாசில்கானோடு யுத்தம் பண்ணட்டும் வியாக்கிரமம் என்கிறவன் உல்லாக்கானனோடு யுத்தம் பண்ணட்டும் இங்களே என்பவன் மல்லிக்கு இதுபார்கான் இவர்களோடு சண்டை பண்ணட்டும். மாகாத்திரிகன் பத்தேகானை அடிக்கட்டும் கோந்து என்கிறவன் கோர்ப்படேகானோடு யுத்தம் பண்ணட்டும். கராட்டன், பாண்டர் இவர்கள் இரண்டும் பேரும் சேனைக்கு வலது புறத்திலே ரெட்சித்துக் கொண்டு வரட்டும் இலால், யாதவன் இருவரும் நம்முடைய சேனைக்கு இடது புறத்திலே ரெட்சித்துக் கொண்டு வரட்டும் நான் சேனைக்குச் சர்தாராயிருக்கப் பட்ட ருஸ்த்துமகானோடு யுத்தம் பண்ணுகிறேன். இவ் விதம் சொன்ன சிவாஜிராஜா வார்த்தையைக் கேட்டு அவரவர்கள் அப்படியே முஸ்தீப்பாய் நடந்தாகள்.

அப்போது இரண்டுபேர்களுடைய சேனைகளிலேயும் [1]நவபத்து நகாறாசப்தத்தினாலே நாலுதிக்கும் பிரதித் தொனியுண்டாகத் தலைப்பட்டது. நிசானங்களுடைய காந்தியினாலே ஆகாசத்திலே சித்திரங்கள் எழுதினாற் போல் தோன்றிற்று. இரண்டு சேனைகளையும் பார்த்தால்

---

1. 'நகபத்து' என்றுளது

கீழ்சமுத்திரம் மேல் சமுத்திரம் ஒன்றாய் கூடினாலெப் படியோ அப்படி யுத்தத்துக்குக் கைகலந்தது இரண்டு பேருடைய சர்தார் கூட்டங்களும் ஒருவருக்கொருவர் நேந்துகொண்டு சண்டை பண்ணத் தலைப்பட்டார்கள். குதிரைகளுடைய காலடிகளினாலே தூள் கிளம்பி ஆகாயம் நிறையத் தலைப்பட்டது. ஒருவருக்கொருவர் பாணங்க்ளினாலேயும், கத்திகளினாலேயும், பட்டாக்கத்தி களினாலேயும் வெட்டிக்கொண்டுச் சண்டை பண்ணத் தலைப்பட்டார்கள். எதிரேயுள்ளவன் வில்லிலே அம்பு வைத்து அடிக்கும் முன்னே அவனுக்கு எதிரேயிருக்கிற வன் இவன் கையை அறுத்துக் கீழே தள்ளுவான். நிசானு கள் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களுடைய தலையை வெட்டித் தலை கீழே விழுந்தாலும் அந்த நிசானை கை விடாமல் நிச்சனோடு கீழே விழத்தலைப்பட்டார்கள்.

இப்படி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் போது சிவாஜி ராஜா தத்தம் ஜனத் தோடு ருஸ்ததுமகானன் மேலே போய் சண்டைபோட்டு அடிக்கும்போது அவனுக்கு நிர்வாகமில்லாமல் பின் வாங்கினான். சிவாஜி ராஜா பாரிசத்திலிருக்கிற சிப்பாய் கள் பாணங்களினாலே துலுக்கருடைய தலையை அறுத்துக் கீழே தள்ளத் தலைப்பட்டார்கள். சிவாஜி ராஜாவினு டைய சேனாதிபதி பாசில் கானனைக் காற்றிலே அகப் பட்ட மேகம் எப்படி ஓடுமோ அப்படி ஓடிப்போக அடித்தான். சிப்பாய்கள் காயங்களிலே இரத்தம் பெருகி ஆறாய் ஓடி அதிலே கைகள் கால்கள் தலைகள் வெட்டுப் பட்டு விழுந்ததெல்லாம் மிதந்துகொண்டு போகத் தலைப் பட்டது. சிவாஜி ராஜா பாரிசத்து சர்தார் கூட்டங்களி னாலே எதிரியாயிருக்கப்பட்ட ருஸ்ததுமகானுடைய சர்தார் கூட்டங்கள் அடிபட்டு பின் வாங்கினார்கள். ருஸ்த்துமகான், பாசில்கான் இவர்கள் இரண்டுபேரும் கத்தியைக் கீழே போட்டு விட்டு ஐந்தாறு குதிரையோடு ஓடிப்போய் விட்டாாகள். குறையிருந்த சேனையெல்லாம்

நாலுதிக்கும் ஓடிப்போய்விட்டது. சிறிது சர்தார் கூட்டங்கள் சிவாஜி ராஜாவுக்குச் சரணமாய் வந்தார்கள்.

## இருபத்தைந்தாம் அத்தியாயம்

அதன் பிறகு ஓடிப்போகிறவரைப் பின் தொடர்ந்து அடிக்க வேண்டாமென்று சிவாஜி ராஜா சொன்னார். அந்த ரணகளத்திலே செத்துப் போனவர்களுடைய ஆபரணங்களினாலேயும் வஸ்திரங்களினாலேயும் அந்தப் பூமி நிறைந்தது. இப்படிப்பட்ட யுத்தமாகி மடிந்து போனவர் போக எதிரியினுடைய பாளையத்திலே மிஞ்சின பேர் ஓடிப்போன பிறகு அந்தத் தேசத்திலே சிறிது ஜனத்தை [1]டாணையம் வைத்துத் தான் ஜெயபேரிகை அடித்துக் கொண்டு நாலு திக்கும் பிரகாசம் பண்ணிக்கொண்டு இன்னும் அல்லிஷாவினுடைய தேசத்தைக் கட்டவேண்டி சிறிது சர்தார் கூட்டங்களுக்குச் சேனைகளைக் கொடுத்தனுப்பி வைத்து சிவாஜி ராஜா தான் பனாளா கெடிக்குப் போக வேண்டுமென்று பிரஸ்த்தனம் பண்ணினார்

அதன் பிறகு சிவாஜி ராஜா சேனாதிபதி சேனையோடு போய் எதிலிஷாவினுடைய தேசத்தை யெல்லாங் கட்டிக் கோட்டைகள் துருச்கங்கள் கெடிகளெல்லாம் சுவாதீனம் பண்ணிக்கொண்டான். அதன் பிறகு மொகல் வெகு நாளாய் வராமலிருந்ததினாலே ஓடிப்போன ருஸ்துமகான், பாசில்கான் இவர்கள் இரண்டுமேரும் வெகு விசனத்தோடு அல்லிகான் புரத்திற்த எஜமானனாயிருக்கப்பட்ட சோஅற்கான், பர்பர்கான் இவர்கள் இரண்டு பேரையும் அழைத்து சிவாஜி ராஜாவை நிக்கிரஹம் பண்ணுங்கள் என்றுசொல்லி அவர்களை அனுப்பிவைத்துத் தான் திருப்பிச் சிறிது சேனைகள் சேகரித்துக்கொண்டு பனாளா கெடிக்கு வந்தான்.

சாதாத்துகான், பாசிராகுகான், கோர்ப்டேகான் பீடனாயக்கன், பாயிசான் மசூதுகான் இவர்களெல்லோ

---

1. 'காவல்' என்ற பொருளில் வந்துள்ளது.

ருர் தங்கள் தங்கள் தளத்தோடு சோஅற்கானுக்குச் சகாய மாய் வந்து பனாளா கெடிக்குச் சீழண்டேயும் மேல்பக்கத்தி லேயும் தென் பாரிசத்திலேயும் வட பாரிசத்திலேயும் இப்படி நாலுபக்கத்திலேயும் முற்றுகையிட்டார்கள். சிவாஜி ராஜாவுக்கும் அந்த சோஅற்கானுக்கும் பாரத யுத்தம் போலே சண்டையாயிற்று. அதிலே பர்பர்கான் என்கிறவன் விழுந்து போனான். சிவாஜி ராஜா நாளுக்கு நாள் அதிகமாய் விருத்தியடைவதைப் பார்த்துச் சகிக்கப் படாமல் டில்லீசுரன் அருகில் போய் தனக்குச் சகாயமாய் சிறிது சேனை கொடுக்கவேண்டுமென்று அல்லீஷா கேட் டான்.

அதற்கு டில்லீசுரனும் தாரா கெடியிலேயிருக்கப்பட்ட சர்தகர்களையும் சேனையும் அல்லீஷாவுக்குச் சகாயமாய் போகச்சொல்லி அனுப்பி வைத்தான். டில்லீசுரனுடைய உத்தாரப்படிக்கு சாஸ்தாகான் சேனையோடு புறப்பட்டு சிவாஜி ராஜாவினுடைய தேசத்திலே வந்து தேவாலயங் கள் பெரியவர்களாயிருக்கப்பட்ட சந்நியாசிகளுடைய மடங்களும் காவேரி நதி தீரத்திலே யிருக்கப்பட்ட பிராம ணர்களுடைய அக்கிரஹாரங்களும் வனங்களும் சிங்காரத் தோட்டங்களும் இவற்றையெல்லாம் தும்சம் பண்ணிக் கொண்டு வந்தான்,

பின்பு அல்லீஷாவினுடைய உத்தரவுப்படி சோஅற் கானும் சாகசவடம் என்கிறதைக் கொள்ளையடித்துப் புனாப்பட்டணத்தை வாங்கிக்கொண்டான். கோலாரையும் ஆக்ரமித்துக்கொண்டு சக்கிராபதி நகரத்துக்கு வந்து அது வும் சுற்றிக்கொண்டு அங்கேயிருக்கிற ஜனங்களையும் காபிரிப்படுத்திக் கொள்ளையடித்துக்கொண்டு சிவாஜி ராஜா பனாளா கெடியிலே இருக்கிறவரை சுற்றிக்கொண் டான்,

## இருபத்தாறாம் அத்தியாயம்

அப்போது சிவாஜி ராஜா வெகு கோபத்துடனே சோஅற்கானுடனே யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கும்

சிவாஜி ராஜாவினுடைய தாயார் மகா பதிவிரதையாயிருக்கப்பட்டவள் ராஜகிரி என்ற துருக்கத்திலேயிருந்தவள் யுத்தம் பண்ணுவதிலே உற்சாகமாய் ஆங்காரத்தினாலே தன்னுடைய கெடிகள் துருக்கங்களெல்லாம் வெகு பந்தோபஸ்து பண்ணினாள். அப்போது நேதா என்கிற சேனாபதி இலால்கான் இவர்கள் இரண்டுபேரும் சிவாஜி ராஜாவினுடைய உத்தரவுமேல் சரபுரத்துக்குப்போய் அங்கிருக்கும் சத்துருக்களை ஜெயித்து அந்தச் சரபுரம் சுட்டுக் கொள்ளையடித்துக்கொண்டு ராஜகிரிக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த அம்மா தன்னுடைய மகன் சிவாஜி ராஜாவைப் பார்க்க வேண்டுமென்று வெகு ஆசையோடு சத்துருக்களையும் சிட்சிக்க வேண்டுமென்று வெகு கோபத்தினாலே தன் சேனையுடன் பனாளா கெடிக்குப் போகவேண்டுமென்று ஆயத்தப் பட்டுக் கொண்டிருக்கும்போது நேதா என்கிற சேனாபதியும் இலாலுகானும் அந்த அம்மாளிடம் வந்து நமஸ்காரம் பண்ணிக் கைகட்டிக்கொண்டு நின்றார்கள்.

அவர்களைப் பார்த்து அந்த அம்மாள் சொன்னது. என்னுடைய வெளிப் பிராணனாயிருக்கப்பட்ட சிவாஜி ராஜா பனாளா கெடியிலே இருக்கிறவனை சத்துருக்கள் வந்து சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எஜமானனை விட்டுவிட்டு வெட்கமில்லாமல் சத்துருப் பயத்தினாலே இங்கே ஓடி வந்தீர்களா என்று சொல்லி, நல்லது என்னுடைய பிள்ளையை நான்தான் விடுவிக்கிறேனென்று எத்தனம் பண்ணி அந்த சோஅற்கானனுடைய சிரசை அறுத்துக் கீழே தள்ளுகிறேன். என்னுடைய குழந்தையைப் பாராமலிருக்கமாட்டேன். மகாவிஷ்ணுவினுடைய அம்சமாயிருக்கப்பட்ட சிம்மம்போலே சூரனாயிருக்கப்பட்ட பிள்ளையை இங்கே அழைத்துக்கொண்டு வருகிறேன். இனிமேல் குழந்தையைப் பாராமல் என்னுடைய பிராணன் நிற்கமாட்டாது என்று சொல்லி நீங்கள் இங்கேயிருந்துகொண்டு இந்த ராஜகிரியை காப்பாற்றிக் கொண்டிருங்கள். நான் போய் சோஅற்கானனுடனே யுத்தம் பண்ணுகிறேன் என்று சொன்னாள்.

அப்போது அந்தச் சேனாதிபதி பயந்துகொண்டு விசன மாயிருக்கப்பட்ட அம்மாளைப் பார்த்துச் சொன்னது, மகாபலசாலியாய் சூரனாய் இந்தப் பூமி யெல்லாங் காப்பாற்றுகிறவராயிக்கப்பட்ட ராஜா இதராளுடைய சகாயத்தை அபேட்சிக்கிறதில்லை. ஆகையினால் அவருடைய உத்தரவுப்படி விசாபுரத்தை ஜெயித்து மொகலனோடு யுத்தம் பண்ணுவதற்காக நாங்களிங்கே வந்தோம். நீர் இங்கே தானே இரும் அங்கே போகவேண்டாம். அங்கே ராஜா பயமில்லாமலிருக்கிறார். என்னுடைய மனதிலேயும் ராஜாவைப் பார்க்கவேண்டும். சத்துருவோடு யுத்தம் பண்ணவேண்டும். அந்தச் சோ அற்கானனை நான் போய் அடிக்கிறேன். இவ்விடமுள்ள கெடிகள் துருக்கங்களெல்லாம் ஜனங்கள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சத்துருக்களினாலே இந்தக் கெடியை வாங்கமுடியாது என்று இந்தப் பிகாரமாய் சொல்லி அந்தச் சேனையை வாங்கிக்கொண்டு அதிவேகமாய் பனாளா கெடிக்குப் போகவேணுமென்று புறப்பட்டான்.

சிவாஜிராஜாவுக்கு மேற்பலனாய் சேனையோடு இந்தச் சேனாபதி வருகிற செய்தியைச் சோ அற்கான் கேட்டு அவர்களை மறிப்பதற்குச், சிறிதுபேரை அனுப்பி வைத்தான். அவர்கள் வழியிலே வந்து இவர்களை மறித்துக்கொண்டு சண்டையாயிற்று. கத்திகளினாலே தலையை அறுத்துக் கீழே தள்ளத் தலைப்பட்டார்கள். குன்தாயுதத்தினாலே கைகளை அறுக்கத் தலைப்பட்டார்கள். அப்போது இலாலுகானனுடைய பிள்ளை குதிரையிலேறிச் சத்துருக்களுடைய சேனையிலே பிரவேசித்துக் குதிரையைச் சுற்றவிட்டு வெகுபேரை அடித்தான். அவர்களும் வெகுபேராய் வந்து இவனைக் குதிரை மேலிருந்துக் கீழே தள்ளி பரிச்சியினாலே குத்தி அவனைக் கைப்பிடியாய் பிடித்துத் தூக்கிக்கொண்டுபோனார்கள். அப்போது இலாலுகான்தன் பிள்ளையைக் கொண்டு போவதைப் பார்த்தும் அவனை விடுவிப்பதற்கு இவனாலே ஆகாமல்போய்விட்டது. இந்த இலாலுகான் ஓடிப்போகத்

தக்கணையாய் சோ அற்கானனுடைய ஜனங்கள் வந்து அடித்தார்கள். இலாலுகானுடைய பிள்ளை எதிரி கையில் அகப்பட்டானென்கிற செய்தி கேட்டு வெகு விசனத்தோடு ஆக்கிரகப்பட்டுக்கொண்டு யுத்தம் பண்ணினாலும் பனாளா கெடிக்குப் போவதற்கு வழியில்லாமல்போய் விட்டது.

இந்தச் சேதி சிவாஜிராஜா கேட்டு வெகு கோபத்திலே யிருக்கும்போது ஒரு ராத்திரி சிவாஜிராஜா படுத்துக் கொண்டிருக்கும்போது துளஜா அம்மனைச் சொப்பனத் திலே கண்டார். அம்மனைச் சாஷ்டாங்கமாய்ச் சேவித்தார். அப்போது ராஜாவைப் பார்த்து அமமன் சொன்னது: இந்தச் சக்கிராவதி நகரத்தை மொகலாள் ஜெயித்து வாங்கினபடியினாலே இனிமேல் நீ இங்கேயிருக்கக்கூடாது. இப்போது அவர்களுக்கு ஜெயகாலமிருக்கிறது. சக்கிராவதி நகரம் வாங்கினது அவர்களுக்கு நாசகாலமேயல்லாமல் வேறுயில்லை. தூண்டியிலே இருக்கிற இரைக்கு ஆசைப் பட்டு மீன் எப்படி வந்து அகப்பட்டுக்கொள்ளுமோ அப்படி இந்தச் சக்கிராவதியை வாங்கியதாலே அகப்பட்டுக் கொண்டானென்று எண்ணிக்கொள். நீ விரைவில் ராஜகிரி போய் உன்னுடைய தாயார் பதிவிரதையாயிருக்கப் பட்டவள் வெகு விசனத்தோடு இருக்கிறாள். அவளுடைய பேட்டி வாங்கிக்கொண்டு உன்னுடைய ராஜ்யத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டிரு. போகும் போது சிறிது ஜனங்களை அழைத்துக்கொண்டுபோ. இந்தக் கெடியிலே சிறிது ஜனங்களை வைத்து அவர்கள் இந்தச் சோ அற்கான னோடு யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கட்டும். நான் அந்தச் சோ அற்கானனை மலைக்கப் பண்ணுவிக்கிறேன். ஒரு காரணத்தினாலே இவனுக்கு [1]மிரித்தியு வரவிருக்கிறது என்று இவ்விதம் ராஜாவுக்குச் சொல்லி அந்தர்தியானமாய் போய்விட்டாள்.

அதன்பிறகு சத்துருக்களினாலே சுற்றிக்கொண்டி ருக்கிற இந்தப் பனாளாகெடியிலிருந்து போகவேண்டு

---

1. மரணம்.

மென்று யோசனை பண்ணிக்கொண்டு சமர்த்தர்களாயிருக்கப்பட்டத்சர்தார்களை அந்தக்கெடியிலே வைத்து திரும்பக பாஸ்கரன் என்னும் பிராமண சர்தாரை அழைத்து நீ மகாசூரனாயிருக்கிறாய். இந்தக் கெடியிலிருந்துகொண்டுச் சத்துருக்களோடு யுத்தம் பண்ணிக்கொண்டிரு. இந்தத் துருக்கத்தைச் சுற்றிலும் இருக்கப்பட்ட காடு ஆகாசங் கூடத்தெரியாமல் வெகு நெருக்கமாயிருக்கப்பட்ட காடு மலையிலேயிருக்கிற சுனைகளுடைய தண்ணீர் எந்நேரமும் பெருகியோடிப் பாசி படர்ந்து சேறும் தண்ணீருமாயிருக்கிறது. இப்படிப்பட்டக் கெடியைச் சத்துருக்களினாலே வாங்கங்கூடாது. நாமும் நாலு மாதமாயிங்கேயிருந்து சத்துருக்களோடு யுத்தம் பண்ணினோம். சத்துருவை ஜெயிப்பதற்கு ஆகாமல் போய்விட்டது. இப்போது ஆவணி மாதம் பிறந்தது. இனிமேல் மழை நாளான படியினாலே சத்துருவுக்கு இந்தக்கெடியை வாங்கக்கூடாது

இதல்லாமல் நம்முடைய சேனாபதி நேதா என்கிறவன் சேனையோடு வந்தவன் கூட வழியிலே வரவிடாமல் சத்துருக்களினாலே அபஜெயப்பட்டான். இந்தச் சத்துருக்கள் போட்ட முற்றுகை ஒருவராலேயும் வெல்லமுடிவில்லை. சோ அற்கான் வெகு சூரன், வெகு தளத்தோடு வந்துள்ளான். இப்போது இவனோடு போராடக்கூடாது. இது தவிர புனா பிராந்தியத்திலே மொகலனுடைய சேனை வந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆகையினால் நான் இங்கே இருப்பது யுக்தமல்ல. அந்த மொகலனை அடிப்பதற்கு என்னைத் தவிர மற்று ஒருவராலும் ஆகாது. ஆகவே அவர்களை அடிக்கிற நிமித்தியம் நான் சீக்கிரமாய் போகிறேன். உன்போலே சூரனாயிந்தக் கெடிகளிலிருக்கிற போது ஒருவராலே இந்தக் கெடியை வாங்கக் கூடுமா. ஆகையினால் இந்தக் கெடியிலே நீ சர்தாராயிருந்து கெடியை ரெட்சித்துக் கொண்டிரு. அருச்சுனன் எப்படி (சத்துருவ்யூஹ) த்தைப் பேதிச்சுகொண்டு போவானோ அப்படி நான் இந்தச் சத்துருக்களைப் பேதிச்சுக்கொண்டு போகிறேன். என் முன்னே ஒருவரும் நிற்கமாட்டார்கள்

என்று இவ்விதம் திரும்பக பாஸ்கரருக்குச் சொல்லி அந்தக் கெடியிலே வைத்துவிட்டுத் தான் குதிரையிலேறிச் சமர்த்தர்களாயிருக்கப்பட்ட காலாட்கள் அறுநூறு பேரை அழைத்துக்கொண்டு ராத்திரி சாமத்துக்குமேல் கூச்சு நகாரா அடித்தார்கள்.

அந்தச் சப்தம் சத்துருக்கள் கேட்டார்கள். அவர்களுக்கு மேக கர்ஜனை போல் தோன்றிற்று. மேகங்களும் வந்து கட்மிக்கொண்டு மின்னலும் மின்னுகிறபடியினாலே ராஜாவுக்கு மேடு பள்ளங்கள் தெரிந்து நடப்பதற்கு அனுகூலமாயிற்று. சமீபமாயிருக்கப்பட்ட வழியிலே ராஜா புறப்பட்டு நடந்தார். துளஜா தேவி அம்மனுடைய கடாக்ஷத்தினாலே சிவாஜி ராஜா போகும் சேதி தெரியாமல் சத்துருக்கள் பிரமித்துப் போயிருந்தார்கள். ராஜாவும் தன் ஜனத்தோடு வெகு கடினமாயிருக்கப்பட்ட வழியைத் தாண்டிக் கொண்டு ஜனங்கள் சஞ்சாரமில்லாத வழியோடு தன்னுடைய விசால் கெடிக்குப் போய்ச் சேர்ந்தார்.

## இருபத்தி ஏழாம் அத்தியாயம்

முன்னே பனாளா கெடியிலேயிருந்து ராஜா புறப்படும் போது சோ அற்கானுக்குச் சொல்லி அனுப்பினது, அல்லீஷாவினுடைய சேனை புனா பிராந்தியம் வந்து சுற்றிக் கொண்டிருக்கிறது. எனக்கு அங்கே போகவேண்டியிருக்கிறது. இந்தக் கெடியிலே நம்முடைய சர்தாரோடு யுத்தம் பண்ணிக்கொண்டிரு. இல்லாவிட்டால் நம்மோடு தானே யுத்தம் பண்ண வேண்டுமென்று உன் மனதிலே இருந்தால் இந்தப் பனாளா கெடிக்குச் சமீபமாய் நீயும் வா. நானும் வருகிறேன். இரண்டு பேருடைய சேனையையும் தூர வைத்துவிட்டு நீயும் நானுமாய் கையிலே கத்தி எடுத்துச் சண்டை பண்ணுவோம் என்று சொல்லி அனுப்பியதற்கு இந்தச் சேதி சோ அற்கான் கேட்டு காபிரிப்பட்டுப் பயந்துகொண்டு பதில் சேதி சொல்லாமல் இருந்து விட்டான்.

அதன்பிறகுப் பனாளாக் கெடியிலிருந்து ராஜா புறப்பட்டுப்போய் விடுவான் என்று பாயிகான் முதலான சர்தார் கூட்டங்களை அழைத்து உள்ளேயிருந்து ஈ எறும்பு கூட வெளியிலே வராமல் வெகு ஜாக்கிரதையாய் முஸ்தீபுடனே தாக்கீது பண்ணி அவர்களும் அந்தப்படியே ஜாக்கிரதையாயிருந்த பேர்களுடைய கண்ணிலே விழாதபடி ராஜா புறப்பட்டு விசால் கெடிக்கு வந்து விட்டார். அந்த விசால் கெடிக்கும் பனாளா கெடிக்கும் ஐந்து யோசனை தூரம் ஏழு சாமத்திலே வந்துசேர்ந்தார். அதன்பிறகு சோஆற்கான் நாலு பக்கத்திலேயும் திருட்டுத்தனமாய் சமாசாரத்துக்கு அரிக்காரரை வைத்திருந்தான். அவர்கள் பனாளா கெடியிலிருந்து ராஜா வெளியே புறப்பட்டுப்போறாரென்று சோ அற்கானுக்கு வந்து சொன்னார்கள். அப்போது சபையிலே சேதி கேட்டுப் பிரமித்துக்கொண்டு ஆச்சரியமாய் எண்ணத் தலைப்பட்டான். இந்தக் கெடியிலே நம்முடைய கையிலே அகப்பட்ட சத்துரு நம் எல்லோரையும் பிரமை போட்டிருந்தாற்போலேயிருந்துப் புறப்பட்டுப்போனான் பார்த்தீர்களா என்று ஆச்சரியப்பட்டான். இனிமேல் எதிலிஷா அல்லீஷாவுக்கு எப்படி முகத்தைக் காண்பிப்பது. நம்முடைய ஜன்மம் [1]பரியாசமாய்போயிற்று.

சர்ஸ்த்தாகான் முதலான பெரிய சர்தார்களாயிருக்கப்பட்டப் பேருக்கு நாசம் பண்ணின ராஜா கையிலே அகப்பட்டுக் கொண்டவனை விட்டுவிட்டாய் என்று மிகவும் கோபம் கொள்வானென்று மசூதுகானிடம் சொன்னது, மூந்தாணையிலே முடிந்த ரெத்தினம் கீழே விழுந்து போனாலெப்படியோ அப்படி நாம் பார்த்துக்கொண்டிருக்கும்போது கையிலே அகப்பட்ட ராஜா போய்விட்டானே யென்று இனிமேல் என்ன செய்யலாம். தன்னுடைய காரியத்திலே ஜாக்கிரதையாயிருக்கப்பட்ட ராஜா

---

1. பரிகாசமாய் போலும்.

விசால் கெடியிலே வெகுநாளிருக்கமாட்டான். ஆகையினால் நீ சீக்கிரமாய் பின் தொடர்ந்துபோய் காரியத்தைப் பாரென்று சொன்னான். அவனும் அவ்விதம் வெகு முஸ்தீபோடுப் போகும்போது சேற்றிலேயும் பாசியிலேயும் குதிரைகளும் கால் ஜனங்களும் வெகு அவதிப்பட்டு நடந்தார்கள்.

இவன் வருகிற சேதி ராஜா கேட்டு இந்த விசால் கெடியிலேயிருந்து கொண்டு இவனோடு சண்டை போட வேண்டுமென்று யோசனை பண்ணினார். முன்னே மசூதுகானன் பல்லிவனத்து ராஜா சூரனாயிருக்கப்பட்டத் திசவந்தன் சிங்காரபுரத்துச் சூரியராஜா இன்னும் சிறிது சாமந்தனாயிருக்கப்பட்ட ராஜாக்களையும் அந்தக் கெடியை நிரோதம் பண்ணச் சொல்லி அனுப்பி வைத்திருந்தான். அவர்களாலே இந்த ராஜாவே அந்த விசால் கெடி துருக்கத்துக்கும் போகும்போது மறிக்க முடியாமல் போய்விட்டது. அந்த ராஜாவினாலே இவர்களெல்லோரும் அடிக்கடி அபஜெயப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் ஆங்காரத்தினாலே இந்த மசூதுகானனோடு கூடி அந்த விசால் கெடியைச் சுற்றிக் கொண்டார்கள். அதைப் பார்த்து ராஜாவினுடைய ஜனங்கள் வெகு கோபத்தினாலே கெடியிலிருந்து வெளியிலே புறப்பட்டுக் கத்திக் கேடயங்களினாலேயும் பாலா பற்ச்சிகளினாலேயும் அடித்தார்கள். அதனாலே வெகு ஜனங்கள் சேதப்பட்டு எமலோகம் போய்ச் சேர்ந்தார்கள், திசவனத்து ராஜா, சூரியராஜா, சாமந்த ராஜாக்கள் இவர்களுக்கெல்லாம் நிர்வாகமில்லாமல் பின்வாங்கி மசூதுகானனிடம் போனார்கள். அவன் இவர்களையும் கூட்டிக்கொண்டுத் தன்னுடைய சேனையையும் முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு அந்தக் கெடிக்குச் சமீபமாய் வரும்போது ராஜாவினுடைய ஜனங்களும் போய்விழுந்து அகோரமான சண்டையாகி சின்னாபின்னமாய் தலைகள், கைகள், கால்கள், உடல்கள் வெவ்வேறாய் அறுந்துவிழுந்து மிகவும் சேதப்பட்டு நிர்வாகமில்லாமல்

இரணபூமியை விட்டு ஓடிப்போய் சோகர்கானிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

அதன்பிறகு சிவாஜிராஜா தன்னுடைய தேசத்தி லிருந்து கால்பலனை அழைத்துக்கொண்டுச் சேனையுடனே விசால் கெடியிலிருந்துப் புறப்பட்டு ஐந்தாறு நாட்கள் வழியிலே சந்தோஷமாய் நடந்து ராஜகெடிக்கு வந்து சேர்ந்துப் பிரகாசமாயிருக்கப்பட்ட ரெத்தின சிம்மா சனத்திலே யிருக்கப்பட்ட தன்னுடைய தாயாருக்கு நமஸ்காரம் பண்ணினார். அவளும் புத்திரனைப் பார்க்க வேண்டுமென்று ஆசையோடிருந்தவள் புத்திரனைக் கண்டு வெகு ஆசீர்வாதங்கள் பண்ணி வெகு சந்தோஷப் பட்டாள். சிவாஜி ராஜாவும் சத்துருக்களுடைய தேசங் களைக கட்டினதும் அவர்களோடு யுத்தம் பண்ணினதும் ஜெயத்தோடு வந்த சமாசாரங்களெல்லாம் தாயாரிடம் சொன்னார். அந்த ராஜகெடியிலே ராஜா வந்து சேர்ந்த வுடனே நகாறா நகபத்து முழங்கி வெகு சந்தோஷமாய் உற்சாகத்தோடு இருந்தார்கள்.

இப்படியிருக்கும்போது டில்லீசுரனுடைய அம்மான் தன்னுடைய சேனையுடனே என்ன சாமர்த்தியம் பண்ணி னாலும் நடவாமல் போயிற்றென்று வெகு விசனத்தோடு இருந்தான். இந்தக் கதைகளெல்லாம் காசிவாசியாயிருக் கப்பட்டப் பிராமணர் கேட்டு கவீந்திரனைப் பார்த்துக் கேட்டது; ராஜா ராஜகெடிக்குப் போய்ச் சேர்ந்தபிற்பாடு பனாளா கெடி சேதி என்னவாயிற்றென்று கேட்டார்.

## இருபத்தி எட்டாம் அத்தியாயம்

அதற்கு கவீந்திரர் சொன்னது: சிவாஜி ராஜா ராஜ கெடிக்குப் போன பிறகு பனாளா கெடியிலே யிருக்கப் பட்ட சர்தார் திரும்பக பாஸ்கரருக்குச் சொல்லி அனுப்பி னது, அங்கே சோகற்கான் யுத்தம் பண்ணுகிறான். இங்கே சாஸ்த்தாகான் முதலானவர்கள் வந்து யுத்தம்

பண்ணுகிறார்கள். இரண்டிடத்திலே எப்படி யுத்தம் பண்ணுவது. இங்கே காரியங்கள் மிகவும் இருக்கிறது. ஆகையினால் அந்த பனாளா கெடியை அவர்கள் வசம் விட்டு விட்டு நீ அங்கிருந்து புறப்பட்டு இங்கே வந்துவிடு. அந்தப் பனாளா கெடிக்குச் சமானமாயிருக்கப்பட்ட கெடியை க்ஷணத்திலே வாங்குவோமென்று தன்னுடைய ஏசிப்புடனே சொல்லி அனுப்பிவைத்தார். அந்தச் சேதியைத் திரும்பக பாஸ்கரர் கேட்டுத் தான் யுத்தத்திலே சமர்த்தனாயிருந்தாலும் எஜமானனுடைய உத்தாரப்படிக்கு நடக்க வேண்டுமென்று அந்தப் பனாளாக் கெடியை கவுல்மேலே அவர்களுடைய சுவாதீனம் பண்ணி அந்தச் சோகற்கானுடைய பேட்டியும் வாங்கிக்கொண்டு உபசாரமாய் சொன்னார். அவனும் சிவாஜி ராஜாவினுடைய தயவு நம்மேல் இருக்கவேண்டுமென்று திரும்பக பாஸ்கரனுக்குப் பல வெகுமானங்கள் கொடுத்து அனுப்பிவைத்தான். திரும்பக பாஸ்கரனும் தன் சேனையோடுகூட ராஜகெடிக்கு வந்து ராஜாவுக்கு முசிராப் பண்ணிப் பேட்டி வாங்கினார் என்று கவீந்திரர் சொன்னார்.

அதற்குமேல் கவீந்திரரைப் பார்த்துப் பிராமணர் கேட்டது: முன்னே சிவாஜி ராஜாவினுடைய சொப்பனத்திலே துளஜாதேவி அம்மன் வந்து இந்தச் சோகற்கான் ஒரு காரணத்தினாலே நாசத்தை அடையப்போகிறானென்று சொல்லியிருந்தாரே அந்தச் சோகற்கான் எந்தவிதமாய் நாசத்தை அடைந்தான். அந்தக் கதையை விஸ்தாரமாய் சொல்லவேண்டுமென்று நீங்கள் சொல்லுகிற கதைகள் இன்னும் கேட்கவேண்டும், கேட்கவேண்டுமென்று வெகு ஆசையாயிருக்கிறது; சொல்லுங்கள் என்று கேட்டார்கள்.

அதற்குமேல் கவீந்திரர் சொன்னது அந்தத் துளஜா தேவி அம்மனுடைய ஆக்ஞைப்படி ராஜா பனாளா கெடி விட்டுப்போன பிற்பாடு அந்தப் பனாளா கெடியிம் சோகற்கானுடைய அதிர்ஷ்டத்தினாலே கைவசமாயிருக்கும்

போது புத்தியீனனாயிருக்கப்பட்ட அல்லீஷாவுக்குத் தோன்றிற்று. இந்தச் சோகற்கான் [1]பரிதானத்தை வாங்கிக்கொண்டு கையிலே அகப்பட்ட ராஜாவை விட்டுவிட்டானென்று சோகற்கான் மேலே கோபம் பண்ணிக் காகிதம் எழுதி அனுப்பினது என்னவென்றால் நீ ராஜாவினிடம் வெகு பரிதானத்தை வாங்கிக்கொண்டு ராஜாவுக்கு உபேட்சை பண்ணி விட்டுவிட்டாய். நீ அந்தக் கெடியைச் சுற்றிக்கொண்டிருக்கும்போது ராஜா வெளியிலே போவதற்கு ஆகுமா. உன்னுடைய சம்மதி மேலே நடந்த காரியமென்று நாம் எண்ணுகிறோம். ஆகையினால் நீ இங்கே வந்து ராஜா பரிதானம் கொடுத்தத் திரவியமெல்லாம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னை உயிரோடு அடித்துப் போட்டுவிடுவேன் என்று இவ்விதம் காகிதம் அனுப்பிவைத்தான்.

அந்தக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டு இனிமேல் அங்கே போகக்கூடாது. நாம் என்ன சொன்னாலும் அவனுக்கு மெய்யாகத் தோன்றக்கூடாது என்று வெகு சூரனாயிருக்கப்பட்ட சோக்ற்கான் பயப்படாமல் கடினமாயிருக்கப்பட்ட கர்ணபுரத்துக்குப் போய் ஆசார் பிடித்தான். அதற்குமேல் கிருத்திருமம் பண்ணிச் சாராயத்திலே விஷம் போட்டுச் சோகற்கானுக்கு அல்லீஷா அனுப்பிவைத்தான். சோகற்கானும் அதைக்குடித்துச் செத்துப் போய்விட்டான், இப்படிப்பட்ட சோகற்கான் உபகாரம் பண்ணினவனை அல்லீஷா அபகாரம் பண்ணினான். இது ஆச்சரியமல்லவா. அம்மனுடைய பிரசாதத்தினாலே அமானுஷமாயிருக்கப்பட்ட ராஜாவைப் பிடிப்பதற்கு எவனாலே ஆகும். என்று இவ்விதம் சோகற்கான் நாசத்தை அடைந்த சேதி கவீந்திரர் சொல்ல இன்னும் அவருடைய கதைகள் சொல்லுகிறேன். என்று சொல்ல ஆரம்பித்தார்.

---

1. பரிதானம்-கைக்கூலி

அது என்னவென்றால் ராஜகெடியிலே சிவாஜி ராஜாவானவர் அந்தக் கெடிக்கு அசம்போல சுற்றிக் கொண்டிருந்த சத்துரு ஜனங்களையெல்லாம் அடித்து சம்ஹாரம் பண்ணி ஜெயத்தோடு இருக்கும்போது மொகலனுடைய சேனை சங்கிராமத் துருக்கத்துக்கு மேலே வந்து சண்டை பண்ணி அந்தத் துருக்கத்தை வாங்கினானென்று சேதி வந்தது. அது கேட்டுப் புத்தி வந்தர்களாயிருக்கப்பட்டத் தன்னுடைய பிரதானிகளை அழைத்து ராஜா சொன்னது: ஒரு காரியத்தினால் நான் இங்கு வந்துவிட்டேன். இந்தச் சமயத்திலே சங்கிராம துருக்கம் சக்கிரவதிபுரம் போய்விட்டது. இப்போதுதான் நான் போய் அந்தத் துருக்கமும் சக்கிராவதிபுரமும் வாங்கவேண்டுமென்று இச்சிக்கிறேன். இனிமேல் எந்தக் காரியம் எப்படி வருமோ அதற்கு இப்போது நாமெல்லோருமாய் கூடி ஜாக்கிரதை பண்ணவேண்டும். சகாயமில்லாமல் சத்துருக்களுடைய சேனையை ஜெயிக்கக் கூடாது ஆகையினால் வெகு எத்தனத்தினாலே புத்தி வந்தனாயிருக்கப்பட்ட ராஜாக்கள் அறுபது நாழிகையும் சத்துருவை நிக்கிரகம் பண்ணக்கூடிய சேனையைச் சேகரம் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். பெரிய ராஜாவாய் இருந்தாலும் திரவியமில்லாமல்போனால் சேனை சேகரமாக-மாட்டாது. திரவியத்தினாலேதான் திரவியம் சேகரமாகிறது அதனாலேதான். தர்மமும் விருத்தியடைகிறது. நினைத்தபடி காரியங்களும் சேகரமாகிறது ஆகையினால் இந்தப் பிரபஞ்சத்திலே திரவியமே முக்கியம். திரவியத்தினாலே குலம், வயது, வித்தை, சாமர்த்தியம், மெய் பேசுகிறவனென்று தோன்றுகிறது. திரவியமில்லாமல் போனால் அவன் பிழைத்திருந்தும் செத்தவனைப்போல்தான். எவனிடம் திரவியமிருக்கிறதோ அவனுக்கே சாமர்த்தியமும் மித்திரர்களும் சகாயமும்வந்து சேருவார்கள். ஆகையினால் அப்படிப்பட்டத் திரவியத்தை நம்முடைய புஜபல பராக்கிரமத்தாலே இந்தப் பூமி எவரெவருடைய சுவாதீனமாயிருக்கிறதோ அவர்களையெல்லாம் அடித்துக் கலைத்துத் திரவியத்தைச் சம்பாதித்துக் கொண்டு வருவேன்.

அதற்குமேல் இந்த டில்ஸ்சுரனுடைய [1]அம்மானா யிருக்கப்பட்ட சாஸ்த்தாகானனை அடித்துச் சர்ஹாரம் பண்ணுகிறேன் என்று இவ்விதம் பேசினார். அதுகேட்டுப் பிரதானி சொன்னது. நீங்கள் சொன்னதெல்லாம் நிஜந்தான். சமத்தராயிருக்கப்பட்டவர் கையிலே திரவிய மிருந்தால் அவன் வெகு சாமர்த்தியவானாவான். ஏழை கையிலே திரவியமிருந்தால் அது அனர்த்தத்தைக்கொடுக் கும். பிரபஞ்சத்திலேயிருக்கிறத் திரவியமெல்லாம் உங்களுடையதுதான் என்று எண்ணுகிறேன். ஆகையினால் திக்விஜயம் பண்ணுவதற்குப்போகலாம். ஆனாலும் இப்போது டில்லீசுரனுடைய அம்மான் சேனாதிபதியாய் வெகு ஜாக்கிரதையோடு சங்கிராமத் துருக்கத்தை வாங்கிக் கொண்டு வெகு சந்தோஷத்தினாலே புனாபட்டணத்திலே யிருக்கிறான். நீங்கள் இங்கேயிருக்கிற சேதி கேட்டுத் தனக்கு என்ன [2]அனிஷ்டம் வருமோ என்று எண்ணிக் கொண்டு சைய பர்வதத்திலேயிருந்து இறங்கவேண்டு மென்று அந்த வழியாய் சேனையை அனுப்பிவைத்தான். அந்தச் சேனை சையச் பர்வதத்து மேலே வந்து கீழே எப்படி இறங்கமாட்டாதோ அப்படிப் பண்ணவேண்டும். இன்னும் இதரமாயிருக்கப்பட்ட வழிகளெல்லாம் [3]பந்துபசத்து பண்ணவேண்டுமென்று இப்படிச் சமயோசிதமாய் பிரதானி பேசினான். அந்த வார்த்தயை ராஜா கேட்டு யுக்தமே யென்று ஒப்புக்கொண்டார்.

இப்படியிருக்கும்போது புனா பட்டணத்திலே யிருக்கிற சாஸ்தாகானன் எழுபத்திமூவாயிரங் குதிரை களோடு இருந்தவன் என்ன பண்ணினானென்றால் காற்தல்பகான் என்கிறவனை அழைத்துச் சொன்னது. உன்னுடைய தகப்பனார் வெகு பிரதாபசாலி, நீயும் யுத்தங்கள் பண்ணித்தான் காலட்சேபம் பண்ணுகிறாய். மகாப் பிரபலனாயிருக்கப்பட்ட காலீப்கானை ஜெயித்து

1. அம்மான்—தகப்பன், மாமன். 2. அனிஷ்டம்—பிரியவீனம்
3. பந்தோபஸ்து.

அவனுடைய பிரசண்ட புரத்தை வாங்கிக்கொண்டு எனக்குக் கொடுத்தாய். இப்போது சையபர்வதத்துக்கு ராஜா வாயிருக்கப்பட்டவனுக்கு ஜெயிப்பது மகா கடினம். இரணகளத்திலே வெகு சாகசம் பண்ணுகிறவன்; அவ்வாறு நீயும் சூரனாயிருக்கிறாய். அந்தச் சையபர்வதம் வாங்காமல் போனால் அந்த ராஜா அடங்கமாட்டான் ஆகையால் நீ இப்போது சேனையோடு அந்தப் பர்வதத்து மேலே போய் இறங்க வேண்டும்.

இன்றையமுதற்கொண்டு நீ எப்படி சொல்கிறாயோ அப்படி நான் கேட்கிறேன். நீ சையபர்வதம் இறங்கி சம்பாவதி, கலியாணபுரம், வீமபுரம், பணவல்லி, நாகஸ்தானம் இவற்றையெல்லாம் சுவாதீனம் பண்ணிக்கொள்ள வேண்டும். உன்னுடன்கூட சகாயமாய் கச்சபன், பலவனத்தன், சச்வாண், அமர்சிங்கன், மித்திரசேனன், சற்சேனாஜே, ராஜவியாக்கிரி, கோக்கர்டே, தேசவனத்தன், யாதன், இவர்களெல்லோரையும் போகச்சொல்லி சொல்லியிருக்கிறேன். இவர்களுக்கெல்லாம் நீ சேனாபதியாய் வெகு ஜாக்கிரதையோடு முன்னே போ. நான் உனக்குப் பின் பலனாய் வருகிறேனென்று சாஸ்தாகானன் சொன்னான். அப்படியே காற்தல்பகான் சூரர்களோடு புறப்பட்டுப் பயமில்லாமல் லோகாத்திரி பர்வதத்துக்குத் தென்புறமாய் சையபர்வதம் இறங்குவதற்குப் போகும்போது வழி வெகு கடினமானதால் கொஞ்சம் பக்கத்திலே சாய்ந்தாலும் கீழே விழுவோமென்று பயந்துகொண்டு மெள்ளமெள்ள சையபர்வதத்தைத் தாண்டினார்.

அப்புறம் வெகு ஆங்காரத்தோடு கூடின காற்தல்பகான் சேனையோடு போகும்போது ஆரண்யமாயிருக்கப்பட்ட காடு பார்த்தான். அந்தக் காட்டிலே ராஜாவினுடைய ஜனங்கள் இருந்ததைப் பாராமல் இந்தக் காட்டிலே ஒருவரும் இல்லையென்று அந்தக்காட்டிலே பிரவேசித்து நடந்தான். அப்போது மித்திரசேனன் முதலான ராஜாக்கள் அவன்கூட நடந்தார்கள் காற்றுக்

கூட புகாமலிருக்கப்பட்ட காட்டிலே போகும்போது சூரியன் கூடத் தெரியாமலிருக்கப்பட்ட காடு இன்றைக்கு நாம் பார்த்தோமென்று(ம்) நாம் வந்தது ஒருவருக்கும் தெரியாதென்றும் எண்ணிக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கும்போது கவீந்திரரைப் பார்த்துப் பிராமணர் கேட்டது; காற்தல்பகான் சைய பர்வதத்திலேயிருந்து இறங்கும்போது சிவாஜிராஜா அவனைப் போய் மறியாமல் விட்டு விட்டது ஏன் ? அவனும் சைய பர்வதந்து மேலே தானேயிருந்து அந்தப் பர்வதத்தினுடைய ஆசறா பிடித்துக்கொண்டு சிறிது சீமைக் கட்டாமல் அந்தக் காட்டிலே வந்ததென்னவென்று கேட்டதற்கு கவீந்திரர் சொன்னது; அவன் சைய பர்வதத்திலேயிருந்து இறங்கும் போது மறித்தால் அவன் காட்டுக்குள்ளே வரமாட்டான். அவன் காட்டுக்குள்ளே வந்த பிறகு மறித்துக்கொண்டு அடிக்க வேண்டுமென்று யிருந்தாரென்று கவீந்திரர் சொன்னார்.

அதன் பிறகு ராஜா போய் வழியை மறித்தார். அவர் பாரிச காலாள் ஜனங்கள் காட்டுக்குள்ளே பதுங்கி யிருந்தார். அந்தச் சேதி காற்தல்பகானுக்குத் தெரியாமல் சேனையோடுகூட உம்பர் என்கிற கிராமத்துக் காட்டு வழியே பிடித்துக்கொண்டு நடக்கும்போது நகாறா சப்தத்தைக் கேட்டு ராஜா வந்து விட்டாரென்று தன்னுடைய சர்தார்களுக்கெல்லாம் சாவதானமாயிருக்கச் சொல்லி தாக்கீது பண்ணினான். துங்காரண்யத்து ராஜா மகாயாகுவாயிருக்கப்பட்ட மித்திரசேனன் குதிரையிலிருந்து கீழே இறங்கி உயரமாயிருக்கப்பட்டப் பூமியைப் பார்த்து அது மேலேறி தன் ஜனத்தோடுகூட கையில் வில் அம்பு எடுத்துக்கொண்டு பாணத்தினாலே அடிப்பதற்குச் சித்தமாயிருந்தான். அமர்சிம்மன் முதலான ராஜாக்களும் தத்தம் ஜனத்தோடு கூடிக்கொண்டு மித்ரசேனன் போல நின்று கொண்டார். சமர்த்தனாயிருக்கப்பட்ட காற்தல்பகானும் சேனையோடுகூட யுத்தத்துக்கு நின்றான்.

அதற்குமேல் அவர்களெல்லோரும் பாணங்களினாலே ராஜாவினுடைய சேனையைப்பார்த்து அடித்தார்கள். அவர்களும் அடிக்கிறபோது மித்திரசேனனுடைய சேனை அந்தக் காட்டிலே மூலைக்குமூலை ஓடத்தலைப்பட்டது. அவர்களுக்கெல்லாம் தைரியங்கொடுத்துத்தான் பாணங்களினாலே அடிக்கத்தலைப்பட்டான். அதனால் ராஜா பாரிசத்துச் சர்தார்களுக்குக் காயங்கள் ஏற்பட்டுச் சிறிதுபேர்கீழே விழத் தலைப்பட்டார்கள்.

அப்போது ராஜா தன்னுடைய சேனாதிபதியைப் பார்த்து இந்தக்காட்டு வழியை மறித்துக்கொண்டிருங்கள் என்று சொல்லித் தான் பாணங்களினாலே அடிக்கத்தலைப் பட்டார் அவர் பாரிசத்து ஜனங்களும் கத்தியினாலே வெட்டும் போது இரத்தத்தினால் அந்தக்காடெல்லாம் செக்கச்செவேறென்று சோபிக்கத்தலைப்பட்டது. மித்திர சேனன் தன்னுடைய ஜனங்களை என்னதான் இரட்சித்தாலும் நிற்கமாட்டாமல் ஓடத்தலைப்பட்டார்கள்.

## இருபத்தி ஒன்பதாம் அத்தியாயம்

அந்தக்காட்டிலே அகப்பட்டுக்கொண்டு வழி தெரியாமல் வெகு சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற ஜனங்களைப் பார்த்து ராஜ வியாக்கிரி என்கிறவர் காற்தல் பகானுக்குச் சொன்னது; நீ சத்ருவினுடைய தொடைமேலே சேனையைக் கொண்டுவந்து விட்டுவிட்டாய், என்ன காரியம் பண்ணினாய். சிவாஜி ராஜா என்கிற சிம்மத்தினாலே இரட்சிக்கப்பட்ட காட்டிலே டில்லீசுவரனுடைய சேனையைக் கொண்டுவந்து மாட்டிவிட்டாய். இது வரைக்கும் டில்லீசுரன் சம்பாதித்தக் கீர்த்தியை நீ முழுகடித்தாய். முன்னும் பின்னும் பக்கத்திலும் சிவாஜி ராஜாவினுடைய ஜனங்கள் யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய பாரிசத்து ஜனங்களெல்லோரும் பிரமித்துப் போயிருக்கிறார்கள். டில்லீசுரனுடைய சேனாதிபதி சர்ஸ்தாகானன் புத்தியில்லாமல்

சிவாஜி ராஜா என்கிற அக்கினியிலே உன்னை அனுப்பி வைத்தான். உன்னை ராஜா பாரிசத்து ஜனங்கள் பிடித்துக் கொண்டுபோக வேண்டுமென்று யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நீ குருடன் போல் ஒன்றும் பாராமல் யுத்தம் பண்ணவேண்டுமென்று இச்சிக்கிறாய். உன்னுடைய சாமர்த்தியம் நடக்க மாட்டாது. ஆகை யினால் ஆங்காரத்தை விட்டுவிட்டு விரைவில் சிவாஜி ராஜாவுக்குச் சரணமாய்போய்ச் சேனையை மிருத்தியு வினுடைய பாரிசத்திலே அகப்பட்டதை விடுவித்துக் கொண்டுபோக வேண்டுமென்று இவ்விதம் சொன்னார்.

அதைக்கேட்டுக்கொண்டுக் காற்தல்பகான் யுத்தத்தை விட்டுவிட்டு வணங்கி தூதனை ராஜாவினிடம் அனுப் பிவைத்தான். அவன் விஷ்ணுவுக்குச் சமானமாயிருக்கப் பட்ட மகாசூரனாய், தேசோவனத்தனாய், ஆசானுபாகுவா யிருக்கப்பட்ட ராஜாவிடம் வந்து முசிராப் பண்ணி நின்றார். அவனை ராஜாபார்த்துக் கண்சைகையினாலே நீயாரென்று கேட்டார். என்னைக் காற்தல்பகான் அனுப்பி வைத்தான். நான் அவனுடைய [1]ஏசிப்பு அவர் சொல்லச் சொன்னது; என்னுடைய கிராசாரத்தினாலே சாஸ்தா கானனுடைய பேச்சைக்கேட்டுக்கொண்டு இந்தக் காட்டிலே வந்தேன். உம்மாலே ரெட்சிக்கப்பட்ட இந்தத் தேசம் சர்ப்பத்தினுடைய தலையிலே இருக்கப்பட்ட ரெத்தினத்துக்கு ஆசைப்பட்டாற்போலே நமக்கு கைவச மாகுமா; இந்தக்காட்டிலே இரண்டு மூன்று நாட்களாய் குடிக்கத் தண்ணீர் கூட அகப்படாமல் துங்காரண்யத்துக் காகிலும் இந்தச் சையாரண்ணியம் பாதாளமாயிருக்கப் பட்ட காட்டிலே அகப்பட்டுக்கொண்டு என்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் மறந்து போனேன்.

இப்படிப்பட்ட என்னை அபயத்தைக்கொடுத்து ரெட்சிக்கவேண்டும். நான் துலுக்கனானாலும் உங்களு

---

1. ஹேஜீப் என்ற மராத்திசொல், தலைவன், தூதன் என்ற இரு பொருளிலும் வந்துள்ளது.

டைய பெரியவர் ஷாஜிராஜாவோடு சிநேகமாயிருந்தோம். ஆகையினால் என்னிடம் இருப்பதையெல்லாம் கொடுத்து விடுகிறேன். என்னை அவமானம் பண்ணாமல் பிராணனைக் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணுகிறேன்' என்று இவ்வாறு அந்த ஏகிப்புச் சொன்னான்.

அதற்கு ராஜா தன்னுடைய சர்தார்களைப் பார்த்து அந்த ஏசிப்போடு சொன்னது; நீ சரணமாய் வந்தது மெய்யானால் உன் சேனையோடு கூட இந்தத் தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போய்விடு. நான் அபயம் கொடுத்தேன். நீ விரைவில் போய் காபிரிப்பட்டுக்கொண்டிருக்கிற உன்னுடைய எஜமானனுக்குச் சேதி சொல்லி யனுப்பி வைத்தார். அவனும் ஏசிப்பு எப்போது வருவானென்று வழிபார்த்துக் கொண்டேயிருந்தான். ஏசிப்பு வந்து சேதி சொன்னவுடனே இருந்த த்திரவியத்தைக் கொடுத்து விட்டான். மித்திரசேனன் முதலான ராஜாக்களும் பர்வதத்தை அடைந்துத் தன்னிடமுள்ள திரவியங்களை யெல்லாம் கொடுத்து அனுப்பி வைத்தார். கையில் கொடுப்பதற்கு முன்னே சிவாஜி ராஜா பாரிசத்த ஜனங்கள் சத்துரு ஜனங்களுடைய வஸ்திர பூஷணங்கள் கத்தி கேடயங்கள் சகலமான தெல்லாம் கொள்ளையடிக்கும் போது சிறிது பேருக்குக் காதுகள் அறுந்துபோயிற்று. அதைப்பார்த்துச் சிலர் கழுத்துகளிலே போட்டிருந்த முத்தாரங்கள் பதக்கங்கள் முதலியவற்றை எடுத்துக் கொடுக்கத் தலைப்பட்டார்.

இப்படி அலமலந்து கொண்டு சின்னாபின்னமாயிருக்கும்போது ராஜா பாரிசத்துச் சோப்புதாருகள் வந்து கை உயரத் தூக்கி சண்டைபோட வேண்டாமென்று சேனாபதிக்குச் சொல்லி சண்டையை நிறுத்தி விட்டான். அதன்பிறகு வந்த வழியைப்பிடித்துக் கொண்டு சத்துருக் ளெல்லாரும் அந்தக்காட்டை விட்டுப் போகத்தலைப் பட்டார்கள். அப்போது சத்துருவினுடைய யானைகள், குதிரைகள், திரவியங்கள் போட்டிருக்கிற பெட்டிகள்

பொன் பாத்திரங்கள், வெள்ளி பாத்திரங்கள் சகல சாமான்களெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு அவர்களை உயிரோடு விட்டுவிட்டார்கள்.

அதன் பிறகு சிவாஜி ராஜா பாரிசத்தில் ஜெயபேரிகை யடித்து உற்சாக சந்தோஷமாயிருக்கத் தலைப்பட்டார்கள். அப்போது சிவாஜி ராஜா நேத்தா என்கிற சர்தாரை அழைத்துச் சொன்னது. நான் எதிலி அல்லிஷாவினுடைய ராஜ்யத்தைக் கட்டுவதற்குப் போகிறேன் பனாளா கெடிக்கு பதில் கெடி வாங்க வேண்டுமென்று என்மனதிலேயிருக்கிறது. அதற்கு இப்போது எத்தனம் பண்ணினால் தான் காரியங்கூடிவரும். ஆகவே இந்த துலுக்கரை சிக்ஷிப்பதற்கு நீ இங்கேயே இரு. அவர்கள் ஆனால் இப்போது அபஜெயப்பட்டிருக்கிறார்கள். நமக்கு ஒன்றும் செய்யமாட்டாரென்று அசட்டையாயிராதே. சாவதானமாயிரு என்று சொல்லிவிட்டு ஜெயபேரிகை அடித்து குதிரையின் மேல் ஏறி தன்னுடைய சேனையோடு கூட புறப்பட்டு வழியிலே பட்டணங்கள், கிராமங்கள், பர்வதங்கள், காடுகள். இவைகளெல்லாம் பார்த்துக்கொண்டு சந்தோஷமாய் தாலப்பிய புரத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கே அந்த தாலப்பியபுரி ஈசுவரனை சேவித்து முன்னே அந்த தேசத்தைக் கைவசம் பண்ணிக் கொண்டு அங்கேயிருக்கிற ஜனங்களை துலுக்கருடைய பயத்திலிருந்து விடுவித்தார்.

அப்போது பல்லி வனத்துராஜா சேசவந்தன் என்கிறவன் முன்னே சோ அற்கானனுக்குச் சகாயம் பண்ணினதிலே இந்த ராஜா வருவதைக்கேட்டு பயந்து சிங்காரபுரத்து சூரிய ராஜாவுக்கு சரணமாய்போனான். அந்த சூரிய ராஜாவும் இவனை ரெட்சித்தான். அப்போது சிவாஜி ராஜா அவர்கள் இந்த சூரிய ராஜா சேசவனத்தன் இவர்கள் இரண்டும் முன்னே அபகாரம் பண்ணினதை எண்ணாமலிருந்தார். அதன் பிறகு அந்த தாலப்பிய

புரத்திலே இரண்டாயிரம் ஜனத்தையும் ஒரு சர்தாரையும் வைத்துவிட்டுப் போகும்போது சிறிது தேசத்து ஜனங்கள் சரணமாய் வந்தவருக்கு அபயத்தைக் கொடுத்து சித்திர புலினம் என்கிற நகரத்துக்குப்போய் அங்கே பரசுராமனுடைய தரிசனம் பண்ணி அங்கிருக்கும் பிராமணர்களுக்கு தானதர்மங்கள் கொடுத்து அங்கிருந்து சங்கமேசுவர நகரத்திற்கு வந்து அதையுங் கைவசம் பண்ணிக்கொண்டு அங்கிருக்கும் பிராமணர்களுடைய தரிசனம் பண்ணிக் கொண்டு தேவரிஷி என்கிற ஸ்தலத்திற்கு வந்தார்.

அப்போது ராஜாவினுடைய உத்தரவுமேல் நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை, பின்னையும் ஒரு பிராமண சர்தார் மல்லசுான் இவர்கள் சிறிது கால் பலத்தோடு யுத்தத்திலே சமர்த்தராயிருக்கப்பட்டவர் தானாசித்தன் என்கிறவனோடுகூட சத்துருக்கள் பயத்தினாலே காபிரிப் பட்டு சங்கமேசுவர பட்டணத்துக்கு வந்துசேர்ந்தார்கள். அவர்களை அங்கே வைத்து அதன் பிறகு சிங்காரபுரத்து சூரிய ராஜாவுக்கு சிவாஜிராஜா தன் ஏசிப்போடு சொல்லி அனுப்பி வைத்தது, இந்த பிராந்தியத்திலே ரெட்சிப்பதற்கு சிறிது சேனையை சங்கமேசுவர பட்டணத்திலே வைத்திருக்கிறோம், நீர் நம்முடைய பேச்சை கேட்டுக் கொண்டு திரேஷத்தை விட்டு விட்டு நான் திரும்பி வருர்வரை அந்த சேனையை ரெட்சித்துக்கொண்டிருக்கச் சொல்லி அனுப்பிவைத்து அதன் பிறகு புன்னாக விருட்சம், [1]மதுளவிருட்சம், கமுக மரங்கள், தென்னை மரங்கள். சிங்காரத் தோட்டங்கள், தேவாலயங்கள், வெகு பிராமணர்கள் நிறைந்திருக்கப்பட்ட ராஜபுரத்தை சுவாதீனம் பண்ணிக்கொண்டு அங்கேயிருக்கப்பட்ட துலுக்களை எல்லாம் சிட்சை பண்ணி அந்த தேசமெல்லாம் வாங்கிக் கொண்டு தனக்கு சரணமாக வந்தபேருக்கெல்லாம் அபயங்கொடுத்து அந்த தேசம் சமுத்திரக் கரையான படியினாலே கப்பல் வியாபாரம் பண்ணும் வர்த்தகர்

1. மகிழமரம்

ளிடம் வெகு திரவியங்களை வாங்கிக்கொண்டு குபேரன் போல் தனவந்தனாய் தேவேந்திரன்போல் ஐசுவரியவனத்த னாய் விளங்கினான்.

## முப்பதாம் அத்தியாயம்

அந்த ராஜ புரத்திலேயிருந்து கொண்டு வெகு சமத்காரமாய் பீரங்கிகள் சுடுகிற கரைத் துறையிலே யிருக்கப்பட்ட வெள்ளைக்காரரைக்கொண்டு அந்த வேடிக் கைகள் பார்த்துக்கொண்டும் சோனகரைக்கொண்டு சமுத்திரத்திலே கப்பலோட்டச்சொல்லி அந்த வேடிக்கை களையும் பார்த்துக்கொண்டு அதன் பிறகு மலைவார தீபாந்தரங்களிலே யிருக்கப்பட்ட கப்பல் வியாபாரம் பண்ணுகிற வர்த்தகர்களையும் அங்கே [1]சாமந்தனா யிருக்கப்பட்டச் சத்துரு ராஜாக்களையும் அழைத்தனுப்பி அவரவரிடம் இருக்கும் திரவியங்களை அழைப்பித்து எல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டார்.

ராஜபுரத்திலே பூமியிலே புதைத்திருந்த [2]மோறாக்கள் நிறைந்திருக்கும் அண்டாக்கள் அகப்பட்டு அதையெல்லாம் வெட்டியெடுத்து அஞ்சனம் போட்டு பார்த்தாலெப்படி யோ அப்படி ராஜாவினுடைய பார்வை எங்கெங்குப் போ கிறதோ அங்கெல்லாம் வெட்டிப்பார்தது எடுக்கச்சொல்லி மேருவுக்குச் சமானமாய் சொர்ண ராசிகள் போட்டு அவரவர்கள் கொண்டுவந்த [3]தோப்பாக்கள், நவரத்தினங் கள். பொன், வெள்ளி, செம்பு, பித்தளை, எஃகு, இரும்பு. முத்துக்கள், யானைத்தந்தங்கள் சாமரங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ. பச்சைக்கற்பூரம்! கிருஷ்ணாகெரு, ரத்த சந்தனம், ஏலம், லவங்கம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொடிமுந்திரி. பேரிச்சு, அச்சுப்பாக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், மிளகு இதுமுதலான பலசரக்கு சாமான்கள்

---

1. சிற்றரசர் 2. மோறா-பொற்காசு,

3. ஒருவகை பீரங்கி போலும்

யன்னென்ன உண்டோ அவைகளும் இது தவிர உயர்வா யிருக்கப்பட்டத் தாப்த்தாக்கள். சால்வைகள், வஸ்திரங் கள், பேட்டிக்கு வந்த சாமான்களெல்லாம் ஆட்கள் மேலும், ஒட்டையின் மேலும், யானைகள். மேலும் எடுப்பித்துக்கொண்டு வந்து அந்தந்த கெடிகளிலே சேர்த்து விட்டார்.

சடவல்லி, நாந்தவாடே, குனத்தவாட்டம், கேலவல்லி, கசலி. பிலவ வடம், சராபட்டணம் முதலான பட்டணங் களுடைய ராஜாக்கள் கொண்டுவந்த தோப்பாக்கள் வாங்கிக்கொண்டு அவர்களையெல்லாம் கைவசம் பண்ணிக் கொண்டு பிரதாபத்துடனே தன்னுடைய ராஜ்யத்திற்கு போகவேண்டுமென்று திரும்பினார் என்று கவீந்திரர் சொன்னதைக்கேட்டு பிராமணர் கேட்டது சிவாஜி ராஜாதுலுக்கனுடையசேனையைத்துரத்திவிட்டு தாலப்பிய புரம் வாங்கிக்கொண்டு சித்ரபுலினம் சுவாதீனம் பண்ணிக் கொண்டு பிரயாசைப் படாமல் சங்கமேசுவர நகரமும் வாங்கிக் கொண்டு ராஜபுரத்திலேயும் பாதாளம் வரைக்கும் வெட்டியிருக்கிற தனத்தையும் எடுத்துக் கொண்டு அந்தப் பிராந்தியத்திலேயிருக்கப்பட்ட பேர் களிடம் தோப்பாக்களும் வாங்கிக்கொண்டு அந்தத் தேச மெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்ட சேதி யெதிலிஷா கேட்டு என்ன பண்ணினார். அது சொல்ல வேண்டு மென்று கேட்டார்.

அதற்குக் கவீந்திரர் சொன்னது எதிலிஷா யோசனை பண்ணிக்கொண்டு சிங்காரபுரத்துச் சூரியராஜாவுக்குச் சொல்லி அனுப்பினது. நம்முடைய சத்துரு சிவாஜி ராஜா வெகு கடினமாயிருக்கப்பட்ட உன்னுடைய காட்டிலேயிருந்து ராஜபுரத்துக்குப் போகும்போது நீ மறியாமல் விட்டு விட்டாய், நல்லது. இப்போவானாலும் ராஜபுரத்திலேயிருந்து திரும்பி வரும்போது மறிக்கச் சொல்லி வெகு விசனத்தோடு சொல்லி அனுப்பிவைத்தா

ரென்று கவீந்திரர் சொன்னார். அதற்குப் பிராமணர் கேட்டது.

எதிலிஷா தன்னிடம் சேனாபதிகள் இருக்கும்போது அவர்களுக்குச் சொல்லாமல் இந்தக் காரியம் சூரிய ராஜாவுக்கு எது நிமித்தியமாய் சொல்லியனுப்பி வைத்தாரென்று கேட்டார். அதற்கு கவீந்திரர் சொன்னது முன்னே ருஸ்த்தும் முதலான ராஜாக்கள் சிவாஜி ராஜாவினாலே அபஜெயப்பட்டு வந்தபடியினாலே திரும்பி அவர் மேலே போகமாட்டாரென்று இந்தச் சூரிய ராஜா கால்பலத்தை மிகவும் வைத்துக்கொண்டிருக்கிறான். இந்தக்காரியத்துக்கு அவன் சமர்த்தனென்று அவனுக்குச் சொல்லியனுப்பி வைத்தானென்று கவீந்திரர் சொன்னார்.

அதன் பிறகு எதிலிஷாவினுடைய உத்தாரப்படிக்குச் சூரிய ராஜா துற்புத்தியினாலே சிவாஜி ராஜா அவர்கள் இந்தக் காட்டு வழி வெகு கடினமாயிருக்கிறது. தாராளமாயிருக்கவேண்டுமென்று சங்கமேசுவர நகரத்திலே சிறிது சேனையை வைத்திருந்தாரே அந்தச் சேனையைச் சூரிய ராஜா சிறிது ஜனங்களோடு ராத்திரியிலே போய் சுற்றிக் கொண்டார். அப்போது சிவாஜி ராஜா பாரிசத்து, தானசித்து முதலான சர்தாா எல்லோரும் காஜனைகள் பண்ணிக்கொண்டு ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு மூஸ்தீப்பானார்கள். அதிலே நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை பிலாச என்கிறவன் தன்னுடைய துரதிருஷ்டத்தினாலே சூரிய ராஜாவுக்கு ஜெயம் வரவேண்டுமென்று தான் யுத்தம் பண்ணாமல் ஓடிப்போக வேண்டுமென்று நினைத்துக்கொண்டு கையிலிருக்கப்பட்ட கத்தியைப் போட்டுவிட்டு நடுங்கிக்கொண்டு பயந்தவனைப்போல ஓடத்தலைப்பட்டான். அப்போது மல்லசுரன் என்கிறவன் தொடர்ந்து அவனை அடித்து அதட்டி உனக்கு நான் சகாயமாயிருக்கிறேன். நீ சேனாபதியாயிருந்து முன்னே வெகு சாமர்த்தியம் பேசினாயே! அதெல்லாம் இப்போது எங்கே போயிற்று. சிவாஜி ராஜா உன் மனப்போல்

உன்னை சவரட்சணை பண்ணியிருக்கும்போது சேனாபதியாயிருந்து கொண்டு நாம் சகியாதவர்களாயிருக்கப்பட்ட பேரை விட்டு விட்டு சத்துருவுக்கு ஜெயம் வரவேண்டுமென்று ஓடுகிறாயா இது ஆச்சரியமல்லவோ ! உனக்கு எப்படி வெட்கமில்லாமல் போய்விட்டது, என்று அவனைக் கயிற்றினாலே காலும் கையும் கட்டி பெரிய கல்லுக்கு இழுத்துக் கட்டிப்போட்டு தனக்கு எதிரே வைத்துக் கொண்டு சூரர்களைப் பார்த்துப் பயப்படாதீர்களென்று சொல்லி, தான் கையிலே பட்டாகத்தி யெடுத்துக்கொண்டு தானசித்து என்கிறவனும் மல்லசூரன் என்கிறவனும் ராத்திரி வேளையிலே எதிரியினுடைய பாளயத்திலே புகுந்து அடிக்கத்தலைப் பட்டார்கள்.

சிவாஜியினுடைய ஜனங்களெல்லோரும் எதிரியினுடைய ஜனங்களை அடிக்கும்போது அடே ஓடிப்போகாதீர்கள், நில்லுங்கள். இதோ கத்தியினாலே வெட்டுகிறேன். பாருங்கள், அடி அடி, பிடி பிடி, என்று இப்படியாய் சொல்லிக்கொண்டு சண்டை பண்ணுகிறபோது கை போனவனும் கால் போனவனும், தலை போனவனும் இப்படியாய் ரெணகளம் நிறைந்து போயிற்று. அப்போது சூரியராஜ பாரிசத்து ஜனங்களெல்லோரும் ஓடிப்போனார்கள். அதன் பிறகு மல்லீசுரன் ஜெயபேரிகையடிக்கச் சொல்லிச் சிம்மனாதம் பண்ணினான்.

## முப்பத்தி ஒன்றாம் அத்தியாயம்

அதன் பிறகு சிவாஜி ராஜா ராஜபுரத்திலேயிருந்து புறப்பட்டுச் சங்கமேசுவர நகரத்துக்கு வருகிறாரென்று சேதிகேட்டு மல்லசுரன் சேனையோடுகூட எதிரேபோய் உங்களுடைய தயவினாலே சத்துருவுடைய சேனையெல்லாம் அடித்து ஜெயித்தேன் என்று நீலகண்ட ராஜாவினுடைய பிள்ளை சேதியும் சொல்லி ராஜாவுக்கு நமஸ்காரத்தைப் 'பண்ணினான் அப்படிப்பட்டவனைப் பார்த்து வெகு சந்தோஷப்பட்டு வெகுமானங்களைப் பண்ணினான்.

அதற்குமேல் சூரிய ராஜா பண்ணின அபகாரத்தைக் கேட்டு ராஜாவுக்கு வெகுகோபம் வந்தது. அந்தக் கோபத்தை அடக்கிக்கொண்டு அரிக்காரன் உடனே சிறிது சமாசாரங்கள் சொல்லி சூரிய ராஜாவிடம் அனுப்பிவைத்தார். அவன்போய் சொன்னசேதி என்னவென்றால் எப்போதுபார்த்தாலுச் எதிலிஷாவுக்கும் சகாயம் பண்ணினாய். சிவாஜி ராஜாவுக்கு அபகாரத்தைப் பண்ணினாய். நல்லது இப்போது சங்கமேசுரத்திலே வைத்திருந்த சேனையைப் பயமில்லாமல் இராத்திரிவேளையில் வந்து விழுந்து அடித்தாய். இப்படி பண்ணின அபகாரத்தை எப்படிச் சகிப்பர். ஆனால் உன்னுடைய யோகத்தினாலே எல்லாம் ஜெயித்து உன்மேலே தயவு பண்ணினார். அது என்னவென்று சொல்லுகிறேன்.

மதம்பிடித்த யானையைப்போல் மகா பராக்கிரமத்தோடு இருக்கப்பட்ட ராஜா பல்லிவனத்து ராஜாவினுடைய ராஜ்யம் வாங்குவதற்கு சித்தமாயிருக்கிறார். ஆகையினால் நீ பயப்படாமல் பல்லிவனத்துக்கு வந்துசேர். உனக்கு என்ன பரவசம் வேண்டுமோ, அந்தப் பரவசத்தைத் தருகிறேன். நீ வராதுபோனால் அவனைப்போலே உன்னையும் பண்ணுவேன். அப்போது உன்னை ஒருவரும் ரெட்சிக்கமாட்டார்கள் என்று இவ்விதம் ராஜா சொல்லச் சொன்னாரென்று சொன்னான். அந்தச் சேதி கேட்டு அந்த அரிக்காரனை நீ முன்னே போ; நான் வருகிறேனென்று சேதி சொல் என்று சொல்லி அனுப்பிவைத்தான். அவன் வந்து ராஜாவுக்குச் சேதி சொன்னான்.

அதற்குமேல் பல்லிவனம் தேசமெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டுயாருக்கு எந்த தயவு பண்ண வேண்டுமோ அந்தத் தயவு பண்ணி யாரை சிட்சிக்க வேண்டுமோ அப்படிச் சிட்சைஷ பண்ணி அந்த தேசத்திலே யிருக்கப்பட்ட பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர், வியாபாரிகள், வர்த்தகர், தச்சன், கொல்லன் முதலான பேர்களெல்லாம் பயத்தினாலே ஊரைவிட்டு ஓடிப்போய்

இருந்தவர்களெல்லோரும் திரும்பி தத்தம் ஊருக்கு வந்து சேர்ந்து அவரவர் முன்னைப்பார்க்க அதிக ஆதாயத்தை அடைந்து சுழ்தோஷமாயிருந்தார்கள்.

அதற்குமேல் அவர்களையெல்லாம் ரெட்சிக்கவேண்டிய யோக்கியமாயிருக்கப்பட்ட சீர் துருக்கமென்று ஒரு பெரிய பர்வதம்; அந்த மலைமேலே கல்தச்சரைவிட்டு மிக உயரமான கோட்டையைக் கட்டி அந்தப் பிராந்தியத்திற்கு பூஷணமாயிருக்கப்பட்டதென்று அந்தக் கோட்டைக்கு மண்டனகெடி என்று பெயர்வைத்து, அந்தத் துருக்கம் ரெட்சிப்பதற்கு சமர்த்தனாய் ஒரு அதிகாரியையும் சிறிது சேனையையும் வைத்துவிட்டு அதற்குமேல் சூரியராஜா வினுடைய சிங்காரபுரம் வாங்கவேண்டுமென்று புறப் பட்டாரென்று கவீந்திரர் சொன்னதைப் பிராமணர் கேட்டு அவர் கேட்டது, முன்னேதானே அந்த சிங்காரபுரத்தை வாங்கலாமே, அப்படி வாங்காமல் வெகு தயவு பண்ணி சூரியராஜாவுக்கு அபயத்தைக் கொடுக்கிறோமென்று எந்தக் காரணத்தினாலே சொல்லி அனுப்பிவைத்தார்.

அது சொல்லவேண்டுமென்று கேட்டதற்கு கவீந்திரர் சொன்னது; முன்னே சிவாஜிராஜா ஜெயவல்லி என்கிற நகரத்தை வாங்கினவுடனே ஈசுவரனாயிருக்கப்பட்ட சிவாஜி ராஜாவுக்கு இந்தச் சூரியராஜா தன்னுடைய ராஜ் யத்தைத் தன்னுடைய சுவாதீனமாயிருக்கவேண்டுமென்று யோசனை பண்ணி நான் உமக்கு விலைக்கு வாங்கின பிள்ளையாக்கும். உம்முடைய குலாமனென்று காகிதம் எழுதி அனுப்பிவைத்தான். அதனாலே அன்றையமுதற் கொண்டு நமக்குச் சரணமாய் அடைந்தவனென்று அவனைக்காப்பாற்றிக்கொண்டுவந்தார். அவனும் ராஜா வினுடைய சேனைக்குச் சிறிது இடங்களிலே சகாயமும் பண்ணிக்கொண்டு வந்தான்.

அதற்குமேல் கிரஹசாரத்தினாலே துற்புத்தி தோன்றி வெகு கடினமாயிருக்கப்பட்ட காட்டிலே இருக்கிறோ

மென்று கர்வத்தினாலே சத்துருவாயிருக்கப்பட்ட எதிலிஷாவுக்குக் கண்டும் காணாமலும் சகாயத்தைப் பண்ணிக்கொண்டு வந்தான். அப்படிப்பட்ட அபராதங்களைப் பண்ணினாலும் முன்னே நமக்கு சரணமாய் வந்தவனுக்கு நாம் பிடிக்கலாகாதென்று அவன் மேலே போகவில்லை. எப்போது மரியாதையோடு மனிதனைவிட்டு அழைத்தனுப்பியதற்கு வராமல் இருந்தபடியினாலே ராஜாவுக்குக் கோபம் வந்து பதினையாயிரம் காலாட்கள் ஜனத்தோடு தான் பல்லங்கிலே உட்கார்ந்து கொண்டு சாற்வர் என்கிற புரத்துக்கு வந்து சிங்காரபுரத்துக்குச் சமீபமாய் போகும்போது ராஜா வரும் சேதி சூரியராஜா கேட்டு விசனத்தோடு தனக்குச் சகியாளாயிருக்கப்பட்ட பேரை அழைத்துச் சொன்னது; மகாபாகுவாயிருக்கப்பட்ட சிவாஜிராஜா இந்தச் சிங்காரபுரம் வாங்கவேண்டுமென்று சமீபத்திலே வந்துவிட்டார். அவர் மகாபராக்கிரமியாயிருக்கப் பட்டவர். அவரோடு நாம் யுத்தம் பண்ணமாட்டோம் என்று யோசனைபண்ணி ஓடிப் போய்விட்டானென்று கவீந்திரர் சொன்னதைக்கேட்டு பிராமணர் கேட்டது; மகாசூரனாயிருக்க யுத்தத்திலேயும் சமர்த்தனாயிருக்க சைய பர்வதம் வரைக்கும் அவனுடைய ஆக்ஞைகள் நடந்துகொண்டிருக்க பூர்வமாயிருக்கப்பட்ட சிம்மாசனத்தை அடைந்திருக்க சமுத்திரம் வரைக்கும் சுவாதீனமாயிருக்க தலைமுறை தலைமுறையாய் சூரராயிருக்கப்பட்டச் சேனையோடு ஒருவராலும் ஜெயிக்கப் படாமல் சாத்திர தர்மம் தெரிந்தவனாயிருக்கப்பட்டவன் சிவாஜி ராஜாவோடு ஏன் சண்டை போடவில்லை என்று கேட்டான்.

அதற்குக் கவீந்திரர் சொன்னது : சிவாஜிராஜா சங்கமேசுவர நகரத்திலிருந்து பல்லிவனத்துக்குப் போகும் போது அப்போது புத்தியீனனாயிருக்கப்பட்ட சூரியராஜா சிம்மத்துக்குச் சமானமாய் சூரர்களாயிருக்கப்பட்ட தன்னுடைய சேனாபதிகளை அழைத்து வைத்துக்கொண்டிருந்தான். அப்போது யுத்தம் பிரசங்கம் வரவில்லை

யென்று தன்னுடைய சேனாபதிகளை அழைத்து வைத்துக் கொண்டிருந்தான். அப்போது யுத்தப் பிரசங்கம் வரவில்லையென்று தன்னுடைய சேனாபதிகளுக்கு உத்தாரம் கொடுத்து அவரவர் ஊருக்குப் போகச் சொன்னார். இப்போது இருந்தாற்போலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் சிவாஜிராஜா வந்தபடியினாலே தன்னுடைய சேனாபதிகளை அழைப்பதற்கு முடியாமல் போன படியினாலே வெகு விசனத்தோடு யுத்தம் பண்ணாமல் ஓடிப்போய்விட்டான்.

## முப்பத்தி இரண்டாம் அத்தியாயம்

அவன் ஓடிப்போன சேதி ராஜா கேட்டு வெகு அசக்கியமாயிருக்க, காட்டிலே பிரவேசித்து சிங்கார புரத்துக்கு வந்து ஒருவராலும் ஜெயிக்கப்படாமல் இருக்கப் பட்ட நகரத்தைப் பார்த்து அவனுடைய சிம்மாசனத்தையும் காலாலே மிதித்து சூரியராஜா ஓடிப்போனான். பார்த்தாயா கையிலே அகப்படவில்லையென்று எண்ணிக் கொண்டு அதற்குமேல் அந்த நகரத்து ஜனங்களுக்கெல்லாம் அபயத்தைக் கொடுத்தார். ஓடிப்போன ஜனங்களெல்லோரும் திரும்ப வந்து எப்போதும்போல் சுகமாயிருந்தார்கள். அதன் பிறகு அந்த ராஜ்யத்தை திரும்ப பாஸ்கரனுக்குக் கொடுத்துக் காத்து நாளான படியினாலே சிவாஜிராஜா அந்த சிங்காரத்திலே தானே யிருந்தாரென்று புத்திமனத்தராயிருக்கப்பட்ட பிராமணருக்கு கவீந்திரர் சொன்னார். [1]

1. இதற்கு மேல் தொடர்ச்சி வடமொழியிலும் தமிழாக்கத்திலும் கிடைக்கவில்லை.

# பிழை திருத்தம்

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 6 | understading | understanding |
| | 8 | pased | based |
| | 28 | far | for |
| v | 7 | மராத்திப | மராத்திய |
| | 18 | நிலைத்திருக்ரும் | நிலைத்திருக்கும் |
| vi | 27 | வருணனனை | வருணனை |
| viii | 3 | ஊக்கமுட்டியும் | ஊக்க முட்டியும் |
| 1 | 21 | Manuscaipt | Manuscript |
| 2 | 20 | பிரசாதத்தினோலே | பிரசாதத்தினாலே |
| | 25 | அந்பு | அந்த |
| 4 | 22 | உமாபயீ | உமாபாயீ |
| | 30 | பண்ணிவைத்துக | பண்ணிவைத்துக் |
| 5 | 25 | நிஜாம்ஷர் | நிஜாம்ஷா |
| 6 | 9 | கப்ர்பிணி | கர்ப்பிணி |
| 7 | 2 | ஷ ஜி | ஷாஜி |
| | 4 | சுக்கிலபட்சக்திலே | சுக்கிலபட்சத்திலே |
| | 10 | நாமகர்மங்கள | நாமகர்மங்கள் |
| 10 | 9 | ஐாதி | ஜாதி |
| | 11 | சழுத்தும் | கழுத்தும் |
| 11 | 6 | தன்னுடையே | தன்னுடைய |
| | 10 | எப்புடி | எப்படி |
| | 11 | பீஷ்மாக்சாரியார் | பீஷ்மாச் சாரியார் |
| | 12 | இாண | இரண |
| | 15 | விட்டால் | விட்டல் |
| | 20 | ஸைம்பாஜி | ஸம்பாஜி |
| | 22 | த்ரிம்பர்ஜி | த்ரிம்பக்ஜி |
| 12 | 1 | அவாகளுடைய | அவர்களுடைய |
| | 28 | தத்தவாமா | தத்தவர்மா |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 29 | அடித்துத | அடித்துத் |
| 13 | 2 | கத்தியினலேயும் | கத்தியினாலேயும் |
| | 5 | தத்துவாமா | தத்தவர்மா |
| | 6 | முன்னேவந்து | முன்னேவந்து |
| | 11 | ைம்பாஜி | ஸம்பாஜி |
| | 14 | ணம்பாஜி | ஸம்பாஜி |
| | 23 | கழுததறுந்து | கழுத்தறுந்து |
| 14 | 6 | தூத்தி | துரத்தி |
| | 22 | விசன்மாய் | விசனமாய் |
| | 27 | அடக்கமேண்டுமெனறு | அடக்கவேண்டுமென்று |
| 15 | 6 | ஆசார் பிடிததுக் | ஆசார்பிடித்துக் |
| | 7 | ஷாவினுடைய | ஷாவினுடைய |
| | 20 | அகமத்தான் | அகமத் கான் |
| | 28 | ஸஜான்கான் | ஸுஜான்கான் |
| | 30 | பிள்ளை கள் ஏகோஜி | பிள்ளைகள் ஏகோஜி |
| | 31 | சாதார் | சர்தார் |
| 16 | 2 | ஷ்கர்கானனையும் | லஷ்கர்கானனையும் |
| | 6 | இப்ரஹிம்கானுனடய | இப்ரஹிம்கானுடைய |
| | 17 | சூரா | சூரர் |
| 17 | 1 | நிாவாக | நிர்வாக |
| | 7 | கரபோஜி | சரபோஜி |
| | 13 | ஷாஷி | ஷாஜி |
| | 23 | இப்படியிரூக்கும் | இப்படியிருக்கும் |
| 18 | 8 | சம்மதமிலலாமல் | சம்மதமில்லாமல் |
| 19 | 1 | இப்படியுருக்கும் | இப்படியிருக்கும் |
| | 11 | மாகாதேவரைக் | மகாதேவரைக் |
| 21 | 21 | மாவிஷ்ணு | மகாவிஷ்ணு |
| 22 | 1 | சொப்பனத்திலே் | சொப்பனத்திலே |
| | 7 | விஷணு | விஷ்ணு |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 9 | சின்னங்ம்ளுடைத் | சின்னங்களுடைத் |
| | 19 | கேட்கவேண்டுப் | கேட்கவேண்டும் |
| 23 | 1 | சாம்ராஸயமும் | சாம்ராஜ்யமும் |
| | 1 | போகிறப | போகிறா |
| | 8 | பரர்த்து | பார்த்து |
| | 10 | கத்திலேயுப் | கத்திலேயும் |
| | 20 | சோந்தார்கள் | சேர்ந்தார்கள் |
| | 32 | துஷடி | துஷ்டி |
| 24 | 3 | அந்தச் | அந்தக் |
| | 10 | மூர்த்திகரித்துக் கொண்டு | மூர்த்திகரித்துக் கொண்டு |
| | 15 | புரோசிதன் | புரோகிதன் |
| | 17 | பண்ணினான | பண்ணினான் |
| 25 | 32 | பராக்கியம | பராக்கிரம |
| | 33 | பிரமாணர்கள் | பிரமணர்கள் |
| 26 | 6 | சவரட்சனை | சவரட்சணை |
| | 24 | சஞ்சரிக்கப்பட்டப் | சஞ்சரிக்கப்பட்டப் |
| 27 | 14 | கொண்டிருசுகிற | கொண்டிருக்கிற |
| | 15 | தாயாா | தாயார் |
| | 26 | என்னவொன்றால் | என்னவென்றால் |
| 28 | 16 | விகவாச | விசுவாச |
| | 17 | சிவபக்தான் | சிவபக்தன் |
| | 22 | நிச்சயும் | நிச்சயம் |
| | 24 | பெண்ணனக் | பெண்ணைக் |
| 29 | 10 | காாணம் | காரணம் |
| | 13 | பலசாலியாயிருக்கப் பட்ட | பலசாலியாயிருக்கப் பட்ட |
| | 14 | டில்லீசுரனன் | டில்லீசுரனை |
| | 15 | யத்தத்துக்கு | யுத்தத்துக்கு |
| | 29 | என்றளது | என்றுளது |
| 30 | 1 | அஸமானம் | அவமானம் |
| | 8 | காதவராஜா | சாதவராஜா |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 19 | இபீபடி | இப்படி |
| | 25 | தாராகிரியிமேல் | தாராகிரியின் மேல் |
| | 31 | முறைத்துக்கொண்மெ | முறைத்துக் கொண்டு |
| 31 | 1 | செல்ல | சொல்ல |
| | 6 | துரத்தித்துரத்தித் | துரத்தித் துரத்தி |
| | 8 | பிராமணமர் | பிராமணர் |
| | 9 | சொல்சூறார் | சொல்கிறார் |
| | 11 | சவரட்சனை | சவரட்சணை |
| | 12 | பத்தேகான | பத்தேகான் |
| | 17 | ஷாஜிரரஜா | ஷாஜிராஜா |
| | 18 | கூட்டங்களெல்லரம் | கூட்டங்களெல்லாம் |
| | 22 | றண்ணத் | பண்ணத் |
| | 26 | ஆகிலிட்டது | ஆகிவிட்டது |
| 32 | 14 | ராஜாவினுடைன் | ராஜாவினுடன் |
| | 18 | காவாே, | காவாடே, |
| | 19 | களைடயெல்லாம் | களையெல்லாம் |
| 33 | 6 | நடககும் | நடக்கும் |
| | 8 | சமத்தில் | சமயத்தில் |
| | 20 | ஷ்ாஜி | ஷாஜி |
| | 21 | சவரட்சணை | சவரட்சணை |
| 34 | 23 | நாளுக்குநர்ள் | நாளுக்குநாள் |
| | 29 | பியா-ம் | பியாசம் |
| 35 | 5 | அதிசயமாயிருக்சிற | அதிசயமாயிருக்கிற |
| 36 | 25 | கவீந்திரா | கவீந்திரர் |
| | 26 | புஜடலத்தினாலே | புஜபலத்தினாலே |
| 37 | 2 | வார்ளோ | வார்களோ |
| | 3 | வீரபத்நிர | வீரபத்திர |
| | 12 | ரணகுல்லாகான் | ரணதுல்லாகான் |
| 38 | 2 | ஷாஜிராஜவும் | ஷாஜிராஜாவும் |
| | 4 | காரியங்களுச்கும் | காரியங்களுக்கும் |
| | 9 | உட்காாவைத்துத் | உட்காரவைத்துத் |
| | 10 | உட்கார்த்து | உட்கார்ந்து |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 20 | செளக்கியம் | சௌக்கியம் |
| | 22 | எஜமாவனுடைய | எஜமானனுடைய |
| | 26 | சந்தேரஷ்ப்பட்டால் | சந்தோஷப்பட்டால் |
| | 30 | காரீயத்தின்மேல் | காரியத்தின்மேல் |
| 39 | 6 | சந்தார் | சர்தார் |
| | 11 | என்னலென்றால் | என்னவென்றால் |
| | 18 | அடிசகுனங்கள் | அபசகுனங்கள் |
| | 26 | நவயத்து | நவபத்து |
| 40 | 2 | மானகிது | மானசிது |
| | 3 | புகுத்து | புகுந்து |
| | 9 | சீரர்த் தொபபி | சீராத் தொப்பி |
| | 22 | பாலாக்களியினாலே | பாலாக்களினாலே |
| | 32 | பெருத்தடிபோனிம் | பெருந் தடிபோலும் |
| 41 | 7 | அடிககும் போது | அடிக்கும் போது |
| | 14 | காஜித்துக் | கர்ஜித்துக் |
| 42 | 2 | ஆயுதங்கனை | ஆயுதங்களை |
| | 4 | சுற்றிக்கெண்டார்கள் | சுற்றிக்கொண்டார்கள் |
| | 13 | அப்பேசது | அப்போது |
| | 15 | பாஜிரரஜா | பாஜிராஜா |
| | 26 | ஷாஜு | ஷாஜி |
| 43 | 27 | முதலர்னவர்கள் | முதலானவர்கள் |
| 44 | 10 | சொன்ன்து | சொன்னது |
| | 23 | ஒருவரையும் | ஒருவரையும் |
| 45 | 1 | தலைப்பட்டரர்கள் | தலைப்பட்டார்கள் |
| | 3 | ஒருவருச் கொருவர் | ஒருவருக்கொருவர் |
| | 26 | கர்வதத்துடனே | கர்வத்துடனே |
| | 28 | ஓராபணரம் | ஓராபரணம் |
| 46 | 22 | பாணங்கனினா லேயும் | பாணங்களினாலேயும் |
| | 24 | முஸேகானு டையா | முஸேகானுடைய |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 47 | 3 | ஆச்சரியப் படடார் | ஆச்சரியப்பட்டார் |
| | 9 | துண்டசய் | துண்டாய் |
| | 13 | என்கிறவ | என்கிறவன் |
| 48 | 5 | இப்ராமுசாஷ்க்கு | இப்ராமுசாவுக்கு |
| | 8 | பண்ணீனாலும் | பண்ணினாலும் |
| | 16 | செம்பே | செய்போ |
| | 17 | நபமுடைய | நம்முடைய |
| 49 | 7 | உமகுத்தெரியுமே | உமக்குத் தெரியுமே |
| | 25 | நமங்கு | நமக்கு |
| | 31 | கொடுத்தனுப் பீனார் | கொடுத்தனுப்பினார் |
| | 32 | அனசியம் | அவசியம் |
| 50 | 4 | கனோ | களோ |
| | 6 | ராஜியத்துக்கு | ராஜ்யத்துக்கு |
| | 8 | ஆக்ஞானு காரமாய் | ஆக்ஞானுக்ரமாய் |
| | 8 | எதில்ஷாவுககு | எதில்ஷாவுக்கு |
| | 17 | சமர்த்ததியவா னென்று | சமர்த்தியவானென்று |
| | 30 | துதிக்கைக்குள்னே | துதிக்கைக்குள்ளே |
| 51 | 11 | யிருககிறது | யிருக்கிறது |
| 52 | 4 | இருப்பார் | இருப்பார் |
| | 20 | சத்துருககளுக்குப் | சத்துருக்களுக்குப் |
| | 21 | ஏமுக்குள்ளே | ஏழுக்குள்ளே |
| | 22 | முகல் | முகம் |
| | 25 | ஏமு | ஏழு |
| 53 | 21 | இருப்பது | இருப்பது |
| | 29 | கெடிகவிருக்கிறதே | கெடிகளிருக்கிறதோ |
| 54 | 1 | தஸனுடைய | தன்னுடைய |
| | 6 | நம்முள்ளய | நம்முடைய |
| | 7 | பேருக்கெல்லரம் | பேருக்கெல்லாம் |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 18 | இந்திரி | இந்திர |
| 55 | 2 | இருத்துவந்து | இருந்துவந்து |
| | 16 | ராஜாவினுடை | ராஜாவினுடைய |
| | 23 | அடித்து விட்ட தானால் | அடித்துவிட்டதனால் |
| | 27 | அல்லிஷ்ா | அல்லிஷா |
| 56 | 1 | சாமர்த்தியும் | சாமர்த்தியம் |
| | 7 | அய்சல்கான் | அப்சல்கான் |
| | 16 | அவனுகருச் | அவனுக்குச் |
| | 17 | பட்டரணி | பட்டாணி |
| | 17 | முலேகான் | முஸேகான் |
| | 18 | அங்குசலான் | அங்குசகான் |
| | 28 | மினனல் | மின்னல் |
| 57 | 10 | தோனறிற்று | தோன்றிற்று |
| 58 | 5 | எதில்க்ஷாவிடம் | எதில்ஷாவிடம் |
| 59 | 2 | ப்படி அப்பட்டம் | அப்படிப்பட்ட |
| | 17 | க்ஷத்திரியர் | க்ஷத்திரியர் |
| | 18 | ஸ்ரீ ராம் | ஸ்ரீராம |
| | 31 | பலததுடனே | பலத்துடனே |
| 60 | 12 | கலீயாணபுரம் | கல்யாணபுரம் |
| | 13 | ஷ்தலங்கள் | ஸ்தலங்கள் |
| | 29 | சிம்மக் கெடி | சிம்மக் கெடி |
| | 30 | சக்சிராவதிபுரி | சக்கிராவதிபுரி |
| 61 | 1 | அல்லீஷ்ா | அல்லீஷா |
| | 6 | சானுக்குப் | கானுக்குப் |
| | 14 | பதார்த்தங்க்களிருக் கிறதோ | பதார்த்தங்களிருக் கிறதோ |
| 62 | 8 | வேண்குயிருக்கிறது | வேண்டியிருக்கிறது |
| | 28 | க்ஷிணம் | க்ஷணம் |
| | 30 | கொடுப் பாா | கொடுப்பார் |
| 63 | 16 | நீயானல் | நீயானால் |
| | 27 | நிமிஷததிலே | நிமிஷத்திலே |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 64 | 11 | ராஜர | ராஜா |
| | 22 | அம்மானைப் | அம்மனைப் |
| 66 | 25 | கூட்ட்ங்கள் | கூட்டங்கள் |
| 71 | 26 | அம்சலாகானில்லாத | அப்சலாகானில்லாத |
| 72 | 12 | கத்திபிடிதுக் | கத்திபிடித்துக் |
| | 30 | கூட்டங்கனையும் | கூட்டங்களையும் |
| 73 | 17 | இதல்லரமல் | இதல்லாமல் |
| | 18 | கிவாஜிராஜா | சிவாஜிராஜா |
| 75 | 17 | சந்கனம | சந்தனம் |
| | 25 | ஆங்ஜெயம் | ஆல்ஜெயம் |
| | 28 | பரவுனாமகம் | பாவுனாமகம் |
| 77 | 4 | கொடியைச் | கெடியைச் |
| | 9 | பராகதுானனுடைய | பராதுகானனுடைய |
| | 10 | பேரன்ருளத்து | பேரன்ருஸத்து |
| | 13 | கூட்டங்க ளெவ்லாம் | கூட்டங்களெல்லாம் |
| | 15 | பனாளா | பனாளா கெடியை |
| | 22 | தனத்தைப் | தளத்தைப் |
| | 24 | தனம் | தளம் |
| 78 | 3 | உல்லாக் காண் | உல்லாக்கான் |
| | 10 | மூதமாய் | யூகமாய் |
| | 16 | பத்தேகானன | பத்தேகானை |
| | 18 | இரண்டும் | இரண்டு |
| | 25 | நடந்தாாகள் | நடந்தார்கள் |
| 79 | 7 | பாணங்க்ளினா வேயும் | பாணங்களினாலேயும் |
| | 17 | ருஸ்ததுமகானன் | ருஸ்த்துமகானன் |
| | 28 | ருஸ்ததுமகானுடைய | ருஸ்த்துமகானுடைய |
| | 32 | விட்டாாகள் | விட்டார்கள் |
| 80 | 15 | பிரஸ்த்தனம் | பிரஸ்த்தானம் |
| | 20 | ருஸ்து மகான் | ருஸ்த்து மகான் |
| | 21 | இரண்டுமேரும் | இரண்டுபேரும் |
| | 23 | இாணடு | இரண்டு |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| | 28 | பாயிசான் | மாயிகான் |
| 81 | 2 | சீழண்டேயும் | கீழண்டேயும் |
| | 5 | சோ அற்கானுக்கும் | சோ அற்கானுக்கும் |
| | 13 | சர்தகர்களையும் | சர்தார்களையும் |
| | 17 | பெரியவர்களா யிருக்கம்பட்ட | பெரியவர்களா யிருக்கப்பட்ட |
| | 22 | அல்லீஷா | அல்லீஷா |
| | 23 | கொள்ளனயடித்துப் | கொள்ளையடித்துப் |
| 82 | 11 | சத்துரூக்களை | சத்துருக்களை |
| | 13 | சேனை யுடன் | சேனையுடனே |
| | 20 | கொண்டிரூக் கிறார்கள் | கொண்டிருக் கிறார்கள் |
| 83 | 3 | மகாபலசாலியாய் | மகாபாகுசாலியாய் |
| | 4 | காப்பாற்றுகிற வாாயிக்கப்பட்ட | காப்பாற்றுகிற வராயிருக்கப்பட்ட |
| | 15 | பிகாரமாய் | பிரகாரமாய் |
| | 15 | அந்தச் | அந்தச்சேனாதிபதி |
| 85 | 2 | கப்பட்டதசர்தார் களை | கப்பட்டசர்தார்களை |
| | 19 | வெல்லமுடிவில்லை | வெல்லமுடியவில்லை |
| | 31 | பேதிச்சுககொண்டு | பேதிச்சுக்கொண்டு |
| 86 | 1 | இலவிதம் | இவ்விதம் |
| 87 | 1 | சமாசாரத்துக்கு | சமாசாரத்துக்கு |
| | 22 | சர்ஸ்த்தாகான் | சாஸ்த்தாகான் |
| 88 | 23 | பற்ச்சிகளிைாலேயும் | பர்ச்சிகளினாலேயும் |
| | 24 | எமலோசம் | எமலோகம் |
| | 25 | சோந்தார்கள் | சேர்ந்தார்கள் |
| 89 | 9 | புத்திரனைப் | புத்திரனைப் |
| | 13 | தேசங்களைக | தேசங்களைக் |
| 90 | 5 | கெடிச்குச் | கெடிக்குச் |
| | 30 | அம்மனுனட்ய | அம்மனுடைய |
| | 21 | கெடியிம் | கெடியும் |

| பக்க எண் | வரி எண் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 93 | 16 | பர்வததிலேயிருந்து | பர்வதத்திலேயிருந்து |
| | 18 | சேனனைசைய | சேனைசையப் |
| 95 | 16 | சொன்னாா | சொன்னார் |
| 97 | 20 | பேச்சைக் கேட்டுக் | பேச்சைக்கேட்டுக் |
| 98 | 18 | பாரிசத்த | பாரிசத்து |
| 101 | 6 | வெள்னைக்காரரைக் | வெள்ளைக்காரரைக் |
| | 26 | பேரிச்சு | பேரீச்சு |
| 103 | 20 | சர்தாா | சர்தார் |
| | 20 | காஜனைகள் | கர்ஜனைகள் |
| | 32 | மனப் போல் | மனம்போல் |
| 104 | 1 | பண்ணியுருக்கும் | பண்ணியிருக்கும் |
| | 6 | -ட்டி | கட்டி |
| | 13 | சிவாஜிவினுடைய | சிவாஜிராஜாவினுடைய |
| 105 | 6 | பார்த்தாலுச் | பார்த்தாலும் |
| | 6 | எதிலிஷாவுக்கும் | எதிலிஷாவுக்கு |
| 106 | 3 | கஜ்தோஷமாயிருந்தார்கள் | சந்தோஷமாயிருந்தார்கள் |
| | 27 | அவவைக்கரப்பாற்றிக் | அவனைக்காப்பாற்றிச் |
| 107 | 9 | பல்லங்கிலே | பல்லக்கிலே |
| 108 | 17 | அயயத்தைக் | அபயத்தைக் |